# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது


Volume - 8
Issue -9

செப்டம்பர் 2015 - துல்காயிதா 1436

விலை ரூ. 20




## அப்துல் கலாமின் மறுபக்கம்



## பௌத்தமா? இஸ்லாமா? - அ. மார்க்ஸ்

- கர்மவீரர் காமராஜரை கொலை செய்ய முயற்சித்தது யார்?
- வட இந்தியாவிலும் ஜாதித் தீ!
- கல்புர்கி கொலை . . . . அடுத்தது பகவான் . . .

# வைகறை வெளிச்சம்

செப்டம்பர் 2015 – துல்காயிதா – 1436

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது**

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Tel.: 044-25224887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts private circulation to promote the original issue


بسم الله الرحمن الرحيم


அப்துல் கலாமின் மறுபக்கம் ............................ 6

தீன் சுடர் டி.எம். உமர் பாரூக் ............................ 15

டி.எம். உமர் ஃபாரூக் : ஒரு தலீத் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும்! – புத்தக வெளியீடு ................ 18

ஒரு தலித் போராளியின் வரலாறு ............................ 20

பௌத்தமா? இஸ்லாமா? ............................ 22

இரகசிய சித்ரவதைக் கூடங்கள் ............................ 24

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்! ............................ 29

காந்தியாரைக் கொன்ற ‘கோட்சே’ கூட்டமே காமராஜரையும் குறிவைத்தது ............................ 32

கல்பர்கி சுட்டுக் கொல்லப்பட்டார்! அடுத்த இலக்கு பேராசிரியர் பகவான்! ............................ 36

மக்கத்து மக்களின் இன்னொரு குணம் ............................ 37

வட இந்தியாவிலும் ஜாதித் தீ ............................ 41

அயோத்தியில் இராமர் கோயில் பகுதியில் உச்சநீதிமன்றம் சீரமைப்பு என்ற பெயரில் அனுமதி! ............................ 47

எது முதலில்? ............................ 49

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? ..... 61

தரீக்குல்குர்ஆன் ............................ 64


**இறை நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வைக் கொண்டும், அவனுடைய தூதரைக் கொண்டும். அவனுடைய தூதரின் மீது அவன் இறக்கி வைத்த (இவ்) வேதத்தைக் கொண்டு. இதற்கு முன்னர் அவன் இறங்கி வைத்த வேதங்களைக் கொண்டு நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். எவரேனும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், மறுமை நாளையும் நிராகரிக்கிறாரோ, அவர் தூரமான வழி கேடாகத் திட்டமாக வழி கெட்டுவிட்டார்.**

**(அன்னிஸா வசனம் - 136)**

**http:/www.facebook.com / vaigaraivelicham**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# சசி பெருமாள்கள்

மதுவை ஒழிக்கும் போரில் சசிபெருமாள் தன் உயிரைத் தந்தார்கள்.

மதுவால் பல உயிர்கள் பலியான பின்னர் ஓர் உயிர் மது ஒழிப்பதற்குப் பலியானது. அதன்பின் மது ஒழிப்பு ஒரு பெரும் சர்சையானது. ஆளும் அதிமுக கட்சியைத் தவிர ஏனைய எல்லாக் கட்சிகளும், இந்தப் போராட்டத்தில் தங்களை முன்னிறுத்திக் கொண்டன.

சில கட்சிகள் முஸ்லிம்கள் நடத்தும் கட்சிகளும் மதுவை ஒழிக்க வேண்டும் என்பதைக் கொள்கையாகவே கொண்டுள்ளன.

சில முகவரி இல்லாத கட்சிகளும் அமைப்புகளும் தங்களுக்கு ஒரு முகவரியைத் தேடிக் கொண்டன, இந்த பிரச்சினையை வைத்து.

திராவிட இயக்கங்கள், இதில் ‘மது’வில் ஒட்டுமொத்தமாகத் தோற்றுப் போயின.

தோற்றுப் போனதோடு நில்லாமல், குடிப்பழக்கத்தை, ஜனரஞ்சகப்படுத்தி, மாணவர்கள், மாணவியர்கள், சிறுவர்கள் இவர்களெல்லாம் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகும் அலங்கோலத்தை அரங்கேற்றி விட்டனர். அத்தோடு சாராய ஆலைகளின் சொந்தக்காரர்களாகவும், குபேரர்களாகவும் வாழுகின்றனர். பகுத்தறிவு மதுவுக்கு முன் மண்டியிட்டது. நிலைமை எந்த அளவுக்கு மோசமாகி விட்டது என்றால் மதுவை ஒழித்தால் அந்தப் பழக்கத்தில் தோய்ந்து போனவர்கள், கண்டதை குடித்து தங்களை மாய்த்துக் கொள்வார்கள் என்ற அச்சம் மேலோங்குகின்றது. காரணம் அந்த அளவுக்கு இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிப் போனார்கள். கடந்த நாட்களில் உலகெங்கும் மதுவை வெறுத்தவர்கள் மதுவைத் தடுத்தவர்கள், எல்லாம் பின்னர் மதுக் கடைகளைத் திறந்துவிட்டதற்கு காரணம் கள்ளச் சாராயச் கதைதான்.

ஆமாம்! ஐரோப்பியர்களும், அமெரிக்காவும் தங்கள் குடிப்பழக்கத்திற்கு குளிரை ஒரு சாக்குப் போக்காகச் சொல்லுவார்கள். ஆனால் அவர்களே கூட மதுவை ஒரு கட்டத்தில் தடைசெய்திருந்தார்கள் என்பது வரலாறு. அந்த வரலாற்றை சற்றே தொட்டுக் காட்டுகின்றோம்.

ரஷ்யா 1914 முதல் 1925 வரை

அமெரிக்கா 1920 முதல் 1933 வரை

பிரின்ஸ் எட்வோர் தீவு - 1907 முதல் 1948 வரை

ஐஸ்லேந்து பூமி - 1914 முதல் 1922 வரை

1919 முதல் 1934 வரை ஹங்கேரி இப்படி மதுவை மக்களுக்கு அரசு மறுத்தக் காலக்கட்டங்கள் உலகெங்கும் உண்டு. பிற்றை நாள்களில் அவற்றைத் திறந்துவிட்டதற்குக் காரணம் மக்கள் கள்ளச்சாராயத்தை குடித்தார்கள் என்பதே!

இன்னொரு முக்கியமான காரணம், போதிய கொள்கைப் பலமில்லாமைதான். ஒரு பொருள், அது மனிதர்களுக்குத் தீங்குதான் பயக்கும் என்றால், அது எல்லா நிலையிலும் தீயதே எனப் பிரகடனப்படுத்திட வேண்டும் அதில் நிலைத்து நின்றிடவேண்டும்.

இந்தக் கொள்கையில் மனித நலம் நல்வாழ்வு இவையே நம்மை வழி நடத்திட வேண்டும். அல்லாமல் மதுவால் கிடைக்கும் இலாபமோ அல்லது அதைத் தடைசெய்வதால் ஏற்படும் இழப்புகளோ நம்மை வழிநடத்திட வேண்டாம்.

*இந்த கொள்கை பலத்தைக் கொண்ட ஒரே மார்க்கம் இஸ்லாம்தான். ஏனெனில் அது அல்லாஹ்வால் அனைத்தையும் படைத்த அல்லாஹ்வால் அருளப்பட்ட மார்க்கம். அவன் மனிதர்களின் நலனை மட்டுமே பார்ப்பவன். இலாப நஷ்ட கணக்குப் போடுபவன் அல்ல.*

*இந்த வகையில் உலகிலுள்ள எந்த மதமும் இஸ்லாத்தைப் போல் வெற்றி பெற்றதில்லை எனலாம்.*

*இஸ்லாம் ஆட்சி செய்யும் இடங்களில் மட்டுந்தான் எல்லா நிலைகளிலும் எல்லாக் காலங்களிலும் மதுவும் போதைப் பொருள்களும் அதுபோன்ற தீமைகளும், முற்றாக ஒழிக்க பட்டிருக்கின்றது. இஃதோர் கொள்கைப் பிரச்னை. அல்லாமல் அரசியல் பிரச்னை அல்ல.*

*இன்று கொடிபிடித்துக் கோஷம் போடும் கட்சிகள் எல்லாம், ஆட்சியிலிருந்தபோது, ஆட்சியில் அங்கம் வகிக்கும் வாய்ப்புக் கிடைத்தபோது இன்று கோஷம் போடுவதைப் போல் கோஷம் போடவில்லை. கொடிபிடிக்கவில்லை. ஏன் மதுவுக்கு எதிராகக் கனைத்துக் கூட காட்டிடவில்லை.*

*இனியும் ஆட்சிக்கு வந்தால் மதுவை தடை செய்வார்களா? என்பது ஐயத்திற்குரியதே!*

*எந்த நிலையிலும் 1400 ஆண்டுகளாக இஸ்லாம் மதுவுக்கு எல்லா நிலையிலும் தடை என நிலைக்கின்றது, நிற்கின்றது என்றால், அதற்கு காரணம் இறைவனின் வழிகாட்டுதல்தான். அந்த வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்டால் மட்டுமே மதுவை ஒழிக்க முடியும். மதுவுக்கும் போதைக்கும் அடிமையாவதிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்றிட முடியும். இந்தக் கொள்கையை இறைவனை ஏற்றுக் கொண்டால் மட்டுமே மதுவை மட்டுமல்ல, ஓரினச் சேர்க்கை போன்ற பல தீயவைகளை ஒழிக்க முடியும். மனித இனத்தில் இவை மீண்டும் என்றும் தலை தூக்கிடாமல் நிரந்தரமாக மண் மூடிப்போகச் செய்திட இயலும்.*

*ஆனால் இன்று சாதிப்பதற்கு அன்று அரபு மண்ணில் அண்ணல் எம் பெருமானார் (ஸல்) அவர்களும், அவர்களுடைய தோழர் பெருமக்களும், எதிர்கொண்ட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். எதிர்ப்புகளையும், இறப்புகளையும் எதிர் கொள்ள வேண்டும். எல்லாத் தியாகங்களையும், செய்ய வேண்டும். இன்று இது கடினமானது தான். ஆனால் முடியாததல்ல. எழுவோம் - மனித இனத்தைக் காப்போம். சசி பெருமாள்கள் இதனைக் கவனிக்கட்டும் இந்தப் பாதைக்கு வரட்டும்.*

**இறைவன் கூறுகின்றான்,**

**“நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுவையும் சதையும் கொண்டு உங்களிடையே பகையையும் வெறுப்பையும் ஏற்படுத்தி, அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடுவதுதான். எனவே அவற்றை விட்டு நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்”**

**(அல் குர்ஆன் அத்தியாயம் :5:90,91)**


*மனித இனத்திற்கு நேர் வழி எது என்பதைக் காட்டிட வந்த இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள்.*

*மானக் கேடான அனைத்துச் செயல்களுக்கும் தாய் மதுதான் (நூல் : தபரானி)*

*இன்னும் சொன்னார்கள், மதுவையும் அதைக் குடிப்பவனையும் ஊற்றிக் கொடுப்பவனையும், விற்பவனையும், வாங்குபவனையும், அதைப் பிழிந்து கேட்பவனையும் அதை வாகனங்களில் சுமந்து செய்பவனையும் யாரிடம் அது கொண்டு செல்லப்படுகின்றதோ அவனையும் அதன் வருமானத்தைத் திண்பவனையும் நான் சபிக்கின்றேன். (ஆதாரம் : அபூதாவூத்)*

*இந்த போதனைகளையும் அதனை வழங்கியவரையும் அழகிய முன் மாதிரியாகக் கொண்டு மதுவை ஒழிப்போம்.*

# அப்துல் கலாமின் மறுபக்கம்



**யா**ருமே எதிர்பார்த்திருக்காத செல்வாக்கைப் பெற்றிருந்தார் அவர்.

அவர் வாழ்ந்து கொண்டிருந்தபோது கூட யாரும் நினைத்திருக்க மாட்டார்கள் இப்படி ஓர் அங்கீகாரத்தை மக்கள் மன்றத்திலேயே அவர் பெற்றிருக்கிறார் என்று.

ஆம்! அவுல் பக்கீர் ஜைனுல் ஆபிதீன் அப்துல் கலாம் அவர்கள் மரணமடைந்த பின்னர்தான் தெரிந்தது மக்களின் நாயகனாக வாழ்ந்திருக்கிறார் என்பது.

தொலைக்காட்சிகளும், பத்திரிக்கை களும் கூட பொதுமக்கள் அவருக்குச் செலுத்திய அஞ்சலிகளைக் கண்ட பிறகுதான் அவர் மரணம் அடக்கம் குறித்த செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததாகத் தோன்று கிறது.

இந்திய ஊடகங்கள் எப்பொழுதுமே இந்தியர்களின் மனசாட்சியை பிரதிபலிப்ப தில்லை என்பதற்கு இது மற்றொரு சான்றாக விளங்குகிறது. ஆம்! அப்துல்கலாம் அவர்கள் தம் ஜீவிய காலத்தில் மக்களுடன் எப்படி யெல்லாம் ஐக்கியமாகியிருந்திருக்கிறார் என்பதை ஊடகங்களும் அவர் வாழும் போது சொன்னதில்லை.

ஊடகங்களின் வெளிச்சத்துக்காக அவர் மயங்குவதில்லை. விமர்சனங்களைக் கண்டு உடைந்தவருமல்ல.

தனக்கென ஒரு வழி. அதில் சலனப்படாமல் பயணித்தார். கடந்த கால வரலாறுகளை குறித்தோ நிகழ்கால அரசியல் நகர்வுகள் குறித்தோ அவர் அதிகம் பேசியதில்லை. எதிர் காலம் பற்றியே அதிகம் பேசினார். சிந்தித்தார். நாட்டின் வருங்காலம் பற்றி அதிகம் கவலைப்பட்டார்.

கிரிக்கெட் விளையாட்டில் இந்தியா ஜெயித்தால் ‘விசில்’ அடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நீ தேசத்துரோகி வெடி வெடிக்க வேண்டும். இல்லாவிட்டால் நீ பாகிஸ்தானின் கைக்கூலி என்று பால் தாக்கரே போன்ற பயங்கரவாதப் பிசாசுகள் பிதற்றிக் கொண்டிருந்த போது மெய்யான தேசப்பற்று எது என்பதை மாணவர்களிடமும் இளைஞர் களிடமும் பேசினார்.



“ஏவுகணை” , “மரம் நடுதல்”, “குழந்தைகள் மீது பாசம்”, “மரண தண்டனை ஒழிப்பு”, “சூரிய ஒளியில் மின்சார உற்பத்தி”, “நதிகள் இணைப்பு” எனப் பெரிய பெரிய விஷயங்களைப் பேசினார்.

ஒரு நாகரீகம் நிறைந்த நாட்டுக்கு இவையெல்லாம் அவசியம் என்றார். இவற்றை லட்சியமாகக் கொண்டு உழைப்பதே உண்மையான தேசப்பற்று என்பதை மக்களிடையே நிறுவினார்.

மதச்சார்பின்மையை தன் பாரம்பரியப் பெருமைகளில் ஒன்றாகக் கொண்ட இந்தியாவை இந்துத்துவ தேசமாக்க வாஜ்பேயி அரசு முயன்றது. அதன் ஒரு பகுதியாக **NCERT** வழியாக போலியான வரலாறுகளை பாடப்புத்தகத்தில் புகுத்தியது. முஸ்லிம் மன்னர்களைப் பற்றிய தப்புந்தவறுமான எண்ணங்களை பிஞ்சு நெஞ்சங்களிலே விதைக்க முயன்றது.

அந்தக் காலக்கட்டங்களிலும் அதற்குப் பின்னரும் பள்ளிக் கூடங்கள் தோறும் சென்ற அப்துல் கலாம் அவர்கள், இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு. மதச் சார்பின்மை இந்தியாவின் ஆன்மா என்று பேசினார். இதன் மூலம் இந்துத்துவாவை அண்ட விடாமல் அரண் அமைத்து, எதிர்காலத் தலைமுறையிடம் மத வெறி அணுகாமல் காத்தார்.

அவர் மீது இப்படி சிலர் குற்றஞ் சுமத்துவதுண்டு. அவர் வித்யா மந்திர் போன்ற உயர் ஜாதியினரின் பிள்ளைகள் பயிலும் பள்ளிக் கூடங்களுக்குத்தான் போனார். சிறுபான்மையினரோ, தலித்துகளோ பயிலும் பள்ளிகளுக்குப் போனதில்லை என்பார்கள்.

மதச் சார்பின்மை குறித்த பாடமும் உபதேசமும் தேவைப்படுவது உயர் ஜாதியினருக்குத்தான். சிறுபான்மை யினருக்கோ, தலித்களுக்கோ அல்ல என்று அவர் கருதியிருக்கலாம்.

அது மாத்திரமன்று எந்தப் பள்ளி வாசலுக்கும் மத்ரஸாக்களுக்கும் போய் அவர் முஸ்லிம்கள் தீவிரவாதச் செயலில் ஈடுபடக் கூடாது என்றெல்லாம் அவர் பிதற்றியதில்லை. ஏனென்றால் இந்தியாவில் நடக்கும் தீவிர வாதச் செயல்களுக்கு யார் காரணம் என்ற உண்மைகளை அவர் நிச்சயம் அறிந்திருப்பார்.

யார் தீவிரவாதச் செயல்களின் மூளையாக இருக்கிறார்களோ அவர்களிடம் மதச் சார்பின்மை குறித்துப் பாடம் நடத்தினார்.

ஒரு மதச்சார்பற்ற நாட்டின் குடியரசுத் தலைவர் என்ற முறையில் எல்லோருக்கும்

பொதுவானவராகத் தன்னை தகவமைத்துக் கொண்டார். தேவைப்படும் இடங்களில் மட்டும் "நான் ஒரு முஸ்லிம்" என்று சொன்னார்.

அதை ஒரு விளம்பரம் போல திரும்பத் திரும்பச் சொல்வதில் ஆர்வமில்லை அவருக்கு.

அதே நேரத்தில் முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் முஹம்மது ஹிதாயத்துல் லாஹ் (பதவிக்காலம் 20.8.1977 முதல் 20.08.1982) (இவர் இடைக்கால ஜனாதிபதியாக 20.7.1969 முதல் 24.08.1969 வரை இருந்தவர்) என்பவர் தாம் இறந்த பிறகு தம்மை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யக்கூடாது. எரிக்க வேண்டும் என்று கூறிவிட்டுத்தான் இறந்தார். அது போல அவர் எரிக்கப்பட்டார்.

இப்படியெல்லாம் செய்து தம்மை ஒரு மதச்சார்பற்ற தலைவர் என காட்டிக் கொள்ள முயன்றார். இப்படிப்பட்ட போலி மதச்சார்ப் பின்மையில் எல்லாம் நம்முடைய அப்துல் கலாம் அவர்களுக்கு உடன்பாடு இருந்த தில்லை.

அப்துல் கலாம் அவர்கள் ஐவேளை தவறாமல் தொழுது வந்தவர். குடியரசுத் தலைவராக இருந்த காலங்களில் தனது மாளிகையிலேயே தொழுதார் என்கிறார் அவருடைய உதவியாளர். (காண்க: தி நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ் 28.07.2015, 11வது பக்கம் கட்டுரை)

எங்கும் அவர் இஸ்லாத்தை விட்டுக் கொடுத்துப் பேசியதில்லை. ஒரு வித்யாமந்திர் பள்ளிக்கூட மாணவன் "நீங்கள் அசைவம் சாப்பிடுவீர்களா?" என்று கேட்டான். புகழின் உச்சத்தில் இருக்கும் ஒருவரிடம் இது போன்ற கேள்விகளை சிறுவயது மாணவன் தானாகக் கேட்பதில்லை. யாராவது ஓர் ஆசிரியர் (உயர் ஜாதிக்காரர்) எழுதிக் கொடுக்காமல் இப்படிக் கேட்க மாட்டான்.

உண்மையில் அப்துல் கலாம் சைவப் பிரியர். அசைவம் சாப்பிடுவதில்லை. இது தெரிந்தே தான் அச் சிறுவனை கேள்வி கேட்க வைத்தனர்.

அந்தக் கேள்விக்கு "இல்லை. சாப்பிடமாட்டேன்" என்று உண்மையைக் கூறினார் அப்துல் கலாம். மாணவன் விடவில்லை. திரும்பக் கேட்டான், "ஏன் அசைவம் சாப்பிடுவதில்லை?"

அது ஜீவகாருண்யத்துக்கு எதிரானது. உயிர் வதை என்றெல்லாம் அவர் காரணம் கூறுவார். அதை வைத்து புலால் உணவுக்கு எதிராக அவரையும் திருப்பி விடலாம் என்று நினைத்தனர் 'அவாள்'கள்.

ஆனால் அவர் இப்படிச் சொன்னார், "சிறுவயதில் வறுமையான சூழலில் வளர்ந்தவன் நான். இறைச்சி சாப்பிடும் அளவுக்கு எங்களிடம் வசதி இல்லை. அதனால் சைவம் சாப்பிட்டு வளர்ந்தேன். பின்னர் அதுவே பழக்கமாகிவிட்டது."

அவர் ஓர் அணுவிஞ்ஞானி என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அவர் சிறந்த சமூக விஞ்ஞானியாகவும் திகழ்ந்தார்.

ஒரு கோடி மரங்கள் நடுவது தன் லட்சியம் என்றார். இருபத்து நான்கு லட்சம் மரங்களை அவர் நட்டிருக்கிறார்.

"செயற்கை கோள் ஏவிய போது ஆனந்தம் அடைந்தேன். கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கு எடை குறைந்த செயற்கைக் கால்களை உருவாக்கிய போது பேரானந்தம் அடைந்தேன்" என்றார்.

தூக்கு தண்டனைக்கு எதிரான சிந்தனைகளைப் பரப்பிய அவர் தாம் குடியரசு தலைவராக இருந்த ஐந்தாண்டு காலத்தில் தன் முன் வந்த கருணை மனுக்களைப் பரிசீலித்து இருபத்தோரு தூக்கு தண்டனைக் கைதிகளை தூக்கு மேடையிலிருந்து மீட்டார்.

தூக்கு தண்டனையை ஏன் நீங்கள் எதிர்த்தீர்கள்? என்று அவரிடம் அவருடைய உதவியாளர் கேட்ட போது "தூக்கு மேடை வரை வந்துவிட்டவர்களையெல்லாம் நான் பார்த்து இருக்கிறேன் அவர்களெல்லாம் (Socially Economically Weaker Section) சமூக பொருளாதார தளத்தில் பலவீனமானவர் களாகவே இருக்கிறார்கள்" என்று கூறி யிருந்தார் (தொலைக்காட்சிப் பேட்டியில்)

அப்துல் கலாம் அவர்கள் எதையும் ஆழமாகப் பேசுபவர். ஆனால் அதிராமல் அமைதியாக நயமான வார்த்தைகளைக் கையாள்வார்.

Socially Economically Weaker Section என்ற சொல்லை மறுபடி படித்துப்பாருங்கள். இதன் பொருள் புரிகிறதா?

நம்முடைய வார்த்தைகளில் இதை இப்படி 'பளிச்'சென்று சொல்லாம்.

சுதந்திர இந்தியாவில் இதுவரை எந்த உயர் ஜாதிக்காரனும் பெரு முதலாளியும் தூக்கிலிடப்படவில்லை என்பதே இதன் பொருள்.

இப்படி ஒரு தெள்ளத் தெளிவான சமூகப் பார்வை அவருக்கு இருந்தது. இப்படி அவர் செய்த சமூக நன்மைகள் ஏராளம் ஏராளம்.

அவருடைய இஸ்லாமியச் செயல் பாடுகள் குறித்து சில விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. அப்துல்கலாம் அவர்கள் தமது மறுமைக்காக என்ன செய்தார்? என்பதை எல்லா வல்ல ஏகன் அல்லாஹ் நன்கறிந்தவன். அதை நாம் அல்லாஹ்விடமே விட்டு விடுவோம்.

அவர் 'கலிமா'ச் சொன்ன ஒரு முஸ்லிம். ஐவேளைத் தொழுதவர். தான தர்மங்கள் நிறையச் செய்தவர். பொருளாதார பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகதவர். பெரும் பாவங்கள் எனும் கறை தன் மீது படிந்திட அனுமதிக்காதவர்.

அவர் குடியரசுத் தலைவராக இருந்த காலங்களில் தமது மாளிகையில் ஒரு தடவை கூட இஃப்தார் நிகழ்ச்சி நடத்தியதில்லை. "இருக்கப்பட்டவர்களுக்கு இஃப்தார் விருந்து தருவதால் என்ன பயன்?" என்று கேட்டு அதற்காக செலவிடப்படும் தொகை ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்தை அநாதை இல்லத்துக்கு வழங்கியவர். அத்துடன் தம் சொந்தப்பணத்தில் ஒரு லட்சம் ரூபாயும் வழங்கினார் என்கிறார் அவரின் தனிச் செயலர் பி.எம். நாயர்.

வரவு செலவுகளில் ஒளிவு மறைவற்றவர். முடிந்த அளவுக்கு காசோலை (Cheque) யாகவே செலவுகளைச் செய்தவர்.

போலித்தனம், பாசாங்கு, நடிப்பு இவைகளுக்கு அப்பாற்பட்டவர். தம் எளிமையால் அனைவரையும் ஈர்த்தவர்.

திருக்குர்ஆன் ஓதுவதை தம் அன்றாட அலுவல்களில் ஒன்றாக்கிக் கொண்டவர். அண்ணாப் பல்கலைக்கழகத்தில் அவர் விரிவுரையாளராகப் பணி செய்ததற்காக அவருக்கு ஒதுக்கப்பட்ட அறையை அவரின் மரணத்துக்குப் பின் திறந்த பார்த்த போது திருக்குர்ஆனின் ஆங்கில மொழி பெயர்ப்புப் பிரதிகளும் அவரின் அன்றாடப் பயன்பாட்டு மேஜை மீது இருந்தன. (அலமாரியில் அலங்காரப் பொருளாக அல்ல)

**செய்தி : தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 5.8.2015**

தன் சொந்த ஊருக்கு வரும் பொழுதெல்லாம் மக்களோடு மக்களாக எளிமையாக வரிசையில் நின்று பள்ளிவாசலுக்கு வந்து தொழுதிருக்கிறார்.

தனது மறுமைக்காக அப்துல்கலாம் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை இவற்றின் மூலம் நாம் எளிதாகப் புரிய முடிகிறது. இதற்கு மேல் அவர் மீது விமர்சனங்களை முன் வைப்பதால் என்ன பலன் ஏற்பட்டுவிடப் போகிறது?

அதனால் தான் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் இறந்தவருக்காக நடத்தப்படும் (ஜனாஸா) தொழுகையில் இப்படிப் பிரார்த் தனை செய்தார்கள்.

"இறைவா நீ தான் இந்த ஆத்மாவின் இறைவன். நீயே இதைப் படைத்தாய். இதற்கு இஸ்லாத்தின் பக்கம் நீயே வழிகாட்டினாய். நீயே இதன் உயிரைக் கைப்பற்றினாய். இதன் ரகசியத்தையும் பகிரங்கத்தையும் நீயே நன்கறிவாய். இந்த ஆத்மாவுக்கு உன்னிடம் பரிந்துரைப்பவர்களாக நாங்கள் வந்துள் ளோம்" (நூல்: அபூதாவூத்)



(சுவனம் அல்லது பாவ மன்னிப்பு) கடமையாகி விட்டது". (நூல்: அபூதாவூத், திர்மிதி)

அப்துல் கலாம் அவர்களின் ஜனாஸாத் தொழுகையில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் பங்கேற்றார்கள் என்ற யதார்த்தமான உண்மையுடன் மேற்கண்ட நபி மொழிகளைப் பொருத்திப் பாருங்கள். அவரின் மறுமை வாழ்வு எப்படி அமையும் என விளங்கி விடும்.

எனவே முஸ்லிம்கள் அப்துல் கலாம் விஷயத்திலும் நபி (ஸல்) வழியைப் பின்பற்றி அவரின் ரகசியத்தையும் வெளிப்படையையும் அல்லாஹ்விடம் ஒப்படைக்க வேண்டும். மாறாக அவர் நரகவாதியா? சுவர்க்கவாதியா? என்பது வரை துரத்தித் துரத்தி விமர்சிப்பது நபி (ஸல்) வழியல்ல.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், இறந்துவிட்ட ஒருவரின் தொழுகையில் நூறு முஸ்லிம்களைக் கொண்ட கூட்டம் கலந்து கொண்டு (அவரின் பாவங்கள் மன்னிக்கப்பட) அல்லாஹ்விடம் பரிந்துரைத்தால் அவர்களின் பரிந்துரை ஏற்கப்பட்டு அவரின் பாவங்கள் மன்னிக்கப்படும் (நூல்: முஸ்லிம் எண்:947)

மேலும் நபி (ஸல்) கூறினார்கள், இறந்துவிட்ட ஒரு முஸ்லிமின் ஜனாஸா தொழுகையில் அல்லாஹ்வுக்கு இணைவைக்காத நாற்பது நபர்கள் பங்கேற்றால் அவர்கள் அவருக்குச் செய்யும் பரிந்துரைகளை அல்லாஹ் ஏற்காமலிருப்பதில்லை. (நூல்: முஸ்லிம் எண்: 948)


மாலிக் பின் ஹுபைரா (ரழி) அவர்கள் ஜனாஸாத் தொழும் போது கூட்டம் குறைவாக இருப்பதாகக் கருதினால் (அந்த குறைவான கூட்டத்தை) மூன்று அணி களாகப் பிரித்துக் கொள்வார் கள். பிறகு இப்படிச் சொல்வார் கள் நபி (ஸல்) கூறினார்கள், "யாருடைய தொழுகையில் மூன்று (சஃப்) அணிகள் பங்கேற்கின்றனவோ அவருக்கு

"தாகத்தில் தவித்துக் கொண்டிருந்த நாய்க்கு தண்ணீர் கொடுத்த காரணத்தால் ஒரு விபச்சாரியின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்ற நபி மொழி (நூல்: முஸ்லிம்) மற்றவரின் மறுமை வாழ்வைப் பற்றிக் கருத்துரைக்கும் முன் நாம் கவனிக்க வேண்டியதாகும்.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள், இஸ்ரவேல் சமுதாயத்தில் இருவர் நண்பர்களாக இருந்தனர். இருவரில் ஒருவர் வணக்க வழிபாட்டில் முனைப்புடன் ஈடுபட்டு வந்தார். மற்றொருவர் பாவங்கள் செய்பவர் (தான் வாயால் நான் ஒரு பாவி) என்று சொல்லியும் வந்தார்.

இந்நிலையில் நல்லவர் தீயவரைப் பார்த்து "நீ செய்யும் பாவங்களை குறைத்துக் கொள்" என்று கூறி வந்தார். அதற்கு அவர் "என்னை என் இறைவனுடன் விட்டு விடு. நீ இதில் தலையிடாதே" என்று கூறி விடுவார்.

முடிவில் ஒரு நாள் அவர் (நல்லவர்) எதை பெரியகுற்றம் என்று கருதி வந்தாரோ அதை இவர் (தீயவர்) செய்து கொண்டிருப்பதைக் கண்டார். உடனே "நீ செய்யும் பாவத்தைக் குறைத்துக் கொள்" என்றார். அதற்கு இவர் (தீயவர்) "என்னை என் இறைவனுடன் விட்டு விடு. நீ தலையிடாதே. என்னைக் கண்காணிக்கவா நீ அனுப்பப் பட்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.



இவர்களின் நிலையெல்லாம் மறுமை நாளில் என்னவாகும் என் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒருவரிடம் நெருங்கிப் பழகி அவரைப் பற்றி நன்கு தெரிந்து அவர் பாவம் செய்யும்போது மனம் வெதும்பி "நீ நரகம் தான் செல்வாய் அல்லது உனக்கு சுவனம் கிடைக்காது" என்று கூறுவதே குற்றம் என்றால் அப்துல் கலாம் அவர்களைப் பற்றி ஊடகங்கள் வழியாக மட்டுமே அறிந்து வைத்துக் கொண்டு அதனடிப்படையில் அவருடைய மறுமை வாழ்வைத் தீர்மானிக்க யாருக்காவது ஏதாவது தகுதி இருக்க முடியுமா?

அதற்கு அவர் (நல்லவர்) "அல்லாஹ்வின் மீது சத்தியமாகச் சொல்கிறேன். அல்லாஹ் உன்னை ஒருபோதும் மன்னிக்கவே மாட்டான். உன்னை சொர்க்கத்துக்கு அனுப்பவும் மாட்டான்" என்று கூறினார்.

பிறகு (ஒரு சமயத்தில்) அவ்விருவரின் உயிரையும் பறித்திட வானவரை அனுப்பி னான் அல்லாஹ். அவர் அவ்விருவரின் உயிரையும் பறித்தார். இருவரும் அல்லாஹ் விடம் ஒன்றாகவே வந்தனர். அப்பொழுது அல்லாஹ் தீயவரிடம் "என் அருளால் நீ சுவனம் செல்" என்றான். இன்னொருவரிடம் "என் அடியானுக்கு என் அருள் கிடைத்து விடாமல் நீ தடுத்து விட முயற்சித் தாயல்லவா?" என்று கேட்டான். அதற்கவன் "இல்லை என் இறைவா" என்றான். அப் பொழுது அல்லாஹ் "இவனை நகரத்துக்குக் கொண்டு செல்லுங்கள்" என்று (வானவர் களிடம்) கூறினான். (நூல்: அஹ்மது அறிவிப் பாளர்: அபூஹுரைரா(ரழி)

ஒரு தீயவரைப் பார்த்து ஒரு தடவை மட்டும் 'நீ நரகம் தான் போவாய்' என்று சொன்னதற்காக (அதை ஒரு குற்றமாகக் கருதி) சொன்னவரை அல்லாஹ் நரகத்துக்கு அனுப்பினான் என்றால் நாள் தோறும் யாரையாவது பார்த்து "நீ காஃபிர். உனக்கு நரகம் தான்" என்று சொல்லாவிட்டால் தூக்கமே வருவதில்லை சிலருக்கு.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள், "மரணித்து விட்டவர்களை நீங்கள் திட்டாதீர்கள். ஏனென்றால் அவர்கள் தாம் செய்து விட்ட செயல்களை நோக்கி (அதன் பலனைப் பெற்றிடச்) சென்று விட்டனர்". (நூல்: புஹாரீ-1393)

மேலும் நபி(ஸல்) கூறினார்கள், "உங்களில் இறந்துவிட்டர்களின் நல்லவற்றைப் பற்றியே பேசுங்கள் அவர்களின் தீமைகளைப் பற்றிப் பேசாதீர்கள்" (நூல்: அபூதாவுத், திர்மிதி)

மரணித்து விட்டவர்களுக்காக உயிரு டனிருப்பவர்கள் செய்ய வேண்டிய மற் றொன்று அவர்கள் பாவங்கள் மன்னிக்கப் படவும் மறுமை நல்வாழ்வுக்கும் பிரார்த்தனை செய்வது.

இதையெல்லாம் செய்ய விருப்பமில்லா விட்டால் கூட பரவாயில்லை. அப்துல் கலாம் அவர்களை விமர்சித்து விமர்சித்து விரட்டி விரட்டி நரகத்தின் வாசலருகே கொண்டு போய் விடாமல் ஓயமாட்டோம் என்ற முடிவையாவது கைவிடலாமல்லவா?

அவர் தமது நன்மைகளுக்கான கூலியைப் பெற்றிடப் போய்விட்டார். நாம் அவரைப் பற்றி விமர்சித்து தீமையை ஏன் சம்பாதிக்க வேண்டும்?

# அப்துல் கலாம் அவ்வளவு முக்கியமானவரா?

**சம்பவம் -1**

*கடந்த ஜூலை 27ம் தேதி இரவு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது தான் அந்த செய்தி தெரிய வந்தது. இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் இறந்து விட்டார் என்பதுதான் அந்தச் செய்தி.*

*அவர் இறப்பதற்கு முன்னால் அப்துல் கலாம் அவர்களை பற்றி பெரிதாக நான் சிலாகித்துக் கொண்டதில்லை. ஏனெனில் அவர் என்னை பொறுத்தவரை புதிய கண்டுபிடிப்புகள் எதையும் செய்தவரில்லை. மாறாக ஏற்கனவே கண்டுபிடிக்கப் பட்டவற்றை அரசின் தேவைக்கேற்ப உபயோகப்படுத்திக் கொண்டவர் அவ்வளவே. எனினும் அவருடைய எளியையும் நடத்தையும் என்னை கவர்ந்த ஒன்றே.*

*ஏனோ அவர் இறந்துவிட்ட செய்தி என் மனதை நெகிழ்த்தியது. என் கண்களும் கலங்கியது. பொதுவாகவே நான் சற்று உணர்ச்சி வயப்படக் கூடியவன். தொலைக்காட்சி செய்திகளில் காட்டப்பட்ட காணொளிகளின் வாயிலாக நான் உணர்ச்சி வயப்பட்டிருக்கக் கூடும் என என்னை நானே தேற்றிக் கொண்டு என் நண்பரும் வழக்கறிஞருமான தமிழ் என்பவருக்கு கைபேசியில் அழைத்தேன்.*

*தமிழும் நானும் ஓர் இடத்தை பதிவு செய்யும் விடயமாக 29ம் தேதி மாங்காடு சார் பதிவாளர் பதிவு அலுவலகத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. ஏற்கனவே இரண்டு முறை அங்கு போக நாள் குறித்து பின்னர் வெவ்வேறு காரணங்களுக்காக அது தள்ளிப் போய் இருந்தது. நான் தமிழிடம் பேச ஆரம்பித்தேன்.*

*என்ன தமிழ் 29ம் தேதி மாங்காடு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமே? ஞாபகமிருக்கிறதா?*

*இல்லை நண்பா, நாளை அப்துல் கலாம் அவர்களின் உடல் இராமேஸ்வரத்திற்கு வருவதாக சொல்லப்படுகிறது. அவ்வாறு வரும் பட்சத்தில் நானும் என்னுடைய சகோதரன் முத்துக்குமாரும் (அவரும் வழக்கறிஞர். அவர் தான் பதிவு சம்பந்தப்பட்ட வேலை களை பார்த்துக் கொண்டிருந்தார்) இராமேஸ் வரம் செல்வதாக உள்ளோம். அப்படி இருந்தால் என்னால் வர இயலாது.*

*என்ன தமிழ் இதற்காகவா இராமேஸ் வரம் போகப் போகிறீர்கள்?*


*நண்பா, இதற்கு போகவில்லையெனில் பின் வேறு எதற்கு போவது?*

*இவ்வாறாக எங்கள் உரையாடல் இருந்தது. அதற்குப் பின் தமிழிடம் அடுத்த நாள் பதிவு தள்ளிப் போகக்கூடாது என்பதை நான் வலியுறுத்தினேன். ஏற்கனவே இரண்டு முறை வாக்களித்த நாள் மாறிவிட்டது. இந்நிலையில் மூன்றாவது முறையாக தள்ளிப் போனால் வாக்குறுதியை மீறுவதாக ஆகிவிடும். விற்பவர் நம் மீது நம்பிக்கையை இழந்து விடுவார். ஆகையால் நாம் கண்டிப்பாக 29ம் தேதி இதனை முடித்து விட வேண்டும் என கண்டிப்புடன் கூறி விட்டேன்.*

*இருந்தாலும் பார்க்கலாம் என்ற ஒற்றை வார்த்தையுடன் தமிழ் நிறுத்திக் கொண்டார். நல்ல வேளையாக 29ம் தேதி மதியம் 1 மணிக்கு தான் அப்துல் கலாம் அவர்களின் உடல் மதுரை வந்தது. அதற்கடுத்த நாள் அவரின் உடல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என கூறப்பட்டதால் 29ம் தேதி சார்பதிவாளர் அலுவலகம் செல்வதில் எந்த குழப்பமும் நிகழவில்லை.*

*எனினும் எனக்குள் ஒரு குழப்பம். வழக்கறிஞர் தமிழுக்கும், முத்துக்குமாருக்கும் முக்கியமாகிப் போன அப்துல்கலாம் அவர்களின் மரணம் என்னை அந்த அளவிற்கு பாதிக்காமல் போனது ஏன்?*

*ஒருவேளை மரணத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் ஒரு முஸ்லிமின்*



இயல்பான மனநிலை காரணமா? தெரியவில்லை.

**சம்பவம் -2**

சார்பதிவாளர் அலுவலகத்தை 29ம் தேதி மாலை 3 மணிக்கு நானும் என் நண்பர் நசீரும் வந்தடைந்தோம். தமிழும் அவருடைய சகோதரர் வழக்கறிஞர் முத்து கிருஷ்ணனும் எனக்கு முன்னரே அங்கு வந்துவிட்டனர்.

முத்துகுமார் அவர்கள் என்னை சந்தித்ததில் இருந்து திரும்ப வரும் வரை கலாம் அவர்களின் அருமை பெருமைகளை பேசிக் கொண்டே இருந்தார். எங்கே பதிவு செய்ய வேண்டிய ஆவணங்களை சரியாக கவனிக்காமல் விட்டுவிடுவாரோ என்று எண்ணும் அளவிற்கு அவர் அப்துல் கலாமைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்.

பின்னர் உள்ளே சென்று சார் பதிவாளர் அவர்களிடம் ஆவணங்களை கொடுத்தோம். அவர் ஒரு பெண்மணி. பேசிக் கொண்டிருந்தபோது அப்படியே நிமிர்ந்து பார்த்தோம். அப்துல் கலாம் அவர்களின் படம் மேலே மாட்டப்பட்டிருந்தது.

முத்து குமார் சார்பதிவாளரிடம் மேடம் இந்த படம் எப்போதிலிருந்து இங்கிருக்கிறது? எப்பொழுதுமா? அல்லது தற்போது கலாம் அவர்கள் இறந்து போனதன் காரணமாகவா?

சார், கலாம் அவர்கள் இறந்து போன பின் தான் அந்தப் படத்தை இங்கு வைத்துள்ளோம்.

மேடம் அந்தப் படம் இங்கு எப்பொழுதுமே இருக்க தகுதியானது.

சார், இனி அந்தப்படம் இங்கு எப்பொழுதுமே இருக்கும். இதை விடபெரியதாக இருக்கும் என்றார் சார் பதிவாளர் அம்மணி.

அத்துடன் பதிவு வேலை முடிந்தது. எனக்குள் ஒரு மனப்பதிவு ஆரம்பமானது.

இவர்களுக்கெல்லாம் கலாம் ஏன் முக்கியமானவராகிப் போனார்? பெரிய அறிவியலாளர் என்பதாலா? இல்லை அப்படியானால் பாபா அறிவியல் ஆய்வுக் கழகத்தை ஆரம்பித்தவரும் இன்னும் கலாமைப் போன்றோ அல்லது அவரை விட அறிவில் மிகைத்தவர்களோ இதேபோல் கொண்டாடப்படுகிறார்களா? எனக்கு தெரிந்து இல்லை.

அப்படியானால் எது இவரை கொண்டாட வைத்தது? அவருடைய எளிமை. நாட்டில் உயர்ந்த இடத்திற்கு சென்றுவிட்ட பின்னரும் சாதாரண மக்களிடம் அவர் பழகிய விதம், நடிப்பற்ற அவரின் நடத்தை.

சாகும் போது பணக்காரனாக சாவதற்காக சொத்து சேர்த்து வைக்காத நேர்மை.

இரண்டு பெட்டிகளுடன் சென்று இரண்டு பெட்டிகளுடன் ஜனாதிபதி இல்லத்தை விட்டு வெளியேறிய பொருட்களின் மீதான பற்றற்ற தன்மை.

ஆம், இந்த பண்புகள் எல்லாம் ஏகத்துவத்தின் ஏக போக சொந்தக்காரர் களிடம் காணப்பட வேண்டிய பண்புகள் அல்லவா.

ஆனால் இன்றோ நாட்டில் அதிகாரத் தில் அமர்ந்து விட்ட எந்த ஏகத்துவத்தின் ஏகபோக சொந்தக்காரர்களிடம் இதனை காண முடியவில்லையே.

அப்படியானால் ஏகத்துவக் கொள்கை நம்மிடம் செய்த மாற்றம் தான் என்ன?

அடுத்தவனை குறை காணுவது மட்டுமா?

இந்த சிந்தனைகளுடன் அஸர் தொழுகைக்காக அருகில் உள்ள பள்ளிக்கு தொழச் சென்றோம்.

இப்போது என் மனம் கனத்திருந்தது. ஆம், முக்கியமானதொரு நபரை தான் நாம் இழந்திருக்கிறோம்.

கலாமை நாம் அல்லவா சொந்தம் கொண்டாடி இருந்து இருக்க வேண்டும். நமது மாற்று மத உடன் பிறப்புகள் அல்லவா தலையில் தூக்கி வைத்து ஆடுகின்றனர்.

**சம்பவம் -3**

அஸர் தொழுதுவிட்டு **OLA** காரை பதிவு செய்து விட்டு காத்திருந்தோம்.

கார் 5.30 மணிக்கு வந்தது. சில்வர் நிற டாடா இண்டிகா அது. முருகன் என்பவர் அதை ஓட்டிக் கொண்டு வந்தார். வண்டி எண். TN22CJ 1147 ஓட்டுனரின் கைபேசி எண். 90921 80942.

அண்ணா நகர் அருகே என் நண்பர் நசீரை இறக்கி விட்டு என் வீட்டிற்கு பயணம் தொடர்ந்தது.

கார் ஓட்டுனர் மெல்ல என்னிடம் பேச ஆரம்பித்தார்.

என்ன சார், அப்துல் கலாம் அவர்களின் இறப்பு உங்களை பெரிதும் பாதித்திருக்கும் அல்லவா, பாவம் சார் நீங்கள்.

அப்துல் கலாம் அவர்களின் இறப்பு எல்லா முஸ்லிம்களையும் பாதித்திருக்கும் என்பது அவரின் திண்ணமான எண்ணம் என்பது அவரின் பேச்சில் தெரிந்தது.

நான் பேச ஆரம்பித்தேன்.

ஏன் உங்களை அது பாதிக்கவில்லையா?

சார் நீங்க வேற, ரெண்டு நாளா நான் காரை எடுக்கவில்லை.

ஏன்?

இல்லை சார், எதையோ இழந்து விட்ட மாதிரி இருக்கு. வீட்டில் அப்துல் கலாமைப் பற்றி தொலைக்காட்சியில் வந்த செய்திகளைப் பார்த்து பார்த்து அழுதுக் கொண்டிருந்தேன். அதே மனநிலையோடு காரை ஓட்டினால் வாடிக்யைாளர்களிடம் ஏதாவது தப்பா பேசிவிடுவேன் என்று பயம். அதனால் தான் வருமானம் போனாலும் பரவாயில்லை என்று காரை எடுக்கவில்லை. எப்பேர்பட்ட மனுஷன் சார் அவர். பாருங்கள் இப்போ நான் அவரைப் பற்றி பேசிக்கிட்டு இருக்கேன். என் கண்களிலிருந்து கண்ணீர் வழிகிறது.

அம், அந்த இளைஞன் அழ ஆரம்பித்து விட்டான். நான் ஏற்கனவே சொல்லியுள்ளேன். நான் உணர்ச்சிவயப்படக் கூடியவன். மற்றவரின் அழுகை என்னை பாதிக்கும் என் கண்களிலும் கண்ணீர். கைக்குட்டையால் துடைத்து கொண்டேன். நான் அழுது கொண்டிருந்தேன்.

இப்போது ஓட்டுனர் இளைஞர் தன்னை தேற்றிக் கொண்டு கவலைப் படாதீங்க, சார் அவர் போனால் என்ன? உங்க ஆளுங்க இன்னும் பல பேர் நிறைய செய்வாங்க சார்.

அந்த இளைஞனின் பேச்சில் எந்த கலப்படமும் இல்லை.

நான் கேட்டேன், என்னப்பா, "அப்துல் கலாம் இறந்தது நல்லது. எங்கே அவர் இராணுவ இரகசியங்களை பாகிஸ்தானுக்கு சொல்லிவிடுவாரோ என பயந்து கொண்டி ருந்தோம்" என்று ஒரு பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் முகநூலில் பதிவிட்டிருக்கிறாரே என்று தான் கேட்டேன்.

சார் அந்த நாய்களை பற்றி ஏன் சார் பேசறீங்க? என் நண்பர்கள் பல பேர் முஸ்லிம்கள். நான் பள்ளிவாசலின் நிழலியே வளர்ந்தவன். நோன்பு வந்தால் கஞ்சியும், ரம்ஜான் வந்தால் பிரியாணியும் வந்து விடும். இந்த தடவை தான் கஞ்சி குடிக்க முடிய வில்லை என தன் ஆதங்கத்தை பதிவு செய்தார்.

பரவாயில்லை அப்துல்கலாம் இந்துத் துவவாதிகள் முஸ்லிம்களை பற்றி கக்கியுள்ள விஷத்தை முறிக்கும் மருந்தாகவும் இருந்திருக்கிறார்.

# தீன் சுடர் டி.எம். உமர் பாரூக்



# கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் கொண்டு வந்த. . .

**கொ**டிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் என்ன கொண்டு வந்தார்கள் என்பதைச் சொல்லிடவில்லை என்பதை நான் முந்தைய தொடரில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆமாம் கொடிக்கால் அவர்கள் தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களை இளைய பெருமாள் அவர்களின் சட்டமன்ற அலுவலகத்தில் சந்தித்ததாகவும், அப்போது இளைய பெருமாள் அவர்கள் கொடிக் காலிடம் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் கடைவீதியில் ஜாதிக்கொடுமைகளுக் கெதிராக நடத்திய பெரும் போரையும், அதில் அவர் எதிர்கொண்ட இன்னல்கள், இழப்புகள் இவற்றைப் பட்டியலிட்டதாகவும் கூறினார்கள். இதில் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களுக்கு அவர் எதிர்கொண்டுள்ள வழக்குகள், தண்டனைகள், இவற்றில் உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்கள், கூறினார்கள். இந்தப் பின்னணியில் அவர் உதவியதாகவும் குறிப்பிட்டார்கள்.

அதன் பின் கொடிக்கால் அவர்கள் வெளியிட்ட நட்பின் அணுகள் என்ற நூலில் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் எழுதியவற்றைப் படித்துக் காட்டி டி.எம். உமர் ஃபாரூக்கின் சேவைகளையும், அவரது தியாகங்களையும் உணர்வோடு நினைவு கூர்ந்தார்கள்.

அதில் தன் வாழ்க்கையின் தொடக்க நாள்களைக் குறிப்பிட்டார்கள். அதற்கு முந்தைய நாள் சந்திப்பின் போதும், தனது வாழ்க்கைச் சுருக்கத்தைச் சொன்னார்கள். அதனை ஒரு சிறந்த எழுத்தாளரிடம் எழுதக் கொடுத்திருந்த தாகவும் இப்போது அதை நிறுத்தி வைத்திருப் பதாகவும் அதை நான் எழுதிட வேண்டும் என்றும் சொன்னார்கள். ஆனால் நான் உடனேயே எழுதுகின்றேன் எனச் சொல்லிட வில்லை. காரணம், நான் வேறு சில எழுத்துக்களிலும் மொழி பெயர்ப்புகளிலும் மும் முரமாக ஈடுபட்டு

வருகின்றேன். இந்நிலையில் இந்த எழுத்துக்களையும் எடுத்துக் கொண் டால் சிரமமாக இருக்கும் எனக் கருதினேன். அத்தோடு காலந் தாழ்ந்து போகும் எனவும் கருதினேன்.

ஆனால் “கொடிக்கால் ஷேஹ் அப் துல்லாஹ்வின்” வாழ்வில் பதிவு செய்யப்பட வேண்டியதும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்ட மக்கள் படிப்பினைப் பெற்றிட வேண்டியதும் நிரம்ப இருக்கின்றது. காலம் கனியும் போது அவற்றையும் பார் அறிந்திட தருவோம். (இன்ஷா அல்லாஹ்)

மீண்டும் தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் பக்கம் நம் கவனத்தைத் திருப்புவோம்.

டி.எம். உமர் ஃபாரூக் அவர்களோடு ஏற்பட்ட தொடர்புக்குப் பின் அந்தப் பகுதி தாஃவாவின் பக்கம் எங்கள் கவனம் வெகுவாகத் திரும்பியது. தாஃவா என்பது இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் அழகிய பணி. இந்த வகையில் பல நிகழ்ச்சிகளை நாங்கள் ஏற்பாடு செய்தோம். அவற்றுள் நீடூர் நிகழ்ச்சி தலையாயது.

இந்த நிகழ்ச்சியை தம்பி மன்சூர் அலீ, அவருடைய உடன் பிறப்பு தாஃவாவின் இன்றளவும் என்னோடும் என் பணிகளோடும் உடனிருக்கும் தம்பி அப்துல் ரவூஃப் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் டாக்டர் ஹபீப் முஹம்மத் ஜவாஹிருல்லாஹ், சிக்கல் நாயக்கன் பேட்டை ஜக்கிரியா பாய் ஆகியோர் கலந்து கொண் டார்கள். இதனைத் தொடர்ந்து நான், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், மன்சூர் அலீ, ரவூஃப், டாக்டர் ஹபீப் முஹம்மது ஆகியோர் ஓர் குழுவாக எங்களை ஆக்கிக் கொண்டு ஊர் ஊராக தாஃவா நிகழ்ச்சிகளை நடத்திட திட்ட மிட்டோம். நடத்தினோம்.

இதில் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் தவறாமல் அழைக்கப்பட்டார்கள். பல கோணங்களில் அவர்கள் தங்கள் உரைகளை நிகழ்த்தினார்கள். அவை அனைத்துமே நூல் வடிவம் பெறும் தகுதி பெற்றவை. இன்றைக் கும் தலித் மக்களின் சிந்தனைகளையும், செயல்களையும் வடிவமைக்கும் ஆற்றல் பெற்றவை.

குறிப்பாக நீடூரில் அவர் ஆற்றிய உரையில் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 17A தீண்டாமை ஒழித்துவிட்டதாகப் பிரகடனப் படுத்துகின்றதே அந்தத் தீண்டாமை எப்படி அரசியல் நிர்ணயச் சட்டத்தையும் விஞ்சி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை தோலுரித்துக் காட்டி இருந்தார்.

ஓர் அரசியல் நிர்ணயச் சட்ட வல்லுநரையும் விஞ்சி நின்றது அண்ணனின் கருத்துக்கள். அதனை நூலாகக் கொண்டு வந்திட வேண்டும் என நானும் தம்பி மன்சூர் அலீயும் முடிவு செய்தோம். அதனை நூலாகத் தொகுத்து அண்ணன் தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் (அன்று டி.எம். மணி) அவர்களிடம் தந்தோம். அந்த நூலுக்கு தலீத் மக்களும் சமூக விடுதலையும் எனத் தலைப்புத் தந்தார்கள். ஆயிரக்கணக்கான பிரதிகளை அச்சிட்டு விநியோகித்தோம். இன்றும் அஃதோர் வரலாற்று ஆவணமாக நின்று இலங்குகின்றது.

அதன் பின் கிராமம் கிராமமாக சென்று நாங்கள் நடத்திய பலக் கருத்தரங்கங்களுக்கும் தலித் மக்களும் சமூக விடுதலையும் என்றே பெயர் வைத்தோம். இந்த அரங்கங்களை பட்டிகளிலும், தொட்டிகளிலும் தான் நடத்தினோம்.

இந்த விவாத அரங்குகளை களத்தில் நின்று அமைத்திட கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் ஒரு வாரம் (அ) பத்து நாள்களுக்கு முன்னரே களத்திற்கு சென்று விடுவார்கள். கால் நடையாகவே கிராமங் களுக்குச் சென்று தலித் மக்களின் விடுதலையைப் பற்றியும் அது குறித்து நடக்கவிருக்கும் கருத்தரங்கம் பற்றியும் பிரச்சாரம் செய்வார்கள்.

அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள், தலித் மக்களின் பிரச்னைகளில்

உண்மையைச் சொன்னால், ஜாதிய கொடுமைகளுக்கெதிரான போர்க்களங்களில் நின்று கொண்டே இருப்பார்கள். என்றாலும், நேரங்கிடைக்கும் போதெல்லாம் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களுடன் களமிறங்கி விடுவார்கள்.

இப்படி கருத்தரங்கம் வெற்றி பெறவும், தலித் மக்கள் விடுதலையடையவும், இந்த இரு பொக்கிஷங்களும் நிறைய உழைத்தன. அவர் களுக்குப் பின்னால் நான், தம்பி மன்சூர், ரவூஃப் சிக்கல் நாய்க்கன் பேட்டை ஜக்கரிய்யா, போடி நூர்தீன் என்ற போடியார் ஆகியோர் நின்று கொண்டிருந்தோம்.

இதில் ஆடுதுறையில் (கும்பகோணத் திற்கு பக்கத்தில் உள்ள ஊர்) நடந்த நிகழ்ச்சியும் திருவாய்ப்பாடியில் நடந்த நிகழ்ச்சியும் நெஞ்சை நெகிழச் செய்தன.

இன்ஷா அல்லாஹ் அவற்றை அடுத்த இதழில் காண்போம்.

**எம்.ஜி.எம்.**

---

# அல் அக்ஸா மஸ்ஜித் இல் பைத்துல் ஈத் பெருநாள் தொழுகை!

**இஸ்ரேலின் கெடுபிடிகளைத்தாண்டி. .**

ஜூலை 11ஆம் நாள் உலக முஸ்லிம்களின் பிரதிநிதிகள் அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் கூட இஃப்தார் என்ற நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை நடத்தி முடித்தார்கள். 'அல் அக்ஸா' மஸ்ஜித் ஐ யூதர்களின் கெடுபிடியிலிருந்து விடுவிக்கும் நன்னாளுக்காகத் துஆ செய்து கலைந்தனர்.

யூதர்கள் 50 வயதுக்கு கீழ் உள்ள முஸ்லிம்களை தொழுகை நடத்திட அனுமதிக்கவில்லை. அதனால் அவர்களை எந்த சோதனை சாவடியில் தடுத்து நிறுத்தினார்களோ அந்தச் சோதனைச் சாவடியிலேயே தொழுதார்கள் 50 வயதுக்கு கீழுள்ள முஸ்லிம்கள்.


ஆனால் ரமழான் மாதம் கடைசி பத்து நாள்கள் மிகவும் புனிதமானவை. முஸ்லிம்கள் பாவமன்னிப்பு தேடிடும் நாள்கள். குறிப்பாக ஒற்றைப் படை இரவுகள் ஒன்றில் பைத்துல் கத்ர் என்ற புனித இரவு 'Night of Power' தொழுகைக்காக முஸ்லிம்கள் அல் அக்ஸா மஸ்ஜித் ஐ நோக்கி பயணித்தார்கள். Qalandiga கலாண்டியா என்ற சோதனை சாவடிக்கு மேல் வாகனங்களை அனுப்ப மாட்டோம் என அடம் பிடித்தனர் இஸ்ரேல் நாட்டைச் சார்ந்தவர்கள்.

வாகனங்கள் இல்லாவிட்டால் என்ன? நாங்கள் நடந்தே போவோம் என நடந்தே அக்ஸா மஸ்ஜித் ஐ அடைந்தார்கள் முஸ்லிம்கள்.

இதில் பெண்களும், பெருவாரியாக கலந்து கொண்டார்கள். பெண்களின் நெஞ்சுரத்தைக் கண்ட யூதர்கள் 30 வயதுக்கு உட்பட்ட பெண்களை அக்ஸா மஸ்ஜிதுக்குள் அனுமதிக்க மாட்டோம் என அடம் பிடித்தனர். பலர் தடையைத் தாண்டி சென்றார்கள். இயலாதவர்கள் அங்கேயே இரவு முழுவதுமிருந்து தொழுகை திக்ர், இவற்றில் ஈடுபட்டார்கள்.

பெண்களின் உறுதியைக் கண்ட யூதர்கள் 12,13,14 தேதிகளில் எல்லாப் பெண்களையும் கடுமையான சோதனைக்குப் பின் அனுமதித்தார்கள்.

(Source : Al Jazeerah- English)
Palestinian head to Al Aqsa Mosque during Ramadhan



# டி.எம். உமர் ஃபாருக் : ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் !

## ஆ. மார்க்ஸின் ஆய்வு

அ. மார்க்ஸ் எழுதிய இந்த நூல் அண்மையில் வேர்கள் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டது. அதன் முதல் வெளி யீட்டு விழா தேனி மாவட்டம் அல்லி நகரத்தில் முக்கிய சாலையில் உள்ள ஈ.எஸ். மஹாலில் 23.8.2015 அன்று மாலை நடைபெற்றது.

நிகழ்ச்சிகளுக்கு தேனி அல்லிநகரம் பள்ளிவாசல் நிர்வாகக் கமிட்டியின் தலைவர் எம்.ஏ. ஜியாவுத்தீன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். நிகழ்ச்சியை வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் தொடங்கி வைத்து உரை நிகழ்த்தினார்கள்.

நூலை அறிமுகப்படுத்தி ஜனாப் மிர்ஷாத் மக்தூமி அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள்.

**ஆய்வுரை**

நூல் ஆய்வுரையை பேராசிரியர் முனைவர் அப்துல்சமது அவர்கள் உரை வழங்கினார்கள். ஆய்வுரையில் ஜனாப் மறைந்த மாமேதை டி.எம். உமர் ஃபாரூக் அவர்களுக்கு இஸ்லாமிய இலக்கியக் கழகம், தீன்சுடர் விருது வழங்கியதை கனிவுடன் நினைவு கூர்ந்தார்.

உரையின் இறுதியில் குழுமி இருந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இஸ்லாம் ஒன்றே தீர்வு என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார்கள். அனைவரையும் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள். (அவர்களின் உரையைத் தனியாக இடம் பெற செய்துள்ளோம்.)

கருப்பாயி என்கிற நூர்ஜஹான் என்ற நாவலைப் பற்றி உரையில் வினாவும், விடையும் இடம் பெற்றது. அந்த நாவலில் இடம் பெற்றவை ஒரு வரி கூட உண்மை இல்லை என்பதை தானும் உமர் ஃபாருக் அவர்களும் எப்படி ஒரு கள ஆய்வின் வழி தெளிவு படுத்தினோம் என்பதை நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

தொடர்ந்து டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிக்கை மேற்கொண்ட ஆய்வுகள் அதில்

அவர்கள் வெளிக் கொணர்ந்த உண்மைகள், இவற்றையும் ஒருங்கிணைப்பாளர் மக்கள் மன்றத்தில் வைத்தார்கள்.



**தலீத்ராயன்**

தமிழ்ப் புலிகளின் மாநில செயலாளர் தலீத்ராயன் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

உரையில் தான் முன்னர் வைகறை வெளிச்சம் ஆசிரியர் அவர்களிடம் கொடுத்த வாக்குறுதியை நினைவு கூர்ந்தார்கள்.

அன்வர் பாலசிங்கம், அவர்கள் அந்தப் பகுதியில் செய்த பல தகிடுதத்தங்களைச் சாடினார்கள்.

தீண்டாமைக் கொடுமைகளுக்கு இஸ்லாமே தீர்வு என்பதில் அவருக்கு ஐயமில்லை என்பதைத் தெளிவாகக் கூறினார்கள்.

அடுத்து ஆதித்தமிழர் பேரவையின் மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் நீலகண்ணன் அவர்கள் பேசினார்கள்.

தங்கள் புதல்வனோடுதான் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். அவர்களின் புதல்வன் மக்ரிஃப் தொழுகையின் போது அனைவரோடும் தொழுகையை நிறைவேற்றினார்.

தான் வாழ்நாள் முழுவதும் எந்தக் கடவுளையும் வணங்கியதில்லை. ஆனால் என் மகன் தொழுகையில் தன்னை ஈடுபத்தியதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். தீண்டாமையைக் கற்பிக்காத எந்தக் கடவுளையும் நான் ஏற்றுக் கொள்வேன் எனப் பிரகடனப் படுத்தினார்.

முன்னதாக நிகழ்ச்சியில் போடியைச் சார்ந்த நூர்தீன் அவர்கள் உரையாற்றினார்கள். நூர்தீன் அவர்கள் அன்றைய தாஃவா களத்தில் அதாவது இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் களத்தில் தரைபடை பணிகளைச் செய்தவர்கள் (இது குறித்து விரிவாக தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களைப் பற்றிய தொடரில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன்).

**போடி நூர்தீன்**

டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் மறைவை நினைவூட்டும்போது போடி நூர்தீன் அவர்கள் கண்கலங்கினார்கள்.

அன்றைய நினைவுகளையும் நினைவு கூர்ந்தார்கள். நிகழ்ச்சியில் நிறைவாக மதுரை நிஜாமுதீன் அவர்கள் நன்றி கூறினார்கள்.

நிகழ்ச்சியில் டி.எம். உமர் ஃபாரூக் ஒரு தலீத் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும் என்ற நூல் ரூபாய் 20 மதிப்புள்ளதை ரூபாய் 10க்கும், மால்கம் X என்ற நூல் ரூபாய் 100 மதிப்புள்ளதைரூபாய் 50க்கும், ஜாதி ஒழிந்தது என்ற நூல் ரூபாய் 50 மதிப்புள்ளதை ரூபாய் 20க்கும், செந்தமிழ்நாட்டுச் சேரிகள் என்ற நூல் ரூபாய் 40 மதிப்புள்ளதை ரூபாய் 20க்கும் விற்பனை செய்யப்பட்டது.

நிகழ்ச்சியை வைகறை வாசகர் வட்டம் தேனீ, நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் - தேனீ இவை நடத்தின.

நிகழ்ச்சி வழங்கியோர் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்.

**தேனியிலிருந்து ந.நி**

# ஒரு தலித் போராளியின் வரலாறு



**முனைவர் அப்துல் சமது**

வேர்கள் பதிப்பகம் அண்மையில் வெளிக் கொணர்ந்திருக்கும் அ.மார்க்ஸ் அவர்கள் எழுதிய "டி.எம். உமர் ஃபாரூக் ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்" நூல், இறுதி மூச்சுவரை தலித் மக்களுக்காக வாழ்ந்த ஒரு மாமனிதனின் வாழ்வையும், தலித் அரசியல் குறித்த அவரது தனித்துவ பார்வையையும் பதிவு செய்துள்ளது.

ஒருவரது வாழ்க்கை குறித்த பதிவு, அவரது சிந்தனைப் புலமான படைப்புகள் சார்ந்தும், செயற்புலமான போராட்டக் களம் சார்ந்தும் வெளிப்பட வேண்டும் என்பதற்கு இந்நூல் ஓர் உதாரணம்.

கும்பகோணம் திருப்பனந்தாள் வட்டாரத்தில் அரை நூற்றாண்டு காலம் இரு ஆதிக்க சக்திகளிடம் இருந்து தலித் சமூகத்தை காப்பதில் அரணாக நின்றவர் டி.எம். மணி அவர்கள். அன்னார் கட்டமைத்து நடத்திய அம்பேத்கர் மாணவர் இளைஞர் பேரவை, நீலப்புலிகள் இயக்கம் இரண்டும்தான் தமிழகத்தின் இன்றைய தலித் அரசியல் இயக்கங்களுக்கு முன்னோடி.

அம்பேத்கரையும், தந்தை பெரியாரை யும் தனது சமூக விடுதலைக்கான முன் னோடிகளாகக் கொண்டு களம் கண்டார். "அம்பேத்கரும், பெரியாரும் தலித் மக்களின் இரு கண்கள்" என்றார். அம்பேத்கரின் சிந்தனைகளுக்கு எதிரானவர் தந்தை பெரியார் என்ற பிரச்சாரத்தை முறியடித்தார்.

பொதுவுடமைக் கொள்கை பற்றிய தனது தீர்க்கமான சிந்தனையை முன் வைத்தார். பொதுவுடமைக் கொள்கை தலித்துக்களுக்கு எதிரானதல்ல. ஆனால் வர்க்க ரீதியாக மக்களைப் பிரிக்க முடியாத நிலை இங்கிருப்பதையும், ஏழைப் பிற்படுத்தப் பட்ட சாதிகளே தலித்துகளுக்கு எதிராகக் களத்தில் இருப்பதையும் பொதுவுடமை வாதிகள் உணரவில்லை என்றார்.

அது போன்று தலித் அரசியல் "தமிழ்த் தேசியம்" நோக்கி நகர்வதை எதிர்த்தார். "தமிழ்த் தேசியம் - தேர்தல்" என்ற முறையில் ஆதிக்க சாதிகளிடம் சமரசம் ஆதல், தலித் மக்களின் விடுதலைக்கு எதிராகவே முடியும் என்று எச்சரித்தார்.

சமகால தலித் அரசியல் குறித்த மேற்கண்ட டி.எம். மணியின் நிலைப் பாடுகளும் தலித் இயக்கங்களை இணைக்க அவர் முன்னெடுத்த முயற்சிகளும், "மக்கள் தேர்தலுக்காக அல்ல, போராட்டங்களுக் காகத் திரட்டப்பட வேண்டும்" என்ற அவரது ஆரோக்கியமான குரலும் இந்நூலின் முக்கியப் பதிவுகளாகும்.

கலை, இலக்கியம் பற்றிய டி.எம். மணியின் பார்வை, இன்றைய தலித் அமைப்புகளின் பரிசீலனைக்கு உரியது.

பாமாவின் ‘கருக்கு’ நாவல் வெளியீட்டு விழாவில் டி.எம். மணி ஆற்றிய உரைபற்றிய இந்நூலின் பதிவு முக்கியமானது. ‘தப்பு’ மட்டுந்தான் தலித் இசை என்றால் குழலும், யாழும் யாருக்கு உரியது? தலித் இலக்கியம் என்று சுருங்கினால் சங்கம் முதற்கொண்டு தமிழன் படைத்த இலக்கியங்கள் யாருடையவை? என்று கேட்கிறார்.

“தமிழ் தேசியம்” பேசும் தலித் அமைப்புகள் தலித் இலக்கியங்கள், தலித் கலைகள் என்று ஒடுங்குவதேன்? என்ற டி.எம். மணியின் கேள்வி கவனத்திற்குரியது.

ஒரு குடியின், சமுதாயத்தின் சிறப்பையும் உயர்வையும், தீர்மானிப்பவர்கள் அடித்தட்டு மக்கள் என்பதை சங்கப் புலவர் மாங்குடி கிழாரின்

**“பாணன் பறையன் துடியன் கடம்பன்**
**இந்நான் கல்லது குடியுமல்ல”**

என்ற பாடல் வரிகள் உறுதிப் படுத்துகின்றன.

தமிழ் சமூகத்தை மகிழ்விப்பவர்களாக செய்தி அறிவிப்பவர்களாக போர்க் களங்களில் வீரர்களை கலை நிகழ்ச்சிகள் மூலம் உத்வேகப்படுத்துபவர்களாக விளங்கிய இக்கலைஞர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக பிறப்பு, தொழில் அடிப்படையில் புறந்தள்ளப் பட்டது தமிழகத்தில் நிகழ்ந்த பிற்கால அவலமாகும்.

வெள்ளை அடித்து வீடுகளை அழகுப் படுத்துவதற்கும், வெற்றிலை போட்டு வாய் சிவப்பதற்கும், சுண்ணாம்பு தயாரித்துக் கொடுத்திட சுண்ணாம்புப் பறையர் என்று அழைக்கப்பட்டவர்கள், ஆடு, மாடு தோல்களை சுண்ணாம்பு தடவி பதப்படுத்தி, தோல் பொருட்களை உற்பத்தி செய்து இன்றைய லெதர் டெக்னாலஜியை வளர்த்து விட்டவர்கள் என இவர்களின் வரலாறு மகத்தானது.

இந்த சமூகம் தமிழகப் பொது நீரோட்டத்தில் கம்பீரமாக நிற்க வேண்டும் என்ற டி.எம். மணி அவர்களின் கனவுகள் நூலின் பக்கங்களுக்குள் பத்திரப்படுத்தப் பட்டுள்ளன.

“அம்பேத்கரின் இலட்சியம் நிறைவேற ஒவ்வொரு சிந்தனை பெற்ற மனிதனும் சேரிகளை விட்டு வெளியேறுங்கள்” என்றார். “அப்படி மனித விடுதலைக்காக வெளியேறு பவர்கள் மனித மதிப்பை உறுதி செய்யும் மார்க்கத்தைத் தேர்ந்தெடுங்கள்” என்றார்.

“மதமாற்றம் என்பது கூட்டு வாழ்க்கைக்கு உதவுவதாக இருக்க வேண்டும். அதை விட்டு மேலும் மேலும் தனிமைப்படுத்துவதாக இருக்கக் கூடாது” என்றார். மனித மதிப்பையும் கூட்டு வாழ்க்கையையும் தரும் ஒரே மார்க்கம் இஸ்லாம் தான் என்று அடையாளப்படுத்தினார். ஆயிரக் கணக்கானவர்களை அந்த கூட்டு வாழ்க்கைக்கும் சொந்தக் காரர்களாக்கினார்.

தனது வீடு ‘பாய்வீடு’ ஆன பின்னரும் இறுதி மூச்சு வரை தலித்களின் மேம் பாட்டிற்காக அவர்களுடனேயே இருந்து பாடுபட்டார். இதனை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களும் தாவாப் பணியில் முனைவோரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

டி.எம். உமர் ஃபாரூக்கின் ஜனாஸாவை ஜமாத்தார்கள் இறுதிச் சடங்குகள் செய்து கண்ணியமாக அடக்கம் செய்ததை அவரது பிள்ளைகள், “எங்களுக்கு முழுத் திருப்தி சார்!” என்று பல முறை சொன்னதைக் குறிப்பிடும் அ. மார்க்ஸ் அவர்கள் அந்த வார்த்தைகள் சில நாட்கள் என் மனதில் ஒலித்துக் கொண்டே இருந்தன என்கிறார்.

வாசிப்புக்கு வந்துள்ள ஓர் இஸ்லாமிய தலித் போராளியின் இவ்வரலாறு தலித்துகள் இன்று பயணப்பட வேண்டிய தீர்க்கமான பாதையைத் திசை காட்டியுள்ளது.

# பௌத்தமா? இஸ்லாமா?

## நண்பர் சிந்தனைச் செல்வனுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்!

## செல்ல வேண்டிய திசை மேற்கு, மீண்டும் கிழக்கல்ல!

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் சிந்தனைச் செல்வன் என் நெடுநாள் நண்பர்.

எத்தனை நெடுநாள்?

அவர் பால்ராஜாக அறியப்பட்டிருந்த காலத்திலிருந்து மக்கள் கல்வி இயக்கத்தில் அவரும் எங்களோடு செயல்பட்ட காலத்திலிருந்து.

தீராத ஆர்வம் உடையவர். கேள்வியின் நாயகன் அவர். நிறையக் கேள்விகளைக் கேட்பார்.

மக்களின் வீடுகள் எரிக்கப்பட்ட கொடுமையில் கவனம் செலுத்திச் செயல்பட்டு வரும் இந்தத் தருணத்தில்,


இந்தக் கொடுமைகளுக்கு நிரந்தரப் பரிகாரமாக ஒன்றைச் சொல்லி வருகிறார். அது மீண்டும் அண்ணல் அம்பேத்கருக்குத் திரும்புதல்.

தலித்கள் இந்தக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற ஒரே வழியாக அண்ணல் 1935ல் தொடங்கி அவர் மறையும் வரை சொன்ன ஒரே வழி.

"இந்து மதத்தைவிட்டு வெளியேறுவது" என்பதுதான்.

இதை சொல்லி வருவதற்காக நாம் விடுதலை சிறுத்தை களின் பொதுச் செயலர் சிந்தனைச் செல் வனைப் பாராட்டியாக வேண்டும்.

அம்பேத்கரை நினைவூட்டி "பவுத்தத்துக்கு மாறுவோம்" எனக் கூறி



வருகிறார்.

இங்குதான் நண்பர் சிந்தனையை நான் பாராட்டும் அதே நேரத்தில் அவர் முன் ஒரு வேண்டுகோளை முன் வைக்கிறேன்.

இன்று அறுபதாண்டுகளுக்கும் மேலாகி விட்டது. ஆனால் அது அவர் எதிர்பார்த்த விடுதலையைத் தந்ததா?

அது மட்டுமல்ல அவர் எந்தப் பின்னணியில் பௌவுத்தம் என்பதைத் நோக்கித் தள்ளப்பட்டார்? இஸ்லாமுக்குப் போகக் கூடாது என எத்தகைய அழுத்தங்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டன? என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அன்பு நண்பர் சிந்தனைக்கு,

திருப்பனந்தாள் மணி என

அறியப்பட்டு இறுதிக்காலத்தில் டி.எம். உமர் ஃபாரூக்காக இரு மாதங்களுக்கு முன் மரித்த தலித் விடுதலைப் போராளியை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை.

ஒரு அறுபதாண்டு கால வாழ்க்கையை தலித் மக்களின் பிரச்சினைகளுக்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். தலித் விடுதலைக்காகச் சட்டை கசங்காத போராட்டங்களை நடத்தியவர் அல்ல அவர். ஆயுள் தண்டனை வரை சந்தித்தவர். அம்பேத்கரை மட்டுமல்ல பெரியாரையும், மார்க்சீயத்தையும் ஆழப் பயின்றவர். தனது கல்வி மற்றும் நடைமுறை அனுபவங்களின் அடிப்படையில் அவர் சில விஷயங்களைச் சொல்லிப் போயிருக்கிறார்.

1. பௌத்த மத மாற்றம், இங்கு அதிலும் குறிப்பாகத் தமிழகத் தலித் மக்களுக்கு அம்பேத்கர் எதிர்பார்த்த விடுதலையைத் தந்துவிடவில்லை. இதைக் கண்டித்துப் பிறிதொரு மதத்திற்கு மாறும் போது அது நம்மை மேலும் தனிமைப் படுத்தி விடக் கூடாது.

பெண்ணெடுக்க, கொடுக்க ஒரு பிரச்சினையில் கூட நிற்க, குழந்தை பேறு, திருமணம், இறப்பு முதலியவற்றில் புனித அங்கீகரிப்பு அளிக்க, சென்று வணங்க, சொல்லி அழ, தொழுகைத் தலத்தில் பங்களிக்க, நம்மைத் தீண்டத் தகாதவராக நினைக்காத ஒரு சமூகம் நமக்கு வேண்டும்.

பொன்னோவியம் போன்றோரால் பௌத்தத்திற்கு மதம் மாற்றப்பட்ட பலரும் அடுத்த தலைமுறையில் இந்துக்கள் ஆயினர். மீண்டும் தீண்டாமைக்கு பலியாயினர். இல்லையா?

ஏற்கிறோம். இந்தத் தீண்டாமையை நம் மீது திணித்தது நம் இந்துக் கடவுள்கள் தான். அல்லது இந்துக் கடவுளர் மற்றும் வேதங்களின் பெயரால்தான். இந்தத் தீண்டாமையிலிருந்து விடுதலை பெற நமக்கு முன் உள்ள ஒரே வழி தீண்டாமையை நம் மீது திணித்த இந்தக் கடவுள்களை மாற்றுவதுதான் என்று சொன்ன மணி அவர்கள் மாறுகிற அந்தக் கடவுள் அல்லாவாகத்தான் இருக்க முடியும். கடைத்தேறச் சேருகிற இடம் இஸ்லாம் ஆகத்தான் இருக்க வேண்டும் என்றார். அங்குதான் மேற்சொன்ன நம் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட வழி உண்டு என நினைவு கூர்ந்தார்.

நீங்கள் இந்த வார்த்தைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் முன் முயற்சியில் தமிழக எல்லைக்குள் ஒரு ஆய்வைச் செய்யுங்கள். கடந்த ஒரு நூற்றாண்டில் இங்கு பௌத்தத்திற்கு மாறிய தலித்கள் மற்றும் இஸ்லாத்திற்கு மாறிய தலித்கள் குறித்த ஆய்வொன்றைச் செய்யுங்கள். பௌத்தமா?, இஸ்லாமா? எது உண்மையில் தலித் மக்களை அரவணைத்துக் கொண்டது? எது உண்மையில் விடுதலை தந்தது என ஒரு அடிப்படை ஆய்வைச் செய்யுங்கள் அதன் பின் முடிவை எடுங்கள்.

நிச்சயம் உங்கள் முடிவு தந்தை பெரியார் சொன்னதைப் போல "இன இழிவு நீங்க இஸ்லாம் ஒன்றே வழி" என்பதாகத் தான் இருக்கும்.

அக்கினிச் சட்டிகள் நம் மீது அள்ளிக் கொட்டும் தீண்டாமை வெப்பத்திலிருந்து நம்மை விடுவிக்கக் கடவுளை மாற்றுவோம் என்கிற சரியான முடிவை வந்தடைந்திருக்கும் நீங்கள் அந்தக் கடவுள் பெரியார் சுட்டிக் காட்டிய மேற்குத் திசையில்தான் உள்ளது, கிழக்கில் அல்ல என்பதைச் சொல்லுங்கள்.

**அன்புடன்,**

**அ. மார்க்ஸ்**

# இரகசிய சித்ரவதைக்கூடங்கள்

# அமெரிக்காவின் செனட் ஆய்வறிக்கை



ஜனவரி 2003ல் சி.ஐ.ஏ.வின் இயக்குனரால் கைது செய்தல், விசாரணை செய்தல் பற்றிய வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்ட போதும் மிக மோசமான நிர்வாக குறைபாடுகள் அங்கே நிகழ்ந்தன. உதாரணத்திற்கு 2003ல் சி.ஐ.ஏ அதிகாரிகள் பின்வரும் அறிக்கை ஒன்றை பதிவு செய்தனர்.

"நாட்டின் பல்வேறு சிறைக்கூடங்களில் சி.ஐ.ஏ.வால் கைது செய்து அடைக்கப்பட்டுள்ள நபர்களில் பலர் யார் என்பது பற்றி சி.ஐ.ஏ.விற்கு மிகக்குறைந்த தகவல்களே தெரியும்"

இவ்வாறு விதிமுறைகளில் இருந்து விலகி செல்வது குறைந்தபட்சம் 2003வரை தொடர்ந்தது. விசாரணை செய்பவர்களுக்கு இடையே குழப்பங்கள் உண்டாகி, அது ஒருவர் மற்றவர் செய்யும் விசாரணை முறையின் பாதுகாப்பு மற்றும் திறன் குறித்து புகார் செய்யும் அளவிற்கு நீண்டது.

முக்கியமான கைதிகளின் விசாரணைகளில் சி.ஐ,ஏ. அனுபவமற்ற பயிற்சியற்ற நபர்களை பணியமர்த்தியது. மொழியாற்றல் மற்றும் பகுத்தறிவாய்தல் திறன் கொண்டவர்களை கொண்டு விசாரணை செய்யப்படாததால் சி.ஐ.ஏ. கைது செய்தவர்களை திறன்பட விசாரிக்க இயலவில்லை.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விசாரிக்க போதுமான திறன்வாய்ந்த அதிகாரிகள் இல்லாததைப் பற்றி சி.ஐ.ஏ.வின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறும்போது அதனை "நடப்பு பிரச்னை" என்று

*வர்ணித்தாலும் அது தொடர்கதையாகவே இருந்தது.*

*மிக முக்கியமானவர்களை கைது செய்து அடைத்து வைத்திருந்த சி.ஐ.ஏ.வின் கைது தளத்திற்கு கருப்பு கைது தளம்* (Black Detention Site) *என்று பெயர். அந்த தளத்தின் தலைவர் பின்வருமாறு புகார் கூறினார்.*

*"சி.ஐ.ஏ. தலைமையகத்தின் மேலாளர்கள் பிரச்னையுடைய, செயல்திறன் குறைவான, புதிய, அனுபவமற்ற அதிகாரி களையோ அல்லது எதற்கு வேண்டு மானாலும் உபயோகப்படுத் தலாம் என கைவசம் வைத்திருந்த அதிகாரிகளையோ இந்த விசாரணைக்கு தேர்வு செய்வதாக தெரிகிறது. அதன் விளைவு மிகச்சாதாரண மான பலன் தான். நான் தைரியமாக கூற விளைவது உபயோகமற்ற உளவு (விசாரணை) என்பதே"*

*பல சி.ஐ.ஏ அதிகாரிகள் விசாரணைக்கு பணியமர்த்தப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் திறன் குறித்து பல அறிக்கைகளை ஆவணமாக்கியுள்ளார்கள். இதில் அவர்களின் வன்முறைகள், கேவலமான நடத்தை போன்றவற்றின் வரலாறுகளும் அடக்கம்.*

*இவையெல்லாம் விசாரணைக்கு பணியமர்த்தப் பட்டவர்கள் இந்த விசாரணைக்கு தகுதியானவர்கள் தானா? அவர்கள் சி.ஐ.ஏ.விலே பணியாற்றுவதற்கு தகுதியானவர்கள் தானா? மிகமுக்கியமான உளவுத்தகவல்களை பெறத் தகுதியானவர்கள் தானா? என்ற கேள்விகளை கட்டாயம் எழுப்பும்.*

*கிட்டத்தட்ட எல்லா நிகழ்வுகளிலும் இந்த பிரச்னைகளைப்பற்றி சி.ஐ.ஏவிற்கு இந்த விசாரணை அதிகாரிகளை விசாரணைக்கு அனுப்புவதற்கு முன்னரே தெரியும்.*

***13. இரண்டு ஒப்பந்த உளவியலாளர்கள் சி.ஐ.ஏ.வின் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறை தந்திரங்கள், நடவடிக்கைகள், மதிப்பீடுகள், மேலாண்மைகளில் முக்கிய பங்கு வகித்தார்கள். 2005 வாக்கில் சி.ஐ.ஏ மிக அதிக அளவில் விசாரணை நிகழ்ச்சியின் நடவடிக்கைகளை வெளியாட்களை வைத்து வேலை வாங்கியது.***

*மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை இன்னும் மேம்படுத்த, செயல்படுத்த, மதிப்பீடு செய்ய சி.ஐ.ஏ இரண்டு உளவியலாளர்களை ஒப்பந்தம் செய்தது. இந்த உளவியலாளர்களின் முந்தைய அனுபவம் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வாழுதல், நழுவுதல், எதிர்த்தல், தப்பித்தல் விமானப்படை (*U.S. Air Force Survival, Evasion,Resistance and Escape (SERE)) *என்ற இடத்தில் பெற்றது. இந்த உளவியலாளர் களுக்கு குறுக்கு விசாரணை செய்த முன் அனுபவமோ, அல்கொய்தா அமைப்பை பற்றிய அறிவோ, தீவிரவாதத்தை எதிர்த்தல் பற்றிய பின்னணியோ அல்லது கைதிகளின் கலாச்சார மற்றும் மொழியறிவோ கிடையாது.*

*சி.ஐ.ஏ.விற்காக இந்த ஒப்பந்த உளவியலாளர்கள் சில விசாரணை கோட்பாடுகளை* learned helplessness *என்ற தத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கினார்கள். (இயலாமையை கற்றுக்கொள்வது என்ற இந்த தத்துவம் உளவியலில் பயன்படுத்தப்படும் பதமாகும். ஒரு சூழ்நிலையை சமாளிக்க இயன்ற போதும் தன்னால் அவ்வாறு செய்ய இயலாது என நம்பும் மனோநிலையை குறிப்பது). இதனடிப்படையில் சில மேம்படுத்தப்பட்ட விசாரணை முறைகளை அபூ சுபைதா போன்ற சி.ஐ.ஏ. விசாரணை கைதிகளுக்கு எதிராக பயன்படுத்த வடிவமைத்தார்கள். தனிப்பட்ட முறையில் அந்த உளவியலாளர் களே நேரிடையாக சில முக்கியமான கைதிகளை இந்த முறைகளை பயன்படுத்தி விசாரணை செய்தார்கள்.*

அவர்கள் மேலும் இந்த மேம்படுத்தப்பட்ட விசாரணை முறைகளை தொடர்ந்து பயன்படுத்தினால் கைதிகளின் மனோநிலை அதை தாக்குபிடிக்குமா என்பதையும் மதிப்பீடு செய்தார்கள். அதில் சில கைதிகளை உளவியலாளர்களே விசாரணை செய்தார்கள்.

அந்த உளவியலாளர்கள் அரசின் வழமையான முறைகளான சி.ஐ.ஏ.விற்கும் வெளிநாட்டு உளவுத்துறையை சேர்ந்தவர்களுக்கும் பாலமாக இருப்பது, விசாரணை முறையின் திறனை மதிப்பீடு செய்வது, வெளிநாட்டு அரசுகளின் கைவசம் இருந்த கைதிகளை விசாரணை செய்யும் போது பங்கேற்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டார்கள்.

2005ல் இந்த உளவியலாளர்கள் சி.ஐ.ஏ.வுடன் இணைந்து செய்யும் இந்த பணிக்கென தனியாக ஒரு நிறுவனத்தை உருவாக்கினார்கள். அதன்பிறகு மிகக்குறுகிய காலத்தில் சி.ஐ.ஏ இந்த திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் வெளிக்குத்தகைக்கு விட்டு விட்டது.

2006ம் ஆண்டில் உளவியலாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனத்துடனான சி.ஐ.ஏ.வின் அடிப்படை ஒப்பந்த மதிப்பு 180 மில்லியன் டாலருக்கும் அதிகமாக இருந்தது.

2009இல் இந்த ஒப்பந்தம் முடிவுக்கு வருமுன் ஒப்பந்ததாரர்கள் 81 மில்லியன் டாலர்கள் பெற்றனர்.

2007ஆம் ஆண்டில் சி.ஐ.ஏ இந்த நிறுவனத்துடன் பலவருடத்திற்கு நட்டத்தினை ஈடு செய்யும் ஒப்பந்தம் ஒன்றை போட்டது. அதன் மூலம் இந்த நிறுவனத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் எதிராக எழும் சட்ட ரீதியான பிரச்னைகளுக்கு இந்த ஒப்பந்தம் பாதுகாப்பு அளிக்கும். இந்த ஒப்பந்தத்திற்கிணங்க சி.ஐ.ஏ ஒரு மில்லியன் டாலருக்கும் அதிகமாக கொடுத்துள்ளது.

2008இல் சி.ஐ.ஏ.வின் கடத்தல், கைது, விசாரணை குழு (சி.ஐ.ஏ.வின் முன்னணி கைது மற்றும் விசாரணை பிரிவு) 85 சதவீதத்திற்கும் அதிகமாக ஒப்பந்ததாரர்களை கொண்டிருந்தது.

## 14. கைதிகளின் மீது பயன் படுத்தப்பட்ட பலவந்தமான கடினமாக விசாரணை உத்திகள் நீதித்துறையாலோ அல்லது சி.ஐ.ஏ.வின் தலைமையகத்தாலோ அங்கீகரிக்கப்படவில்லை

2004க்கு முன்னால் சி.ஐ.ஏ வழமையாக கைதிகளை குளிரில் நிர்வாணமாக்குவது, உணவு முறைகளில் துன்புறுத்துவது போன்ற சித்ரவதைகளை செய்து வந்தது. மேலும் சி.ஐ.ஏ கைதிகளை வயிற்றில் அறைவது குளிர்ந்த நீரில் போடுவது போன்ற யுத்திகளை பல கைதிகளின் மீது இந்த காலகட்டத்தல் உபயோகப்படுத்தியது. இதில் எந்த விசாரணை யுத்தியையும் நீதித்துறை அங்கீகரிக்கவில்லை.

குறைந்தபட்சம் 17 கைதிகள் சி.ஐ.ஏ.வின் இந்த மேம்படுத்தப்பட்ட விசாரணை யுத்திகளுக்கு சி.ஐ.ஏ.வின் தலைமையகத்தின் அனுமதி பெறாமல் ஆட்படுத்தப்பட்டார்கள். கூடுதலாக பல கைதிகள் அங்கீகாரம் பெறப்பட்ட முறைகளில் இருந்து விலகிச்சென்று பல்வேறு உத்திகளை உபயோகப்படுத்தி விசாரிக்கப் பட்டார்கள். அல்லது அங்கீகரிக்கப்படாத முறைகளில் விசாரிக்கப்பட்டார்கள். இந்த நிகழ்வுகள் சி.ஐ.ஏ.வின் செய்திகளில் பதிவாகி இருந்தாலும் இன்னும் சில சம்பவங்களில் சி.ஐ.ஏ.வின் தலைமையகத்தில் இருந்து வந்த மேற்பார்வையாளர்களால் சரியானவையல்ல என்று கண்டறியப் பட்டாலும் இந்த

செயல்களில் ஈடுபட்டவர்களின் மீது மிக அரிதான நடவடிக்கையே எடுக்கப்பட்டது.



**15. கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் அவர்களில் எத்தனை பேர் கைது செய்வதற்கான சட்டரீதியான அந்தஸ்தை பெறவில்லை என்பது குறித்த விரிவான துல்லியமான கணக்கீட்டினை சி.ஐ.ஏ. செய்யவில்லை. எத்தனை பேர் கைது செய்யப் பட்டனர் அவர்களில் எத்தனை பேர் மேம்படுத்தப்பட்ட விசா ரணை முறைக்கு உட்படுத்தப் பட்டனர் என சி.ஐ.ஏ. சொன்ன வை தவறானவை.**

தங்களால் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் அதில் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறைக்கு ஆட்படுத்தப் பட்டவர்கள் எத்தனை பேர் என்ற முறையான முழுப்பட்டியல் சி.ஐ.ஏ.வால் எடுக்கப்படவே இல்லை. சி.ஐ.ஏ.வால் கமிட்டிக்கு தரப்பட்ட பின்னர் மக்கள் முன் வைக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் தவறானவை. 100க்கும் குறைவானவர்களே சி.ஐ.ஏ.வால் கைது செய்யப்பட்டனர், அதில் மூன்றில் ஒரு பகுதியினரே மேம்படுத்தப்பட்ட விசாரணை முறைக்கு ஆட்படுத்தப்பட்டனர் என சி.ஐ.ஏ.வால் சொல்லப்பட்டதும் தவறான தகவலே. கமிட்டியால் மீளாய்வு செய்யப் பட்ட சி.ஐ.ஏ.வின் பதிவுகளில் சி.ஐ.ஏ.வால் கைது செய்யப்பட்டவர்கள் குறைந்தபட்சம் 119பேர் என்பதும் அவர்களில் குறைந்தது 39 பேர்கள் சி.ஐ.ஏ.வின் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறைக்கு ஆட்படுத்தப் பட்டார்கள் என்பது உறுதிசெய்யப் பட்டுள்ளது.

அறியப்பட்ட 119 கைதிகளில் 26 பேர் தவறாக பிடிக்கப்பட்டவர்கள். செப்டம்பர் 2001ம் ஆண்டின் பதிவுக்குறிப்பு அறிவிப்பின்படி (Memorandum of Notification) கைது செய்யும் வரம்பிற்குள் வராதவர்கள். அதில் மனநிலை குன்றியவரும் ஒருவர். அவருடைய கைது அவருடைய குடும்பத் தாரிடமிருந்து தகவலை பெறுவதற்காக செய்யப்பட்டது. இன்னும் இரண்டு பேர் வெளிநாட்டு தொடர்பு சேவையில் இருப்பவர்கள். இந்த இருவரும் இதற்கு முன்னர் சி.ஐ.ஏ.வின் தொடர்பில் இருந்தவர்கள். இன்னும் இரண்டு தனியர்கள் அல்கொய்தாவுடன் தொடர்புடையவர்கள் என சி.ஐ.ஏ.வால் மதிப்பீடு செய்யப் பட்டவர்கள். இவ்வாறு மதிப்பீடு செய்தது சி.ஐ.ஏ.வால் கைது செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையில் சித்ரவதை செய்யப்பட்ட ஒருவர் தந்த புனையப்பட்ட தகவலின் அடிப்படையில் மட்டுமே. செப்டம்பர் 2001ம் ஆண்டின் பதிவுக்குறிப்பு அறிவிப்பின்படி (Memorandum of Notification) கைது செய்யும் வரம்பிற்குள்



வரவில்லை என்ற போதும் இவர்கள் மாதக்கணக்கில் காவலில் இருந்தனர். சி.ஐ.ஏ.வின் பதிவேடுகள் மற்ற பல கைதிகளின் சிறைவாசத்தை நியாயப்படுத்தும் எந்த தகவலையும் கொண்டிருக்கவில்லை.

சி.ஐ.ஏ.வின் தலைமையகம் குறைந்தபட்சம் நான்கு கைதிகளை நேசநாட்டு சிறையில் வைக்கும்படி அறிவுறுத்தியது. ஏனெனில் அவர்கள் பதிவுக்குறிப்பு அறிவிப்பின்படி (Memorandum of Notification) கைது செய்யும் வரம்பிற்குள் வராதவர்கள். நேசநாடுகள் இந்த கைதிகளை பிடித்துவைக்க தனிப்பட்ட எந்த காரணமும் இல்லை.

சி.ஐ.ஏ.வினரால் கைது செய்யப் பட்டவர்களைப் பற்றிய ஒரு முழுமையான கணக்கீடு என்பது சாத்தியமற்றது. ஏனெனில் சிலரின் விஷயத்தில் பதிவேடுகளே இல்லை. சிலரின் விஷயத்தில் அறையும் குறையுமான தகவல்கள். சி.ஐ.ஏ.வின் கோபால்ட் (COBALT) சிறைச்சாலைப் பற்றிய 2002ம் ஆண்டின் தகவல்கள் கிட்டத்தட்ட எதுவுமே இல்லை. அதேப்போல் சி.ஐ.ஏ.வின் கிரே (GRAY) சிறைச்சாலை கைதுகளைப் பற்றியும் எந்த தகவலும் இல்லை.

**அபுஅஃப்ரஹ்**


**வரப்பெற்றோம்**

**குர் ஆன் கூறும் கிருஸ்தவம்**

**பாஸ்டர் எஸ். விஜயன்**

வெளியீடு

**ஆர். ரஹ்மான் டிரஸ்ட்**

**சென்னை**

**விலை ரூபாய் 80.00**

**பக்கங்கள் 118**



# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!



### விடுதலைப் போரின் மறைக்க முடியாத ஆனால் மறைந்துவிட்ட அத்தியாயம்

**இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு.**

**அவர் ஏன் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு அப்படி அஞ்சினார்?**

கோபிநாத் போஸ், சுபாஷ் சந்திர போஸ் இன் பாட்டனாருக்கு புருண்டர்கான் என்று பெயர் சூட்டினார். அவருடைய சேவை களைப் பாராட்டி அவருக்கோர் கிராமத்தைப் பரிசாகத் தந்தார்கள். அந்தக் கிராமம் புருண்டர்கான் பெயரில் புருண்டர்பூர் என்றே அழைத்தார்கள்.

சுபாஷ் சந்திர போஸ் இன் குடும்பத் தினர் நீண்ட நாள்கள் வங்காள நவாப்களின் அரசவையில் அமைச்சர்களாகவும், கவர்னர் களாகவும், இருந்ததால் இவர்களின் குடும்பத் தினர் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குடையவர்களாக இருந்தார்கள்.

தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருந்ததால் புருண்டர்கான் கிராமத்தின் தண்ணீர் பஞ்சம் தீர்ந்திட ஒரு பெரும் ஏரியை வெட்டினார்கள். அந்த ஏரியில், வேலை செய்த தொழிலாளர்கள் தங்கள் மண்வெட்டிகளை 'கோடல்' என அழைத்தார்கள். இந்தக் கோடல்களை அவர்கள் தினமும் வேலை முடிந்தவுடன் ஓர் இடத்தில் வைத்தார்கள். அந்த இடத்தைக்

கோடல் என அழைத்தார்கள். இந்த இடம் பின்னர் ஒரு சிற்றூராக மாறியது. அதன் பெயர் 'கோடாலியா' என அழைக்கப் பட்டது. இந்த இடத்தில் தான் சுபாஷ் சந்திர போஸின் தந்தை ஜானகி நாத் போஸ் பிறந்தார்கள். இதனால் போஸ் குடும்பத்தினர் அந்தக் கிராமத்தின் மீது மிகவும் பற்றும் பாசமும் மிகுந்தவர்களாக இருந்தார்கள்.

இந்தப் பாசத்தையும் நேசத்தையும் அவர்கள் அந்தக் கிராமத்தை வளர்ந்தெடுப்பதில் செலவிட்டார்கள்.

இங்கேதான், நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் பிறந்தார்கள்.

ஜானகிநாத் போஸ் அவர்களும் அவர்களின் குழந்தைகளும் இந்தக் கிராமத்தின் மீது மிகுந்த பற்றுடையவர்களாக இருந்தார்கள்.

இன்றைய ஒரிசா, அன்றைய வங்காள சமஸ்தானம் அல்லது பிராவின்ஸ் இல் ஒரு பகுதியாக இருந்தது. அண்மைக்காலம் வரை 'கட்டாக்' என்ற பிரதேசம்தான். இன்றைய ஒரிசாவின் தலைநகராக இருந்தது. பின்னர்தான் புவனேஷ்வர் என மாற்றப் பெற்றது.

சுபாஷ் சந்திர போஸின் தாயார் பிரபாபதி டட் என்ற வம்சா வழியைச் சார்ந்தவர்கள். இவர்கள் கல்கத்தாவின் தெற்குப் பகுதியை சார்ந்தவர்கள் .

தந்தை ஜானகிநாத் போஸ் அவர்களுக்கும் பிரபாபதி டட் அவர்களுக்கும் 1897 இல் கொடில்லா (ஒரிசா) சுபாஷ் சந்திர போஸ் ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்தார்.

சுபாஷ் சந்திர போஸுக்கு எட்டு அண்ணன்மார்களும் ஆறு சகோதரி களுமிருந்தார்கள்.

ஜானகிநாத் போஸ், சுபாஷ் சந்திர போஸின் தந்தை வழக்கறிஞர் பட்டம் பெற்று, கட்டாக் (அப்போதைய ஒரிசா) தலைநகரில் வழக்கறிஞராகப் பணி புரிந்து வந்தார்கள். இந்த வழக்கறிஞர் தொழிலில் படிப்படியாக முன்னேறி அரசு வழக்கறிஞர் (Government Pleader) என்ற நிலைக்கு வளர்ந்தார்கள். ஜானகிநாத் போஸ், அவருக்கு ஆங்கிலேயே அரசு ராவ் பகதூர் என்ற பட்டத்தை வழங்கிற்று.

1912 இல் ஜானகிநாத் போஸ் பெங்கால் ஆங்கிலேயே மேற்கு வங்க சட்டசபையின் உறுப்பினர் ஆனார். ஆங்கிலேயே அரசிடம் சில பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்றிருந்தாலும், அவர் இந்திய தேசிய காங்கிரஸ் இல் ஆர்வமுடையவராக இருந்தார்.

சுபாஷ் சந்திர போஸும் அவருடைய சகோதரர் சரத் சந்திரபோஸும் காங்கிரஸில் ஆர்வம், காட்டி வந்தார்கள். அதற்கு தந்தை ஜனஹிநாத் போஸ் பெரிய அளவில் உதவி உள்ளார்கள்.

1930 இல் ஒத்துழையாமை இயக்கத்தை காந்திஜி அறிவித்த போது, ஆங்கிலேயே அரசு அத்தனைக் கெடுபிடிகளையும் கட்டவிழ்த்து விட்டது. அதனை எதிர்க்கும் முகமாக ஜானகிநாத் போஸ் அவர்கள் ஆங்கிலேயே அரசு தனக்குத் தந்திருந்த "ராஜ் பகதூர்" பட்டத்தைத் துறந்தார்கள்.

சுபாஷ் சந்திர போஸ் ஏனைய குழந்தைகளைப் போலவே கட்டாக்கில் இருந்த புரட்டஸ் ஸ்டான்ட் பாடசாலையில் 1902 முதல் தொடக்கக் கல்வியை பெற்றார்.

1909 இல் இந்தக் கல்விக் கூடத்தை துறந்து (Ravenshaw Colligiate School) ராவின்ஷா கொலிஜியேட் பள்ளிக் கூடத்தில் சேர்ந்தார். பள்ளிக் கூடத்தில் மாணவர் களிலும் ஆசிரியர்களிலும் ஒரியா மொழியை பேசுபவர்களும் பெங்கால் மொழி என்ற வங்காள மொழியைப் பேசுபவர்களும் நிரம்பவே இருந்தார்கள். அதேபோல் இந்துக்களும் முஸ்லிம்களும் நிரம்பவே இருந்தார்கள். அவர்களுக்குள் ஒரு தலை சிறந்த ஒற்றுமையும் ஒருமைப்பாடும் சகோதரத்துவமுமிருந்தது.

அதேபோல் ஜானகிநாத் போஸ் இன் குடும்பம் அலுவலகம் இவற்றிலும் ஒரிசா, வங்கதேசம் ஆகியவற்றைச் சேர்ந்த இந்துக்களும் முஸ்லிம்களும் வேலை செய்தார்கள். அவர்களிடையே இருந்த ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும்

பார்த்த சுபாஷ் சந்திரபோஸ், சரத் சந்திர போஸ் ஆகியோர் அனைவர் மீதும் அதிக அன்பும் கொண்டவர்களாக இருந்தார்கள். (அப்போது இந்துத்துவ சக்திகள் இன்றைய நாள்களைப் போல் நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைபாட்டிற்கும் உலை வைத்திடும் அளவில் வலுவைப் பெற்றிருக்கவில்லை).

ஆனால் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸின் பிற்றை நாள் வாழ்க்கையை வைத்து பார்த்திடும்போது அவர் தன்னுடைய எல்லா இரகசிய திட்டங்களுக்கும் செயல்களுக்கும் முஸ்லிம்களையே நம்பினார் என்பது ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

இந்த உண்மையை அவருடைய வாழ்க்கை வரலாற்றை அல்லதுஅவர் ஏற்படுத்திய **INA** என்ற இந்திய தேசிய படை (INDIAN NATIONAL ARMY) இன் வரலாற்றைப் படிப்பவர்களும் எளிதில் புரிந்து கொள்ள லாம்.

National Book Trust என்ற இந்திய அரசின் வெளியீடுகளே இந்த உண்மைகளைப் பளிச் சென சொல்லும்.

அன்றைய நாள்களில் இந்து முஸ்லிம் ஒற்றுமையை பற்றியோ அவர்கள் இந்திய விடுதலைப் போரில் ஒன்றாய் நின்றதைப் பற்றியோ இவ்வளவு விரிவாகப் பேசிட வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஆனால் இன்று இந்தியா வகுப்பு வெறி - இந்துத்துவா - பாசிசம் இவற்றின் பிடியில் வீழ்ந்துவிட்டதால் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிட வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது.

இந்தக் குறிப்புகளோடு நாம் சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் வாழ்க்கைக்குத் திரும்புவோம்.

புதிய பள்ளியில் சுபாஷ் சந்திர போஸ் தன்னுடைய மெட்ரிக் என்ற பள்ளி படிப்பில் முதன்மை மாணவராகத் தேறினார்.

படிப்பில் அவர் காட்டிய ஆர்வத்தால் தொடர்ந்து படிக்க அவரை கல்கத்தா விலுள்ள தொன்மையும், புகழும் வாய்ந்த அரசு கல்லூரி என அறியப்படும் பிரசிடென்ஸி கல்லூரியில் 1913இல் சேர்த்தார்கள். கல்லூரி நாட்களில் அவர் படிப்பதைப் போல் மக்கள் சேவையிலும் மகிழ்ச்சி கண்டார்.

'கட்டாக்' ஐ சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் அவர் பல முறை சமுதாய சேவைகளைச் செய்துள்ளார். ஒரு முறை காலரா என்ற தொற்று வியாதியின் போது, கிராமத்துப் பகுதிகளில் சேவைக்கு சென்ற அவர் கிராமப் புறங்களில் மக்கள் ஆடு மாடுகளைப் போல் செத்து மடிவதையும், கல்வி கைவரப்பெறாதவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இது சுபாஷ் சந்திர போஸின் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

அதேபோல் ஆன்மீகத் தேட்டத்தில் கோயில்கள் ஆசிரமங்கள், வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் இவற்றையும் சுற்றிப் பார்த் தார். இங்கெல்லாம் சுபாஷ் சந்திர போஸுக்கு ஏற்பட்ட தாக்கங்களை அவருடைய வாழ்க்கை வரலாறு இப்படிப் பதிவு செய் கின்றது.

They visited many Ashrams and met many Sadhus, what illusioned him was that in most of these places supersititions and meaningless rituals rather than the basic tents of Hindu religion were the order of the day. What shocked young Subash was the casteism and sectarianism praciticed by protagonists of religion at such holy places.

அதாவது, அவர்கள் (சுபாஷ் சந்திர போஸும் அவருடைய நண்பர்களும்) அனேக ஆசிரமங்களையும் சென்று பார்த்தார்கள். பல சாதுக்களைக் சந்தித்தார்கள். இவற்றி லெல்லாம் அவரிடம் ஒரு பிரம்மையை ஏற் படுத்தியது என்னவெனில் அங்கு இடம் பெற்ற ஆதாரமற்ற மூட நம்பிக்கைகள் இந்து மதத்தின் அடிப்படைகளோடு சம்மந்த மில்லாத அர்த்தமற்ற மதச் சடங்குகள், இன்று அவரிடம் ( சுபாஷ் சந்திர போஸிடம்) ஒரு பிரம்மையை ஏற்படுத்தியது. இதில் இளம் சுபாஷ் சந்திர போஸ் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது என்னவெனில் அங்கு கடைப்பிடிக்கப்பட்ட ஜாதீயமும், பிரிவினை களுந்தான்.

இன்ஷா அல்லாஹ்

**தொடரும்**

# காந்தியாரைக் கொன்ற கூட்டம் பற்றி "பிளிட்ஸ்"

# காந்தியாரைக் கொன்ற 'கோட்சே' கூட்டமே காமராஜரையும் குறிவைத்தது



**புதுடில்லிக் கலவரம் பற்றி பிளிட்ஸ் தரும் திடுக்கிடும் தகவல்கள்**

*"ரத்தக்கறை தோய்ந்தது கடந்த திங்களன்று - தலை நகரத்தில் காவி உடை அணிந்தும், உடை அற்ற அப்பட்டமான நிர்வாணக் கோலத்துடனும் வந்த சாதுக்கள், திரிசூலம், பகவத் ஜெண்டாக்கள், பெட் ரோலில் நனைக்கப்பட்ட கந்தல் துணிகள் இவைகளைப் போர்க் கருவிகளாகப் பயன் படுத்தி தீ வைத்தும், ரத்த பெருக்கெடுத் தோடும்படி செய்த கடுங் காட்டு மிராண்டித் தனம் 'தாந்தே'யின் காவியமான புகழ்பெற்ற இங்கிலீஷ் (எழுத்தாளர்) இன்ஃப்பனோ கதையை நினைவுபடுத்துவதாகவே இருந்தது.*

*('தாந்தே' எழுதிய அந்நூலில் நரகம் பற்றி கற்பனையாக வர்ணிக்கப்பட்டுள்ளது.)*

*டில்லியில் சாதுக்கள் நடத்திய போர்க்களத்தை விரைந்து சென்று பார்த்த பத்திரிக்கையாளர்களுக்கு "நரகத்தின் வேட்டை நாய்கள்" கட்டவிழ்த்து விடப் பட்டனவோ என்று எண்ணும் வகையில் வளைந்து, உடைந்த திரிசூலங்களுக்கும், தீ ஜ்வாலைகளும் ஏராளமான 'மலைப் பிஞ்சு'களும், எரிந்த கட்டடங்களையும், கார்களையும், ஏன் மனிதர்களையும் கூட கொளுத்திய காட்சிகளுமே பார்லிமெண்ட் டிற்கு முன்பும் அதன் அருகாமையிலும் தென்பட்டன.*

**ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்ச்சியே**

*நாட்டின் அதிகாரப் பீடத்தை வெறிகொண்ட மிருகத்தனமான கூட்டம் கைப்பற்றவே இதை நடத்தியது என்று எண்ணும் வகையில் அக்காட்சிகள் இருந்தன. சாதுக்கள் என்று இந்தப் புனித மனிதர்கள் கடவுள், மதம், புனிதமான பசு இவைகளின் பெயரால் சற்றும் விரும்பத்தகாத, மிகவும் அருவருப்புக்குரிய இந்தப் பேய்த்தன நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பது அந்நிகழ்ச்சிகள் நடைபெற்ற பிறகுதான் பலரும் உணரும் நிலையில் ஏற்பட்டது. கடவுள், மதம், பசு என்ற இவைகளை எல்லாம் ஜனசங்கம், ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வன்முறை ஈட்டிகள் மறைக்க உதவிய போர்வைகளே யாகும்!*

*இந்த இரத்தக் கறையேறிய திங்கட் கிழமை சம்பவங்கள் நமது மதச்சார்ப்பற்ற அரசியல் நாகரிகக் கோட்பாடுகள் மீது ரத்தக்கறை படியும்படிச் செய்துவிட்டன. பசுவதையை எதிர்த்து சாதுக்கள் நடத்திய இந்தக் கிளர்ச்சியாலும் அதன் பின்னால் ஒளிந்துள்ள அதன் அமைப்பாளர்களாலும் அவர்களுக்குக் கூலி கொடுக்கும் எஜமானர்*

களாலும் தலைநகரம் வெட்கித் தலைகுனிந்து அதிர்ச்சியால் தாக்குண்டு, சின்னாபின்னப் பட்டிருக்கிறது.

அரசின் மதச்சார்பின்மை ஜனநாயகம் என்ற அரண்களைத்தாக்கி ஏதுமறியாதவர் களின் ரத்தத்தைக் குடித்ததோடு அடங்காமல் அதே நாளில் கோட்சேக்களும், அம்பேத்கர் களும், காங்கிரஸ் தலைவர் காமராசர் அவர்களது வீடு நோக்கி, தடிகள், கடப்பாறைகள், தீப்பந்தம் சகிதமாகச் சென்று, காந்தியைப் போலவே அவரைக் (காம ராஜரை) கொலை செய்ய அவர் வீட்டிற்குத் தீ வைத்தனர்.

காமசராசர் தப்பித்தது மிகவும் அதிசயமானது. "புனிதமான" சங்கராச்சாரி கள், அவர்களது 'புனித சீடர்கள்' ஆகியவர் கள் ஒலி பெருக்கிகள் முழங்கிய காட்சியைக் கண்ட நான் அவர் 'தப்பித்தது தெய்வாதீன மானது' என்று சொல்வதற்கே வெட்கப் படுகிறேன். ஏனெனில் போலி மதத்தின் இந்தப் புனிதமனிதர்கள் தெய்வத்தையே அவர்களது பெட்ரோல் டப்பாவிற்குள் அடைத்து விட்டனரே!

ரத்தமும், தீயும் நிறைந்த இந்தப் பின்னணியில் நடைபெற்ற ஒரு பத்திரிகை யாளர் சந்திப்பில் திரு. ஏ.என். ஜா, திங்களன்று வன்முறைச் சம்பவங்கள் தலைநகரைப் பிடித்து உலுக்கும் வரையில் ரகசிய போலீசார் மூலம் தனக்கு ஏதும் தகவல் வரவே இல்லை யென்று குறிப்பிட்டார்.

ஊர்வலம் நடத்தியவர்களால் நான் ஏமாற்றப்பட்டதாகவும், தவறாகத் திசை திருப்பிவிடப்பட்டதாகவும் அவர் பேட்டியில் கூறியது, அவரது திறமையின்மையை அப்படியே ஒப்புக் கொண்டதாகும்.

## கலவரத்துக்கு அதிகாரிகளும் உடந்தையா?

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் அக்டோபர் சம்பளத்தை முதல் தேதி பெற மறுத்த போலீஸ்காரர்களின் வெறுப்பு இதோடு சேர்ந்து கொண்டு. கடந்த ஒரு மாதகாலமாக டெல்லித் திருநகரில் ஜனசங்கம், ஆர்.எஸ்.எஸ். ஆகியவைகளாலும் அவர்களுக்குத் தாராளமாகப் பணம் உதவும் இந்திய ஏகபோகப் பெரு முதலாளிகளாலும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து பசுவதையை அடியோடு தடுக்க வற்புறுத்தவும் செய்யப் பட்டு வந்த ஏற்பாடுகள் ஆயத்தங்கள் பற்றி தமக்கு ஏதும் தெரியாது என்று டில்லி அதிகார வட்டாரங்கள் மறுத்தபோதிலும் பொது மக்களுக்கு இது தெளிவாகத் தெரிந்ததே!

காரணம், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு பசு செத்ததை வைத்து கண்டன கூட்டங்கள் நடத்தக்கோரும் போஸ்டர்கள் ஏராளமாக டில்லியில் ஒட்டப்பட்டன. அந்தப் பசு கொல்லப்பட்டது என்று அதில் விளம்பரப்படுத்தப்பட்டது. இந்தச் சுவரொட்டிகளை ஒட்டியவர்களை அதிகாரி கள் கைது செய்ததோடு அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க இருந்த பானை வயிறுள்ள லாலா ஒருவரையும் கைது செய்தனர்.

15 நாட்களுக்கு முன் டில்லி முனிசிபல் கார்ப்பரேசன் பிரபல ஜனசங்கி ஒருவர், பசுவுக்கு இழைக்கப்படும் வன்முறை கொலைக்கெதிராக இன்னும் சில நாட்களில் தலைநகர் ஆர்த்தெழுந்து கிளம்பும் என்று மார் தட்டினார்.

இப்படிப்பட்ட எந்த முன்னோடிச் சம்பவங்களும் நமது அதிகார வர்க்கத்தினரால் கவனிக்கப்படவுமில்லை. எனவே, டில்லி லெஃப் கவர்னர் திரு. ஜா காலந்தாழ்ந்த நிலையில் இனிமேல் உள் எதிரிக்கு இடம் தரமாட்டோம் என்று கூற வேண்டியதாயிற்று.

எல்லாவற்றையும் விட வேடிக்கை என்னவென்றால் உள்துறை இலாகா காரியதரிசியான திரு. எச்.பி. சிங், விடுத்த அறிக்கையில் யூனியன் அரசாங்க அதிகாரிகட்கு என்ன நடைபெறபோகின்றது என்பது முன்கூட்டியே நன்கு தெரியும் என்றும், எனவேதான் அவர்கள் போதுமான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தனர் என்றும் குறிப்பிட்டதுதான்! இதற்கு ஆதாரமாக இவர் பார்லிமென்ட்

சதுக்கத்தில் மாத்திரம் 1900 போலீஸ்காரர் களை நிறுத்தினோம் என்று கூறி போலீசாரால் வன்முறை ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கு ஆதரவு தேடியுள்ளார்.

தமக்கு முன்கூட்டி எதுவும் ரகசிய உளவுத்துறையினரால் தகவல் தரப்பட வில்லை என்று லெஃப் கவர்னர் கூறியதை மறுக்கும் வகையில் திரு. சிங் நிறைய பிரயாசை யெடுத்துக் கொண்டார். எனினும், ஹால் நிறையக் கூடிய நிருபர்கள் முன் இது செல்லுபடியாகவில்லை.

## காந்தியைக் கொன்ற ஆர்.எஸ்.எஸும் கலந்து கொண்டது

ஜில்லா மாஜிஸ்திரேட் திரு. தாண்டன் நிலையோ பத்திரிகையாளர் பேட்டியின் போது மிகவும் பரிதாபமாக இருந்தது. "கோமாதா" வின் பெயரால் பார்லிமென்டின் முன்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் யார், யார்? என்ற கேள்வியை அவரிடம் பத்திரிகையாளர்களால் கேட்கப் பட்டபோது அமைப்பாளர்களில் ஒன்று ஜனசங்கம், மற்றொன்று ஆரிய சமாஜ் என்று கூறினார். ஆனால் அவருக்கு ஆர்.எஸ்.எஸ்சை ஞாபகம் வைத்திருக்க முடியவில்லை. பாவம் சங்கராச்சாரிகளின் நிர்வாணச் சாதுக்களும் மந்திர உச்சாடனம் ஏறிய முனிகளுக்கும் பின்னால் முன்பு காந்திஜியையும், அண்மை யில் கிரந்திக் குமாரையும் கொலை செய்த கொலை பாதகர்களான ஜனசங்கத்தினரும் ஆர்.எஸ்.எஸ். காரர்களும் இருந்தனர் என்பதே அப்பட்டமான கல்லைப் போன்ற உண்மை யாகும்.

கிரந்திகுமாரும் மற்றவரும் உயிருடன் எரிக்கப்பட்டனரே! கிரந்தி குமாரும், இன்னும் இரண்டு பேரும் சோனிப்பட்டில் சில மாதங்களுக்கு முன் பஞ்சாபி சபாவுக்கு எதிராக, ஜனசங்கத்தினரும் ஆர்.எஸ்.எஸ். காரர்களும் ரத்த வெறிகொண்ட கிளர்ச்சி நடத்திய போது உயிருடன் எரிக்கப்பட்ட வர்கள் என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

ஜனசங்கத்தைச் சேர்ந்த சுவாமி ராமேஸ்வனாந்த என்பவர்தான் பெட்ரோல் டின்களும் வைத்திருந்த சாதுக்களை(?) பார்லிமென்ட் கட்டடத்தை நோக்கி படையெடுக்கும்படி ஏவியவர், காவி உடைச் சாமியார் பேச்சுத்தான் ரத்தக் களறியைத் தொடங்கி வைத்தது.

காந்தி கொலை நாட்களைப் போலவே ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அவர்களது யூனிஃபாரத்துடனேயே "மார்ச்" செய்து சென்றனர். அவர்கள் பிரதான ஊர்வலத் திலிருந்து பிரிந்து சென்று அருவருக்கத்தக்க பல செயல்களைச் செய்து விட்டு மீண்டும் அவர்கள் வந்து சேர்ந்து கொண்டனர்.

## ஆர்.எஸ்.எஸ்.ஸின் அருவருக்கத்தக்க வெறியாட்டம்

மிகவும் கேவலமான முறையில், சூறைகளை நடத்தியவர்கள் அவர்களே! ஒரு சாதுவின் தலைமையில் சென்று அகில இந்திய ரேடியோ நிலையம் முன் சென்று தீ வைத்துக் கொளுத்தியவர்களும் அவர்களே. ஆனால் அங்கிருந்த பணியாட்களால் அவர்கள் ஸ்டியோவிற்குத் தீ வைக்க முனைந்தபோது நையப்புடைக்கப்பட்டார்கள்.

டிரான்ஸ்போர்ட் பவனம், ஆகாச வாணி பவனம், பத்திரிகையாளர் பவனம் ஆகியவைகளுக்கருகில் இருந்த கார்களை நொறுக்கியும் தீ வைத்ததுமான செயல்கள் அத்தனையும் நடத்திய அனைவரும் ஆர்.எஸ்.எஸ். கட்சியில் பயிற்சி பெற்ற தொண்டர்களே.

அதே ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள்தான் பார்லிமென்ட் தெருவின் நடுவில் உள்ள பட்டேல் சிலைக்கு அருகில் பிரிந்து சென்று அங்கு அசோகா ரோட்டிலிருந்து சில கட்டடங்களைத் தாண்டி குதித்து ஜந்தர் மந்தர் ரோட்டிலுள்ள காமராசர் இல்லத்தைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டவர்கள் நாசவேலை நடத்தியவர்களாவர்.

லெஃப் கவர்னர் ஜா-வும், உள்துறை காரியதரிசி சிங்-கும் கலந்து கொண்ட பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் விநியோகிக்கப்பட்ட பிரஸ் இன்ஃபர்மேஷன் பீரோவினால் சற்று நேரத்திற்குப் பிறகு வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில்

காங்கிரஸ் தலைவர் வீட்டின் முன் கற்கள் மட்டுமே வீசப்பட்டன என்று குறிப்பிட்டிருந்தது. பிற்பகல் 3 மணிக்கு ஜனசங்கம், ஆர்.எஸ்.எஸ். குண்டர்களிடமிருந்து மிகவும் அதிசயமாக காமராசர் உயிர் தப்பினார் என்பது கூட மாலை 7.30 மணிக்கு இந்த இரு பிரமுகர்கட்கும் (லெஃப் கவர்னருக்கும், உள்துறை காரியதரிசிக்கும்) தெரியவில்லையா?


**அரசாங்க அதிகாரிகளும் உடந்தையே!**

'பிளிட்ஸ்' நிருபர் தரும் இந்தப் படப்பிடிப்புல் பல உண்மைகள் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட வேண்டியவர்கள் அல்லவா? பார்பானின் காலித்தன குண்டாத் தனத்தால் காமராசர் உயிருக்கு உலை வைக்கும் முயற்சிக்கு அரசாங்க அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கின்றனர் என்பது புரியவில்லையா?

---


# ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு

**மு. குலாம் முஹம்மத்**




வரலாறு முழுவதும் வல்லரசாக இருந்த பிரிட்டன் என்ற ஆங்கில நாடு இடைக்கால வல்லரசாக வாழ்ந்த ரஷ்யா, இன்றைய ஒரே வல்லரசாக வாழ்ந்து கொண்டி ருக்கும் அமெரிக்கா, இவற்றை வீழ்த்திக் காட்டிய வீரம் செறிந்த மக்கள்தாம் ஆப்கானிஸ்தான் மக்கள், அந்த வீர முஜாஹித்கள். 1979இல் ஆப்கானிஸ்தானில் புகுந்த ரஷ்யா என்ற வல்லரசை எப்படி வீழ்த்தி னார்கள் அதற்கு அவர்கள் செய்த தியாகங்கள் இவற்றின் வரலாற்றுச் சுவடி. இந்த நூல் தொடக்கத்தில் 'சமரசம்' இதழில் தொடராக வந்து பின்னர் நூலாக வெளிவந்தது.

"ஒரு புதினத்தின் விறுவிறுப்பைப் பெற்றோம் படிக்கும் போது" என வாசகர்களால் பாராட்டப் பெற்றது. இன்ஷா அல்லாஹ் விரைவில் நான்காம் பதிப்பு வெளிவரும்.

**பக்கங்கள் 176 - விலை ரூ. : 60.00**

## வேர்கள் வெளியீட்டகம்

52/1, கோனிக்கா பில்டிங், 4வது மாடி
மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001


# கல்பர்கி சுட்டுக் கொல்லப்பட்டார்! அடுத்த இலக்கு பேராசிரியர் பகவான்!

பிரபல கன்னட எழுத்தாளரும், முன்னாள் துணை வேந்தருமான திரு. கல்புர்கி சங்பரிவாரங்களால் 30.08.2015 ஞாயிறு காலை தன் வீட்டில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

திரு. கல்புர்கி மூடநம்பிக்கைக்கு எதிராக தொடர்ந்து பேசியும், எழுதியும் வந்தார். மூட நம்பிக்கைக்கு எதிராக கர்நாடக அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார்.

இவர் மறைந்த ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் யு.ஆர். அனந்த மூர்த்தியின் நெருங்கிய நண்பர். மூடநம்பிக்கைக்கு எதிராக இவர் தொடர்ந்து பரப்புரை செய்ததால் மூடநம்பிக்கையை ஆதரிக்கும் பாசிச கும்பலான பஜ்ரங் தளம், விஸ்வ ஹிந்து பரிஷத், சிறீராம் சேனா உள்ளிட்ட இந்துத்துவா அமைப்புகள் மாநிலம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டன. தார் வாட் மாவட்டம் கல்யாண் நகரில் உள்ள கல்புர்கியின் வீட்டின் முன்பாக திரண்ட இந்துத்துவா அடிப்படைவாதிகள் கல்வீசி தாக்குதல் நடத்தி, கொலை மிரட்டல் விடுத்தனர்.

இந்நிலையில் நேற்று பாசிச பயங்கரவாதிகள் முன்னாள் மாணவர்கள் போல் நடித்து அவரது வீட்டிற்கு சென்று








அவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்துவிட்டு தப்பியோடி விட்டனர். சங்பரிவாரங்களினால் ஆபத்து இருந்தும் மாநில அரசு ஒரு எழுத்தாளரும் முன்னாள் துணைவேந்தருமான ஒரு சமூக செயற்பாட்டாருக்கு பாதுகாப்பு கொடுக்கத் தவறியது கண்டிக்கத்தக்கது.

கர்நாடக மாநிலம் இந்துத்துவ பாசிச அடிப்படைவாத குழுக்களான பஜ்ரங் தளம், விஸ்வ ஹிந்து பரிஷத், சிறீராம் சேனா போன்ற அமைப்பின் செயல்பாடுகளை ஒடுக்காவிட்டால் மனிதநேயமே இல்லாத நிலை ஏற்படும்.

கல்புர்கி சுட்டுக் கொல்லப் பட்டதற்கு கர்நாடக முதல்வர் சித்தராமையா, உள்துறை

**தொடர்ச்சி 45ம் பக்கம்**

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங்** **தமிழில் : மு. குலாம் முஹம்மத்**



**இன்றைய நவீன உலகைப் பற்றி யார் மேற்கொள்ளும் பார்வையும் முழுமையானதோர் பார்வையாக அமைந்திடாது. அவர் இஸ்லாத்தை புரிந்திடவில்லை என்றால்,**

**ஆனால் இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், நாம் முஹம்மத் (ஸல்) ஐ புரிந்திட வேண்டும். முஹம்மத் (ஸல்)-ஐ ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப்படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள். அவர்களைப் பற்றிய ஏராளமான இலக்கியங்களே அவரது வாழ்க்கையை நமக்கு நிறைவான கோணத்தில் நமக்குச் சொல்லுகின்றன. எஞ்சியன வேண்டுமென்றே திரிக்கப்பட்டு தவறான எண்ணங்களையும், சிந்தனை களையும் விதைக்கின்றன.**

**ஆனால் கரண் ஆம்ஸ்டிராங்கின் இந்த வரலாறு அந்தக் கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுவு நிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

**இந்த நூல் பற்றி ஆங்கில நாட்டு பத்திரிகை** - SUNDAY TIMES

# மக்கத்து மக்களின் இன்னொரு குணம்

மக்காவைச் சுற்றி வியாபாரம் தழைத்துக் கொண்டிருந்தது. முன்னர் மக்காவுக்கு வர தயங்கிய வெளிநாட்டு வியாபாரக் கூட்டங்கள் இப்போது உற்சாகத்துடன் மக்காவுக்கு வந்து போனது.

குரைஷிகள் மக்காவை பல்வேறு உத்திகள் வழி அமைதி பூங்காவாக ஆக்கி இருந்தார்கள். (இவற்றைச் சென்ற இதழில் விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம்)

கஆபா-வோடு வியாபாரத்தையும், புனித பயணங்களையும் வெற்றிகரமாக ஒன்றாகப் பிணைத்திருந்தார்கள் குறைஷிகள் அதாவது ஆன்மீகத்தையும் பொருளாதார நடவடிக்கைகளையும் ஒன்றாக இணைத் திருந்தார்கள்.

இதனால் எப்போதும் ஒரு பெரும் மக்கள் கூட்டம் மக்காவில் கஆபாவைச் சுற்றி வந்து கொண்டிருந்தது. இப்போது குரைஷிகள் இன்னொரு ஏற்பாட்டையும் செய்தார்கள். அது, கஆபாவைச் சுற்றி ஹரம் ஷெரீஃப் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். அது 25 மைல் சுற்றளவில் அமைந்தது. இதைச் சுற்றியும் குறைஷிகளே தங்கள் வசதியுமிடங் களை அமைத்துக் கொண்டார்கள். இந்த 25 மைல் சுற்றளவும், 'ஹரம் ஷரீஃப்'இல் புனிதமான இடம் என அறிவித்திருந்தார்கள். இந்த 25 சுற்றளவுக்குள் எல்லோரும் அடைக்கலம் புகலாம். அவர்களை யாரும் தாக்கவோ துன்புறுத்தவோ மாட்டார்கள். எதிரிகளுக்கும் அங்கே இடமுண்டு. பழி

தீர்க்கவோ பகை தீர்க்கவோ அங்கே அனுமதியில்லை என அறிவித்திருந்தார்கள். குறைஷி குலத்தவர்கள் இதை செயல் படுத்தியும் காட்டினார்கள். இதனால் வியாபாரக் கூடங்கள் . . . . . . . . . . மக்காவை நோக்கி . . . . . . . நோக்கி வந்தன.

விவசாயத்திற்கு மக்காவில் கிஞ்சிற்றும் இடம் இல்லை என்பதால் இந்த வியாபாரமே அவர்களின் வாழ்க்கைக்கிருந்த ஒரே அடிப்படை. இந்த வியாபாரம். குறைஷி களின் தலைமையில் கீழ் நன்றாகத் தழைத்துக் கொண்டிருந்தது.

எல்லா அரபு, குலத்தவர்களும் இந்த வியாபாரத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அப்படி ஈடுபடுத்திக் கொள்வது அவர்களின் அடிப்படைத் தேவையாக இருந்தது. விவசாயம் அற்றுப் போனதால் இந்த வியாபாரமே அவர்களின் வாழ்வாதாரமாக இருந்தது.

ஒவ்வொரு குலத்தவரும் ஒரு கடவுளை வணங்கி வந்தார்கள். இவர்களுக்கிடையே கடவுள் சண்டை வந்துவிடாமலிருக்க 360 கடவுள்களையும் கஆபாவுக்குள் வைத் திருந்தார்கள்.

இப்படி வியாபார நடவடிக்கைகளை வாகாக தங்களுடையதாக்கிய பின், அவர்கள் தங்கள் வியாபார பொருள்களைக் கூட்டங் கூட்டமாக இதர நாடுகளுக்கும் அனுப்பி னார்கள். குறிப்பாக 'கதரமத்', 'யாமன்' நாடுகளுக்கு அதிகமாகச் அனுப்பினார்கள்.

வெளிநாட்டுக்குச் சென்ற வியாபாரி களிடமும், வியாபாரக் கூட்டங்களிடமும், அரபு நாட்டிலுள்ள அத்தனை பேரும் பெரும் பொருள்களை முடக்கி வைத்திருந்தார்கள்.

இந்நிலையில் முதலீடு செய்ய முடியாதவர்கள் வட்டிக்கு வாங்கி முதலீடு செய்தார்கள். இதனால் வட்டிக்குப் பணம் தருவோர் 'Financiers' மெல்ல, மெல்ல எண்ணிக்கையில் பெருகினார்கள்.

ஆக அரபுக்கள் ஒன்றிலோ வியாபாரிகளாக இருந்தார்கள். அல்லது வியாபாரத்தில் பணத்தை, பொருளை முதலீடு செய்பவர்களாக இருந்தார்கள். அல்லது, முதலீடு செய்பவர்களுக்குப் பணம் வட்டிக்குத் தருபவர்களாக இருந்தார்கள்.

இந்தப் பொருளாதார பலம், அதை அடிப்படையாகக் கொண்ட உல்லாச வாழ்வு இவையெல்லாம், அக்கம் பக்கத்திலுள்ளவர் களின் குறிப்பாக அபிசீனியா என்ற நாட்டின் ஆட்சியாளர்களின் கண்களையும், கவனத்தையும் உறுத்தின.

அவர்கள் மக்காவைச் சுற்றி நடந்த வியாபாரங்கள், தங்கள் நாட்டுக்கு வந்திட வேண்டும் என ஆசைப்பட்டார்கள்.

ஆகவே ஒற்றர்கள் மூலம் மக்காவில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது? என்பதை உன்னிப்பாகக் கவனித்தார்கள்.

ஆன்மிகத்தையும் பொருளாதார நடவடிக்கைகளையும் ஒன்றாக இணைத் திருப்பதே மக்காவின் பொருளாதார வெற்றிக்குக் காரணம் என்பதைக் கண்டார் கள்.

ஆகவே பொருளாதார நடவடிக்கை களையும் ஆன்மீகத்தையும் ஒன்றாகப் பிணைக்கும் ஒரு மையத்தை உருவாக்கிட முயற்சிகளை மேற்கொண்டார்கள். "சனா" என்ற இடத்தில் அப்படியொரு மையத்தை உருவாக்கவும் செய்தார்கள். இதில் யமன் நாட்டவர்களும் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

பின்னர் மக்காவின் இதர கவர்ச்சிகளின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள். மக்காவை நோக்கி மக்கள் அதிகமாக வருவதற்குக் காரணம், குறைஷிகள் மக்காவை சண்டை சச்சரவற்றப் பகுதியாக மாற்றி, வைத்திருக்கின்றார்கள் என்பதைக் கண்டார் கள். இப்போது தங்கள் கவனத்தை இந்தத் திசையின் பக்கம் திருப்பினார்கள்.

"மக்கா" சண்டைகளுக்கும் போர் களுக்கும் அப்பாற்பட்டதல்ல என நிரூபித்திட விரும்பினார்கள்.

அதனால் மக்கத்து மக்களை மலைக்க வைக்கும் ஒரு பெரும்படையுடன் மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள் அபிசீனர்கள். இந்தப் படையில் அதிகமான யானைகள் வந்தன. படையின் தோற்றத்தைப் பார்த்தவுடன் மக்கத்து மக்கள் மலைக்க வேண்டும் என்பதே அபிசீனிய யமன் நாட்டவர்கள் குயுக்தி.

இந்த பெரும்படை மக்காவை நோக்கி, (கி.பி.) கிருஸ்துவுக்குப்பின் 547 ஆம் ஆண்டு வந்தது. (பார்க்க பின் குறிப்புகள்)

இந்தப் படையைப் பார்த்து, மக்கத்து மக்கள் மருண்டு போயினர். அதை எதிர்க்கும் எண்ணம் கூட அவர்களுக்கு வரவில்லை. ஆகவே அவர்கள் மக்காவின் பாதுகாப்பை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட்டார்கள்.

இந்நிலையில் பறவைகள் கூட்டம் ஒன்று வானத்தில் வட்டமிட்டது. வட்டமிட்ட பறவைகள் ஒருவித கூழாங் கல்லை, மழை போல் பொழிந்தன.

அந்தக் கூழாங்கற்கள் மிகைத்த வெப்பம் உடையவனாக இருந்தன. இவைபட்டவுடன அபிசீனிய படை வீரர்கள் தோல்கள் சிவந்தன, தோல்கள் கருகின. புண்கள் சீல் வைத்தன. இதனை தாங்கிட இயலவில்லை. அந்த அபிசீனிய படைகளில் அங்கம் வகித்தவர்களால் அங்கேயே பதர்களைப் போல் சுருண்டு தோற்றுப் போயினர். யானைகள் அங்கேயே சடலமாய் வீழ்ந்தன. இதன் பின் அபிசீனியர்களின் படை மொத்தமாய் மக்காவை ஆக்கிரமிக்கும் திட்டத்தை கைவிட்டன. அதன் பின் இந்த அதிசய கஅபா நிகழ்வு புனிதமான இடமாக வும் பாதிக்கப்பட்ட இடமாகவும் இருக்கும் என்பதை உறுதிப்படுத்திற்று.

இந்த நிகழ்வை மையப்படுத்தி ஆனை ஆண்டு என்று வருடங்களைக் கணக்கிடும் பழக்கம் ஒன்றும் மக்காவிலும் அரபு பெருநிலத்திலும் வழக்கில் வந்தன.

ஆனைப்படை நிகழ்வை வைத்துப் பார்க்கும்போது மக்காவைச் சுற்றி நடப்பவை யெல்லாம் வெற்றுப் பொருளாதார நடவடிக்கைகள் என எடுத்திட இயலாது. மக்காவை நோக்கி அவர்கள் ஹஜ் பயணம் என வந்தது. அவர்களுக்கு நிரம்ப அனுபவங்களைத் தந்தது. அவர்கள் கஆபாவைச் சுற்றிச் சுற்றி வந்து ஓர் இடத்தில் அமர்ந்திருக்கும் போது எதையோ சாதித்து விட்டது போன்றதொரு உணர்வைப் பெற்றார்கள். ஆனந்தமடைந்தார்கள். ஆனைப்படை நிகழ்வால் கஅபாவும் ஹஜ்ஜூம் அரபுக்களிடையே பிரபல்ய மடைந்தது. அதனை அடுத்த இதழில் இன்ஷா அல்லாஹ் பார்ப்போம்.

## குறிப்புகள் பக்கம் -1

நமது உளவுத்துறையினர், தாங்களும் தங்களின் நல்லாசியைப் பெற்ற அபிநவ்பாரத் போன்ற சங்கப்பரிவாரத்தினரும் நாடெங்கும் குண்டுகளை வைத்து வெடிக்கச் செய்தார்கள். இதில் முஸ்லிம்களும், இந்துக்களும் பெருமளவில் மடிந்தார்கள். பழியை போடுவதற்கென்றே உளவுத்துறையினர் கண்டுபிடித்த அமைப்புகளுள் ஒன்றுதான், அபாபீல்.

அவர்களும் அபாபீல் என்றொரு அமைப்பு இருக்கின்றது என நம்புவோரும் கரன் ஆம்ஸ்டிராங்கிடம் பாடம் படிக்க வேண்டும்.

'யானை' ஆண்டு படையெடுப்பு 547 இல் நடந்ததாக கரன் ஆம்ஸ்டிராங் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அஃது அவர்களுடைய கணக்கும் கணிப்புமாகும்.

ஆனால் இஸ்லாமிய வரலாற்றாசிரியர் கள் இதிலிருந்து வேறுபடுகின்றார்கள். இந்தப் படையெடுப்பு பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்த கி.பி. கிருஸ்துவுக்குப் பின் 570இல் நடந்ததாகக் குறிப்பிடுகின்றார்கள். அல்லது அதற்கு ஓராண்டுக்கு முன் நடந்திருக்கலாம் என்பது அவர்களின் கணிப்பு. 1975க்குப் பின் அபிசீனியா எத்தியோப்பியா, சாம்ராஜ்யம் என அறியப்படுகின்றது.

அன்றையக் காலக்கட்டத்தில் ஏமன் அபிசீனியர்களின் ஆட்சியிலிருந்தது என்றும்

ஏமன் பகுதியில் அபிசீனியர்களின் கவர்னராக இருந்த அப்ரஹாஹ் அஷ்ராம் என்பவர்தான் யானைப் படையை நடத்தி வந்தார்கள்.

இந்த யானைப்படையில் சில வரலாற்றாசிரியர்களின் கணிப்பின்படி ஒரு யானைதான் வந்தது. ஆனால் இன்னும் சில வரலாற்றாசிரியர்கள் 13 யானைகள் வந்தன என்றும் கூறுகின்றார்கள்.

யானைப் படையைக் கொண்டு மக்காவையும், காபாவையும் தாக்கிட வருவதற்கு முன் 'சனா' என்னுமிடத்தில் ஒரு பெரிய கிருஸ்தவ ஆலயத்தைக் கட்டியெழுப்பி னார்கள் அபிசீனியர்கள். அந்த ஆலயம் மக்கா-கஆபா இவற்றைவிட அதிகமான மக்களையும் வியாபாரக் கூட்டத்தையும் கவரும் என எதிர் பார்த்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை. ஆதங்கம் அபிசீனியர்களுக்கு. எனவேதான் மக்காவின் மகத்துவத்தை மண் மூடிப் போகச் செய்திட யானைப் படையைக் கொண்டு வந்தார்கள்.

படைகள், மக்காவின் எல்லையை அடைந்ததும் அப்போது கஅபாவின் காவலராகவும் மக்கத்து மக்களின் தலைவராகவும் இருந்த அப்துல் முத்தலிப் அவர்களின், ஒட்டகைகளைக் கவர்ந்து சென்றார்கள். அதன் மூலம் தாங்கள் ஆக்கிரமிக்க வந்துள்ளோம். கஅபாவையும் மக்காவையும் என்ற செய்தியை மக்கத்து மக்களுக்குத் தெரிவிக்கலாம். அவர்கள் சமருக்கு வருவார்கள், சாய்க்கலாம். நிலத்திலே மாய்க்கலாம். மக்காவின் பெருமையை என்றே நினைத்தார்கள்.

ஆனால் அவர்களின் திட்டத்திற்கு நேர் எதிராக அப்துல் முத்தலிப் அவர்கள் அப்ரஹாஹ் அஷ்ரமிடம் நேராகச் சென்றார் கள். என் ஒட்டகத்தைத் தந்து விடு என்றார் கள். அதற்கு அபிசீனியர்களின் தளபதி, நான் ஒட்டகத்தை உங்கள் மக்காவையும் கஆபாவையும், ஆக்கிரமிக்க வந்திருக் கின்றோம் என்பதைப் பிரகடனப்படுத்தவே வந்துள்ளோம். நீங்களோ உங்கள் ஒட்டகத்தைக் காப்பாற்றிட வந்துள்ளீர்கள். கஆபாவைக் காப்பாற்றிட நினைக்கவில்லை போலும் என்றான்.

இதற்கு அப்துல் முத்தலிப் அவர்கள் ஒட்டகங்கள் என்னுடையவை அதை நான் தான் காப்பாற்றிட வேண்டும். கஆபா இறைவனுடைய வீடு அதை அவன் காப்பாற்றுவான் என்றார்கள்.

அப்துல் முத்தலிப் அவர்கள் கூறியதைப் போல் கஆபாவை இறைவன் பறவைகளை அனுப்பிக் காப்பாற்றினான் உலகின் முதல் விமானப் படை இந்த அபாபீல்கள் தாம்.

இதனை இறைவன் தனது அறுதி வழிகாட்டுதலாம் அல்குர்ஆனில் அல்ஃபீல் என்ற 105ஆவது அத்தியாயத்தில் இடம் பெறச் செய்துள்ளான். இதனால் உலகம் உள்ளவரை இந்த வரலாறு நிலைக்கும் பாடம் சொல்லித் தந்தன.

'(நபியே!) யானைப் பாடைக்காரர்களை உம் இறைவன் எண்ண செய்தான் என்பதை நீர் பார்க்கவில்லையா? மேலும் அவர்கள் மீது பறவைகளைக் கூட்டங்கூட்டமாக அவன் அனுப்பினான்.

சுடப்பட்ட சிறுகற்களை அவர்கள் மீது அவை எறிந்தன. அதனால் அவர்களை மென்று தின்னப்பட்ட வைக்கோலைப் போல் அவன் ஆக்கிவிட்டான்'.

**அல்குர்ஆன்: 105:1-5**

வளரும் இன்ஷா அல்ல ாஹ்


**முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**

# வட இந்தியாவிலும் ஜாதித் தீ



**B**orn Hindus, will die Muslims.

*இந்துக்களாகப் பிறந்தோம். ஆனால் முஸ்லிம்களாகவே இறப்போம்.*

*இப்படிக் 'ஹரியானா' மாநிலம் கிஸார் பகுதியைச் சார்ந்த பல குடும்பங்கள் பறை சாற்றி இருக்கின்றன.*

*இப்படிச் சொன்னதோடு நில்லாமல் 250 பேர் டெல்லி வந்து 'ஜந்தர் மந்தர்' ரில் ஆகஸ்ட் 8 ஆம் நாள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுமிருக்கின்றார்கள். அங்கேயும் தொடர்ந்து ஜும்மா மஸ்ஜித்திலும் அவர்கள் தொழுகைகளை நிறைவேற்றியுமிருக் கின்றார்கள்.*

*இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்கான உடனடி காரணம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் ஜாதிக் கொடுமைகள்தாம் என்றால் மிகையாகாது.*

*ஆனால் அண்மையில் அவர்கள் தங்களுடைய வீடுகளிலிருந்தும், பல தலை முறைகளாக வாழ்ந்து அனுபவித்து வந்த நிலபுலன்களை விட்டும் விரட்டப் பட்டுள் ளார்கள்.*

*இதனால் ஜந்தர் மந்தரில் வந்து 'தர்ணா' வில் இருந்தனர். அவர்களிடம் பேசிய போது அவர்கள் சொன்னது.*

"We have been facing untouchability, atrocity, bycot and gang rape. At the root of all these are Hindu system. While living in this system no friend from outside help us saying it is our internal issue. We have thought it and we have to save our future. If not present then we will have to go out of the system".

**சதீஷ் கஜ்லா -**
**இவர் இப்போது அபுல் கலாம்**
**Source : Milli Gazette 16-31, 2015, IndiaTommorrow.net**

*இதன் பொருள், நாங்கள் தீண்டாமையை நெடு நாட்களாக எதிர் கொண்டு வருகின்றோம். எங்களைத் தொடர்ந்து கொடுமைகளுக்கு உள்ளாக்கி வருகின்றனர். சமூக பகிஷ்காரம். கூட்டாக எங்கள் பெண்களைக் கற்பழிக்கின்றார்கள். இவை அத்தனைக்கும் காரணம், இந்து சமுதாய முறையே. இந்து அமைப்பில் நாங்கள் இருக்கும் வரை எங்களுக்கு யாரும் உதவி செய்வதில்லை. கேட்டால், இது உங்கள்*

உள் விவகாரம் எனச் சொல்லி வருகின்றார்கள். நாங்கள் இது பற்றி சிந்தித்தோம். எங்கள் நிகழ் காலத்தை விட்டு விட்டாலும் எங்கள் எதிர் காலத்தையாவது நாங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்படியானால் நாங்கள் இந்த இந்து சமுதாய அமைப்பிலிருந்து வெளியேறி யாக வேண்டும்.



இப்படிச் சொன்ன அந்த அபுல் கலாம்-ஐ முன்னாள் சதிஷ் கஜ்லாவை அன்று இரவே காவல்துறையினர் அடித்து கையையும் தலையையும் உடைத்தார்கள். அத்தோடு பல நாள்களாக ஜந்தர் மந்தரின் ஓரங்களில் வாழ்ந்த இவர்களின் குடிசைகளையும் அடித்து உடைத்தார்கள்.

அதன் பின்னர்தான் சில பத்திரிக்கை யாளர்கள் அவர்களிடம் இப்போது உங்களைத் தாக்கி உள்ளார்கள். இது மிரட்டல். அடுத்து உங்கள் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கின்றோம் என பசப்பு மொழி பேசுவார்கள். ஒருவேளை சில பிரச்சினை களைத் தீர்த்தும் வைப்பார்கள். அப்போது நீங்கள் இஸ்லாத்தைவிட்டு வெளியேறி விடுவீர்களா? எனக் கேட்டார்கள். இதற்கு அந்த மக்களை வழி நடத்திக் கொண்டிருக்கும் அபுல் கலாம் இப்படிப் பதில் சொன்னார்.

“நிச்சயமாக இல்லை. நாங்கள் இந்துக்களாகப் பிறந்திருக்கலாம். ஆனால் முஸ்லிம்களாகத்தான் மரணிப்போம்”

கிஸார் பகுதியைப் போல் தெலுங்கா னாவின் இன்னொரு பகுதி. பாகானா (Bhagana). இங்கே ‘ஜாட்’ என்ற இனத்தைச் சார்ந்தவர்கள், சதா சர்வ காலமும் ஜாதிக் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டே இருந்தார்கள். அதனை அந்த மக்கள் இப்படி விவரிக்கின்றார்கள்.

### பாகான சமிதி

இந்த மக்கள் அதாவது ‘பாகானா’ என்ற பகுதியைச் சார்ந்த மக்கள் - தலித் மக்கள் - ஜாதியின் பெயரால் தங்களைத் தினம் தினம் தாக்கிடும் ஜாட் மக்களிடமிருந்து விடுதலை தேடி நின்றனர்.

ஆனால் 2011 ஆம் ஆண்டிலிருந்தே, கொடுமைகள் அதிகரித்தன. தலித்களை அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த இடங் களிலிருந்தும் அவர்கள் விவசாயத் தொழிலை செய்து கொண்டிருந்த நிலங்களிலிருந்தும் விரட்டி அடித்தார்கள்.

சிதறி ஓடிய மக்களில் இளம் பெண் களைக் கடத்திச் சென்று கற்பழித்தார்கள். ஆகவே அவர்கள் புகலிடமின்றி அங்குமிங்கும் அலைக்கழிந்தார்கள்.

இந்த நிலையிலும் என்ன நடந்தது என்பதை பாகான சமிதியின் தலைவர் வீரேந்திர சிங் போகாரியா (Virendra Singh Bogoria) அவர்கள் கூற கேட்போம்.

“எங்களைத் தொடர்ந்து ஜாதிக் கொடுமைகளுக்கு ஆளாக்கி வருகின்றார்கள் ஜாட் இனத்தவர்கள். எங்களுக்குச் சொந்தமான 280 ஏக்கர் நிலத்தை அபகரித்து ஆக்கிரமித்துக் கொண்டார்கள். தலித் களுக்குச் சொந்தமான எஞ்சியுள்ள இடங் களையும் நாங்கள் பயன்படுத்திட இயலாமல் செய்து விட்டார்கள். எங்கள் மீது தொடுக்கப்படும் கொடுமைகளை நிறுத்திட வேண்டும் என நாங்கள் நிர்வாகத்திடம் புகார் தந்த போது வட்டார காவல் துறையினர் எங்கள் மீதே தேசத்துரோக வழக்குகளைப் பதிவு செய்து சிறையிலடைத்தார்கள். இதற்கு ஜாட்கள் தந்த அழுத்தங்களே காரணம்.”

பார்பர்கள் எங்களுக்கு முடிவெட்ட மறுக்கிறார்கள். எங்கள் குழந்தைகளை பள்ளிகளிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். கோயில்களிலிருந்து அடித்து விரட்டினார்கள். தண்ணீர் சுனைகளையோ தேக்கங்களையோ பயன்படுத்திட இயலவில்லை. எந்தக் கடைகளிலும் எங்களுக்குப் பொருள்கள் கிடைப்பதில்லை. அவர்களுடைய பஞ்சாயத்தில் எங்களோடு யாராவது தொடர்பு வைத்தால் அவருக்கு ரூபாய் 1,100/- ஆயிரத்து நூறு அபராதம் என அறிவித்துள்ளார்கள்.

அவர்கள் எங்களுடைய சிறுமிகள் நான்கு பேரைக் கடத்திச் சென்று கற்பழித்தார்கள். பலப் பெண்களைக் கற்பழித்தார்கள். அவர்களில் ஐந்து பேர் கர்ப்பமுற்றிருக்கின்றார்கள். மொத்தத்தில் இந்து சமுதாய அமைப்பு எங்களை மனிதர்களாகவே கருதவில்லை. இதனால் நாங்கள் மே 21, 2012 இல் எங்கள் கிராமங்களை விட்டு வெளியே வந்துவிட்டோம். ஏனெனில் அதற்கு மேலும் எங்களால் ஊரில் இருக்க முடியவில்லை.

"அரசியல் நிர்ணயச் சட்டத்தால் எந்தப் பயனுமில்லை. சட்டங்கள் புத்தகங்களில் மட்டுந்தான் இருக்கின்றன. ஆனால் குண்டர்கள் தாம் இங்கே எல்லாம். குண்டர்களின் பலமிருந்தால் எல்லாம் உங்களுக்காகத்தான். எங்களுக்கு ஒன்றுமில்லை நான் நிச்சயமாக. இந்துவாகப் பிறந்தேன் நிச்சயமாக நான் இந்துவாக மரணிக்கமாட்டேன்."

(இது ஒரு பேராசிரியரின் கூற்று. இவரும் ஆகஸ்ட் எட்டாம் நாள், திருக்கலிமாவை மொழிந்தவர்களுள் ஒருவர்).

ஆக வடக்கேயும் வன்கொடுமைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அதே நேரத்தில் எதுதான் தீர்வாக அமையும் என்பதையும் அந்த மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றார்கள். ஆகவே அவர்களின் விடுதலை நிச்சயம். (இன்ஷா அல்லாஹ்)

## தென் இந்தியாவிற்கு ஒரு சேதி

ஜாதிய அமைப்பு முறைக்கு சம்மட்டியில் அடி தந்த ஒரு மார்க்கம். இஸ்லாம் என்ற செய்தியை தென்னிந்தியாவில் உள்ள தீண்டத்தகாத பெருமக்களும் அவர்களின் விடுதலைக்காகப் போராடுபவர்களும் நன்றாக அறிவார்கள். ஆனால், முஸ்லிம்களிடையேயும் ஜாதி இருக்கின்றது என்ற கோட்பாட்டை வளர்க்கவும், பிரச்சாரம் செய்யவும், முயற்சி செய்கின்றனர். ஆனால் ஹரியானாவில் இஸ்லாம்தான் நம்முடைய இழிவைப் போக்கும் எனப் பிரகடனப்படுத்தி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ள உரிமைகளும் நீதிகளும் மறுக்கப்பட்ட மக்கள் என்பதை குன்றின் மேல் நிற்கும் விளக்காக அறிந்திருக்கின்றார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதோடு மட்டும் நிற்கவில்லை அவர்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அடுத்த நாளே அதாவது ஆகஸ்ட் 9ம் நாளே மத்திய அரசின் காவல்துறையும் மத்திய அரசின் அடியாள்களான பாசிச அமைப்பினரும், கட்டவிழ்த்திட்ட வன்முறை தாக்குதல்களுக்கு ஆளாகி நிற்கின்றார்கள்.

அரசும், அடியாட்களும் தந்த அடிகளைத் தாங்கிக் கொண்டு அந்த மக்கள் நாங்கள் முஸ்லிம்களாகவே இறப்போம் எனக் கூறி இருக்கின்றனர். அனைத்தும் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு 'ஹிதாயத்' என்ற நேர் வழியை வழங்கியதோடு, அவர்களை அதில் உறுதிபடுத்தியும் வைக்கின்றான். இன்னும் அல்லாஹ் அவர்களுக்கு அருளைப் பொழிவானாக! நாம் எல்லா நிலைகளிலும் அவர்களோடு நிற்போம். அல்லாஹ் அந்த தலீத்களை அரவணைத்துக் ..... கொண்டான்.

## ஆகஸ்ட் 8 டெல்லி மத மாற்றம் சொல்லும் இன்னொரு செய்தி

ஹரியானாவில் "பாகானா" என்ற இடத்தில் தலித்களை மக்களைத் தொடுத்து அநீதிகளுக்கும் ஜாதீய கொடுமைகளுக்கும் ஆளாக்கியவர்கள் ஜாட், இனத்தவர்கள் தாம்.

இந்தக் கொடுமைகளைக் கண்டு மனம் பொறுக்காத 'ஜாட்' இன மக்களும் உண்டு அவர்களில் ஒருவர் சஞ்சய் புரா (Sanjay Bura) என்ற இளைஞன் இந்த இளைஞனும் இந்த தலித்களோடு டெல்லியில் ஆகஸ்ட் 8 ஆம் நாள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

அவரிடம் பத்திரிக்கையாளர்கள் கேள்விகளைக் கேட்ட போது அவர் இப்படிப் பதில் சொன்னார்.

I belonged to the caste which unleashed atrocities on these dalits. I stood in solidarity with them in their grief. I consider myself a dalit, I have seen their pain not only in Bhagana but at other places also. I have also converted to Islam along with them.

"The Varna system in Hindu religion allows untouchability and discrimination against humans. I am against this system. The new government of BJP is working on a special agenda and capturing constitutional institutions. The work according to the Manuvadi agenda to supress dalits and minorities."

"I support the idea of unity and equality. Islam is a great example of equality in the world. I have faith in it"

**(Source : Milli Gazettee 16-31, August 2015, India Tommorrow.net)**

இதன் பொருள் (அதாவது சஞ்சய் புறா என்ற ஜாட் வகுப்பினர் கூறுகின்றார்).

"இந்த தலீத்கள் மீது கொடுமைகளை புரிந்த ஜாதியைச் சேர்ந்தவன் நான். நான் அவர்களுடன் அவர்களுடைய சோதனை களில் ஒன்றோடு ஒன்றாய் நின்றவன். நானும் என்னை ஒரு தலித்தாகவே கருதுகின்றேன். அவர்களுடைய வேதனைகளை நான் பாகானாவில் மட்டுமல்லாமல் இன்னும் பல இடங்களில் பார்த்திருக்கின்றேன். நானும் அவர்களோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்."

"இந்து மதத்திலுள்ள வர்ண முறை தீண்டாமையையும் மனிதர்களுக்கெதிராக பாகுபாடுகளையும் அனுமதிக்கின்றது. நான் இதற்கு எதிரானவன். இந்த புதிய பாரதீய ஜனதா அரசு சில மாறுபட்ட செயற்திட்டங்களோடு இயங்குகின்றது. இது அரசியல் சாசன அமைப்பு ஏற்படுத்தித் தந்த நிறுவனங்களையும் கைப்பற்றிக் கொண்டு இந்த புதிய செயல்திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. மனுவாடி (மனுநீதி) செயல் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தலித்களையும் சிறுபான்மையினரையும் அமுக்குவதற்கே இந்த மனுவாடி செயல்திட்டம்பட செயல்படுகின்றது."

"நான், ஒற்றுமையையும் சமத்துவத்தை யும் ஆதரிப்பவன். உலகில் இஸ்லாம் இந்த சமத்துவத்தின் மிகப்பெரிய எடுத்துக் காட்டு நான் அதை நம்புகின்றேன்."

சஞ்சய் புறா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளது பிரகடனப் படுத்தும் உண்மை என்னவெனில்,

ஆதிக்க ஜாதிகளும் அமுக்கப்பட்ட மக்களும் சங்கமித்து சரிசமமாக சகோதரர்களாக, ஒற்றுமையாக வாழ்ந்திடவும் வளம் பெறவும் இருக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாம்.

## இந்தியாவில் மட்டுமல்ல

உலக அரங்கில் நிறத்தின் பெயரால் கற்பிக்கப்படும் தீண்டாமைகளிலிருந்தும் நிறத்தின் பெயரால் கட்டவிழ்த்துவிடப்படும் குரூரமான கொலை, கற்பழிப்பு ஆகியவற்றிலிருந்தும் மக்களை விடுத்த ஒரே கொள்கை இஸ்லாம். இதையே மால்கம் X என்ற மாலிக் அல் ஷஹாபாஸ் இன் வாழ்க்கையும் வெள்ளை நிறப் பெண்கள் யுவானி ரிட்லி, கிருஸ்டினா பெக்கர், ருக்கையா வாரிஸ், போன்றவர்களின் வாழ்க்கையும் எடுத்துச் சொல்லும் சேதி!

இதை அனைவரும் அறிய செய்வோம். அனைவரையும் படைத்த இறைவனின் மார்க்கத்தை நோக்கி அழைப்போம். இதனை முஸ்லிம்கள் தங்கள் முதல் கடமை என்பதை உணர்ந்து செயல்பட்டிட வேண்டும்.

வைகறை வாசகர் வட்டம், தாரூல் இஸ்லாம் இவை கடந்த 35 ஆண்டுகளாக இந்தக் பணியைச் செய்து வருகின்றது.

அதன் சில நூல்கள் குறிப்பாக தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் ஜாதி ஒழிந்தது என்ற நூல் ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பெருமளவில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

## முஸ்லிம்களின் கவனத்திற்கு

1. சமத்துவம், சகோதரத்துவம் இன்னும் வெளிப்படையாக சொன்னால் மனிதர்களுக் கிடையே பாகுபாடு காட்டாமை இது இஸ்லாத்தின் வழிகாட்டுதலின் ஒரு சிறுபகுதிதான். இதனை முறையாகச் செயல்படுத்தினாலேயே இத்தனை மக்கள் இஸ்லாத்திற்கு வந்துவிடுவார்கள் என்றால் இஸ்லாத்தின் எல்லாப் பகுதிகளையும் செயல்படுத்தினால் மொத்த மனித இனமும் இஸ்லாத்தை ஏற்றிருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

2. இட ஒதுக்கீடுகளுக்காக நம்முள்ளும் சில ஜாதிகளைத் திணிப்பதை அல்லது கண்டுபிடிப்பதை நிறுத்துங்கள். அவர்களைப் பின்தங்கியவர்களாக காட்டி இட ஒதுக்கீடு பெற முயற்சிப்பதும் இஸ்லாத்தின் பரவலைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். நாம் முஸ்லிம்களாகவே வாழ்வோம். முஸ்லிம்களாகவே மரணிப்போம். இன்ஷா அல்லாஹ்!

**எம்.ஜி.எம்.**

---


**36ம் பக்கத்தின் தொடர்ச்சி. . .**

அமைச்சர் கே.ஜே. ஜார்ஜ், மூத்த எழுத்தாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பஜ்ரங் தளம், விஸ்வ ஹிந்து பரிஷத், சிறீராம் சேனா, ஹிந்து ஜகர்ன வேதிகே உள்ளிட்ட அமைப்புகளிடம் தீவிர விசாரணை நடத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பகுத்தறிவாளர்களை குறிவைத்து படுகொலைகளை செய்துவரும் சங்பரிவார அமைப்புகள் தடை செய்யப்பட வேண்டும்.

சங்கபரிவாரங்கள் இந்த கொலையை நியாயப்படுத்தியுள்ளதுதான் கொடுமையிலும் கொடுமை.

தக்ஷின கன்னடா மாநிலத்தின் பன்த்வால் தாலுக்காவை சேர்ந்தவன் புவித் ஷேத்தி என்பவன், இவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை 31ம் தேதி காலை 10.41 மணியளவில் டிவிட்டரில் பின்வருமாறு எழுதியுள்ளான், “அப்போது யு.ஆர், அனந்தமூர்த்தி, இப்போது எம்.எம். கல்புர்கி, இந்துயிசத்தை கேலி செய்ததால் நாயை போன்று சாகிறீர்கள். அன்பு கே.எஸ். பகவான் அவர்களே, அடுத்தது நீங்கள் தான்.”

இதே புவித் ஷேத்தி என்பவன் ஜூலை 15 அன்று கல்லட்காவில் பசுக்களை




கடத்தியதற்காக நானே முஸ்லிம்களின் கையை வெட்டியுள்ளேன் என்பதை நீங்கள் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் எழுதியுள்ளான்.

சங்கப்பரிவாரங்களின் முற்போக்கு சிந்தனைவாதிகளுக்கு எதிரான போர் விரிவடைந்துள்ளது. மஹராஷ்டிராவில் கோவிந்த பன்சாரே, டபால்கர் என சங்கபரிவாரங்களின் கொலைப்பட்டியல் முற்போக்குவாதிகளுக்கு எதிராக நீண்டு கொண்டே செல்கிறது.

இந்த இந்துத்துவவாதிகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் போனால் இவர்கள் மிகச் சுதந்திரமாக இன்னும் பல கொலைகளை செய்து கொண்டே இருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

# வருகின்றது இன்னொரு ஆள்தூக்கிச் சட்டம்!

2004 ஆம் ஆண்டு 'பொடா' என்ற பாசிச சட்டத்தை பின் வாங்கியது காங்கிரஸ் அரசு. ஆனால் எந்த ஆரவாரமுமில்லாமல் '**UAPA**' என்ற Unlawful Activities Prevention Act, சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளின் தடுப்புச் சட்டத்தை வலிமைபடுத்தினார்கள்.

'வலிமை' என்ற பெயரில் 'பொடா'வில் இருந்த எல்லாக் காட்டுமிராண்டித் தனங்களையும் அதனுள் புகுத்தினார்கள். இதனை மக்கள் கண்டு கொள்ளவில்லை. பொடாவை விட குரூரமான இந்தச் சட்டத்திற்கு UAPAA 2008 எனப் பெயர் வைத்தார்கள்.

அதாவது Unlawful Activities Prevention Amendment Act 2008 - சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளின் தடுப்பு திருத்தச் சட்டம் 2008 எனப் பெயர் வைத்தார்கள். இது போன்ற ஆள் தூக்கிச் சட்டங்கள் வரும் போதெல்லாம், அது சிறுபான்மையினருக்கு எதிராக குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும். இதனால் இது போன்ற சட்டங்களை எதிர்த்திட வேண்டிய தலையாயக் கடமை முஸ்லிம்களுடையது. ஆனால் முஸ்லிம்கள் அதைச் செய்திட தவறிவிட்டார்கள். விளைவு பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் இந்தத் 'தடா' சட்டத்தின் கீழ் சிறையில் வாடுகின்றார்கள்.

இந்தச் சட்டத்தின் கீழ் அமைப்புகளையும் அதன் கீழ் இயங்கும் உறுப்பினர்களையும் தான் இயங்கத் தடை செய்வார்கள். கைது செய்வார்கள் என்றிருந்தது. ஆனால் 2008 ஆம் ஆண்டு கொண்டு வந்த திருத்தத்தில் அமைப்புகள் சாராத குழுக்களையும் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யலாம் என்று கொண்டு வந்தார்கள். அதற்கு இந்த சட்டத்தில் 'Terror Gang' என்ற சொல்லை பயன்படுத்தினார்கள். இப்போது இந்தச் சட்டத்தில் எந்த தனி மனிதரை வேண்டும் என்றாலும் சேர்க்கலாம், என்றொரு நிலையை உருவாக்கிட இருக்கின்றார்கள். எந்த ஒரு தனிமனிதனும் இந்தியாவுக்கு வெளியே தீவிரவாத செயலில் ஈடுபடுவார் என்ற ஐயப்பாடு இருந்தாலே அவரை இந்த **UAPAA 2008** இல் கைது செய்யலாம் என சட்டத்தை மாற்றிட இருக்கின்றதாம் இன்றைய பாரதீய ஜனதா கட்சி ஆட்சி.

இனி அப்பாவி முஸ்லிம்கள் தும்மினால் இருமினால் இந்த பொல்லாத சட்டத்தில் சிறை பிடிக்கப்படுவார்கள் என்ற நிலை வந்திட இருக்கின்றது.

IS என்ற இஸ்லாமிய அரசு Islamic State அமைப்பை மனதில் வைத்துத்தான் இந்த சட்டம் மிகுந்த கொண்டு வரப்படுகின்றது, என்றொரு காரணம் கற்பிக்கப்படுகின்றது. ஆனால் இறுதியில் அப்பாவி முஸ்லிம்கள் தாம் கைது செய்யப்படுவார்கள்.

இந்த சட்டத் திருத்தத்தை இப்போதே எதிர்ப்பது சிறந்தது.

ஆனால் UAPAA ஐ ஒட்டு மொத்தமாக அகற்றிட ஆவன செய்திடுவது சிறந்தது. சிறந்த மனித உரிமை பாதுகாப்பு. அதை நாம் தவறாமல் செய்வோம்.

**எம்.ஜி.எம்.**

# அயோத்தியில் இராமர் கோயில் பகுதியில் உச்சநீதிமன்றம் சீரமைப்பு என்ற பெயரில் அனுமதி!

அயோத்தியில் பாபரி மஸ்ஜித் இருந்த இடம் குறித்த வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

இதனிடையே சந்தடி சாக்கில் ஒரு வழக்கு. இந்த வழக்கைத் தொடர்ந்தவர் சாஷ்சாத் சுப்ரமணிய சுவாமி அவர்கள்தாம்.

இந்த வழக்கில் அயோத்தியிலிருக்கும் இராமர் கோயிலை சீரமைக்கவும், கொல்லைபுற கட்டுமான பணிகளை மேற்கொள்ளவும் உச்சநீதிமன்றத்திடம் அனுமதி கேட்டார். இந்த அனுமதியை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது.

இந்த அனுமதியோடு நில்லாமல் அந்தச் சீரமைப்புப் பணிகளைச் கண்காணிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு ஒன்றை அமைத்து அதைக் கண்காணிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளது.

இராமர் கோயிலுக்கு வழிபட வருபவர்களுக்கு குடிநீர், கழிப்பிட வசதி களைச் செய்து தந்திடவும் வகை செய்ய இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் வழி வகை செய்திருக்கின்றது.

பாபரி மஸ்ஜித் இருந்த இடம் சர்ச்சைக்குரிய இடம் என முதலில் வாதாடினார்கள். ஆனால் அது உண்மையில் முஸ்லிம்களுக்கு சொந்தமான வக்ஃப் இடம் என முஸ்லிம்கள் தொடர்ந்து வாதாடி வருகின்றனர். இப்போது இந்த வழக்குகள் இப்போது உச்சநீதிமன்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

பல ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகளும், உயர்நீதிமன்ற நீதிபதிகளும் இந்த நீதிமன்றங்களின் போக்குகளைக் கண் காணித்துவரும் வழக்கறிஞர்களும் பாபரி மஸ்ஜித் வழக்கு இத்தனை காலம் இழுத்துக் கொண்டு வருவதற்குக் காரணம் உச்சநீதி மன்றந்தான் என்பதைப் பொட்டில் அறைந் தாற் போல் கூறியுள்ளார்கள்.

பானை சோற்றுக்கு ஒரு சோறு என்பதைப் போல் அவற்றுள் ஒன்றை இங்கே சுட்டிக்காட்டுகின்றோம்.

Thus the issue of Ramajanma Bhoomi was kept alive by an order of the Supreme Court. It is the judiciary that kept this issue alive since 1949 by passing a series of orders which only frame the Hindu Community, over the other. This trend set by the judiciary was to be exploited later by the communal elements in political parties and to be hijacked and monopolised as their exclusive agent by the Sang Parivar since about 1980

இதன் பொருள்,

இப்படி இராமர் பிறந்த இடம் என்ற பிரச்னையை, உயிருடன் வைத்துக் கொண்டே இருப்பது உச்சநீதிமன்றத்தின் ஆணை ஒன்றுதான். 1949 முதலே நீதிமன்றங்கள் தொடர்ந்து பிறப்பித்த ஆணைகள், இந்து சமுதாயத்திற்கு ஏனைய சமுதாயத்தைவிட சாதகமாகவே இருந்தன. நீதித்துறை உருவாக்கித் தந்த சூழ்நிலைகளை பின்னர் அரசியல் கட்சியிலுள்ள வகுப்புவாத சக்திகள் நன்றாக தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டன. இந்தப் பிரச்னையை ஆட்களைக் கடத்துவது போல் கடத்தி தங்கள் கைகளில் வைத்துக் கொண்டன. இந்தச் சூழலை சங்கப்பரிவார், 1980 முதல் முழுமை யாகத் தங்களதாக்கி ஆதாயம் தேடிக் கொண்டன.

Source : Justice Hospet Suresh in Communalism Cambat Sept. 2002.

அயோத்தியில் கட்டப்பட்ட கோயில் சட்ட விரோதமானது இது அத்துமீறியவர்கள் செய்த செயல், எனக் கூறிய ஒரு நீதிபதி, நீதிபதி திகாரி பின்னர் இந்தச் சட்டவிரோதமாக நிறுவப்பட்ட சாமிகளைக் கும்பிட வழிவிடுகின்றார். அப்போது அவர் இப்படிப் கூறித்தான் இந்துத்துவ விசுவாசத்தை

வெளிக்காட்டினார். இப்படி "Lord Rama has a place in Indian constitution" அதாவது கடவுள் இராமருக்கு இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் ஓர் இடமுண்டு.

இந்த நீதிபதிகளெல்லாம் அமர்ந்திருந்த அவைகளை நம்பித்தான் இங்கே சிறுபான்மை முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள்.

இதே நீதிமன்றம்தான், முஸ்லிம்கள் நாங்கள் தொழுது கொண்டிருந்த மஸ்ஜித்தை ஒரு நாள் இரவில் குண்டர்கள் (1949 டிசம்பர் 22,23) பறித்துக் கொண்டார்கள். பின்னர் இடித்தும் விட்டார்கள். ஆகவே விவகாரம் முடியும் வரை அதாவது நீதிமன்ற வழக்குகள் முடியும் வரை எங்களுக்கும் தொழுதிட அனுமதி தாருங்கள் எனக் கேட்டபோது நீதிபதி இப்படி பதில் சொன்னார்.

It is not the Muslims but the Hindus who lost the right to worship due to the demolition of Babari Masjid.

அதாவது, 'பாபரி மஸ்ஜித் -ஐ இடித்ததால் வழிபாட்டு உரிமையை இழந்தது முஸ்லிம்கள் அல்ல, இந்துக்கள் தான்'.


இந்த நீதித்துறை இப்படி ஈளைகட்டி இருமல் வந்து, சொத்தையாகிப் போனது பாபரி மஸ்ஜித் வழக்கில். (Vishwa Hind Adhivakta Sangh vs Union of India). இப்போது வழங்கியத் தீர்ப்பில் கோயில் கட்டுவதற்கு கொல்லைப் புறம் வழியாக அனுமதி வழங்கி இருக்கின்றது நீதிமன்றம் என்றே சொல்ல வேண்டும்.

அன்று பிரச்னையை கனன்று கொண்டே இருக்க செய்து பள்ளிவாசலை இடிக்க அனுமதித்தது உச்சநீதிமன்றம். இப்போது பாபரி மஸ்ஜித் ஐ கோயிலாக்கும் பணியை சந்தடி இல்லாமல் உச்சநீதிமன்றம் செய்கின்றதோ என்ற ஐயம் மக்களிடம் எழுந்துள்ளது நியாயமானதே!

**செய்தி ஆதாரம் : விடுதலை நாளிதழ்**
**ஆகஸ்ட் 11,2015**


# இஸ்லாமிய நாகரிகம்

***மூலம் : முஸ்தபா அல்சிபாய் - தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்***




விரிவாக்கப்பட்ட மூன்றாம் பதிப்பு

இஸ்லாமிய ஆட்சியின் மாட்சியை அதன் சகிப்புத்தன்மையை நீதி வழுவா நெறிமுறையை போர் முகத் திலும் அது காட்டிய பெருந் தன்மையை எடுத்துச் சொல்லும் நூல். இஸ்லாம் ஆட்சியில் அமர்ந் தால் நிலவும் நீதியை அதன் வழி மக்கள் மனதில் நிலவும் நிம்மதியை விவரிக்கும் நூல். எல்லாம் நாம் தான் ஆட்சியில் அமர்ந்தால் என இறு மாந்து கிடந்திடாமல் எல்லாவற்றிக்கும் நாமே பொறுப்பு. என்ற பொறுப்புணர்ச்சி யோடு, விழிப் போடு இயங்கிட வேண்டும் ஆட்சி யாளர். இதை தெள்ளத் தெளிவாக விவரிக்கும் நூல். சகோதர சமுதாயத் தவர்களுக்குத் தந்திட வேண்டிய நூல்.

**பக்கங்கள் : 208 விலை ரூ. : 50.00**

## வேர்கள் வெளியீட்டகம்

52/1, கோனிக்கா பில்டிங், 4வது மாடி
மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001



தொடர் -36

# எது முதலில்?

-இமாம். யூசுப் அல் கர்ளாவி

## ஒற்றுமைக்கே முதலிடம்!

முஸ்லிம்கள் தங்களுக்கு மத்தியில் அன்போடும் நேசபாசத்தோடும் இருந்திட வேண்டும். ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதை இதற்கு முன்னர் நாம் கூறினோம்.

இதில் சமுதாய நலன் முஸ்லிம் உம்மாவின் நலனுடன் தொடர்புடைய காரியங்களை முக்கியமாகக் கருதுவதும் அடங்கும்.

முஸ்லிம் உம்மாவுக்கான நிகழ்காலத் தேவை அதன் நலன் இவை அடுக்கடுக்காக இருக்கும் பட்சத்தில் அவற்றுள் எதற்கு முதலிடம் தருவது என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் சமுதாயத்தின் வணக்க வழிபாடுகள் கொடுக்கல் வாங்கல்கள் அன்றாடப் பிரச்சனைகள் ஒழுக்க விழுமங்கள், சட்ட திட்டங்கள் இவற்றின் மீதெல்லாம் இஸ்லாம் அக்கறையற்று இருக்க வில்லை என்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது.

சமுதாயம் எனும் கட்டிடத்தில் ஒவ்வொரு தனி நபர் ஒவ்வொரு செங்கல் என்றும் உயிருடனுள்ள ஒரு மனிதனின் உடலமைப்பில் ஓர் உறுப்பு என்றும் இஸ்லாம் கருதுகிறது.

உடலில் ஓர் உறுப்பு. கட்டிடத்தில் ஒரு செங்கல் என்று தனி நபரை உருவாக்கப் படுத்துவது நானல்ல. அண்ணல் (நபி ஸல்) அவர்களே இப்படிக் கூறியிருக்கிறார்கள்.

“ஒரு நம்பிக்கையாளன் மற்றொரு நம்பிக்கையாளனுக்கு ஒரு கட்டிடத்தைப் போல ஒன்றையொன்று தாங்கி நிற்கிறது” என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல் : புஹாரி, முஸ்லிம்)

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் “அன்பு, இரக்கம், கருணை இவற்றை தங்களுக்கிடையில் பரிமாறிக் கொள்வதில் இறை நம்பிக்கையாளர் களெல்லாம் ஒரே உடலைப் போன்றவர்களே. ஓர் உறுப்பு நோயுற்றால் விழித்திருப்பதன் மூலம் காய்ச்சல் ஏற்படுவதன் மூலம் எல்லா உறுப்புக்களும் வேதனையை வெளிப்படுத்து கின்றன” (நூல்: புஹாரீ, முஸ்லிம்)

முஸ்லிம்களின் இதயத்தில் இஸ்லாம் தன் போதனைகள் மற்றும் சட்ட திட்டங்கள் மூலம் ஒற்றுமை உணர்வை ஊன்றிக் கொண்டேயிருக்கிறது.

அன்றாடத் தொழுகை வெள்ளிக் கிழமை, பெருநாள் தொழுகைகள் என அனைத்தையும் கூட்டாக நிறைவேற்றிடக் கூறுகிறது. ஓர் அழைப்பின் (பாங்கு) மூலம் பள்ளிவாசலுக்கு அனைவரையும் அழைக்கிறது.

தொழுகைக்கான அழைப்பொலி (பாங்கு) சப்தம் கேட்குமானால் பள்ளி வாசலுக்கு வந்து தான் தொழவேண்டும். வீட்டில் தொழுதிட பார்வையற்றவருக்குக் கூட நபி(ஸல்) அனுமதி வழங்கவில்லை.

ஜமாஅத் எனும் கூட்டுத் தொழுகைக்கு வராமல் வீட்டில் இருப்போரை தீவைத்து வீடுகளை எரித்து விடப் போகிறேன் என்றும் கூறினார்கள்.

பள்ளிவாசலுக்கு வந்து கூட்டாகத் தொழும் போதும் கூட வரிசையில் தான் நிற்க வேண்டும். வரிசையை விட்டுத் தனியாகப் போய் நிற்கக் கூடாது. பார்ப்பதற்க்கு தனியாக விலகி நிற்பது போல் இருக்கும். ஒற்றுமையின்மை போல் தோன்றும் படி கூட செயல்படக் கூடாது என்பதே இதற்குக் காரணம்.

தொழுகைக்கான வரிசையை (ஸஃப்) விட்டு பின்னால் நின்று தொழுது கொண்டிருந் தார் ஒருவர். அவரைப் பார்த்த நபி (ஸல்) அவரிடம் மீண்டும் தொழும்படி கூறினார்கள். (நூல்: தீர்மிதி, அபூதாவூத், இப்னு மாஜா)

அலீபின் ஷைபான் (ரழி) கூறினார்கள். நாங்கள் புறப்பட்டு நபி (ஸல்) விடம் வந்தோம். இஸ்லாத்தை ஏற்று (பைஅத்) சத்தியப் பிரமாணம் செய்தோம். நபி(ஸல்)க்குப் பின்னால் நின்று தொழுதோம். பிறகு மற்றொரு தொழுகையையும் நபி (ஸல்) ஐப்பின் பற்றித் தொழுதோம். அப்பொழுது வரிசையில் விட்டுப் பின்னால் நின்று ஒருவர் தொழுது கொண்டிருப்பதை நபி (ஸல்) கண்டார்கள்.

தொழுகை முடிந்தவுடன் அவரிடம் "வரிசை விட்டு விலகி நின்று தொழுகை ஏற்கப்படுவதில்லை. நீ திரும்பத் தொழு" என்று கூறினார்கள். (நூல்: இப்னு மாஜா)

ஒரு முஸ்லிம் பள்ளி வாசலுக்குள் நுழையும் போது வரிசைகள் பூர்த்தியாகி யிருந்தால் கூட இவர் தனி அணியாக நிற்கக் கூடாது. முந்தைய அணியில் ஏதேனும் கொஞ்சம் இடமிருக்கிறதா என்று தேடி அங்கே சேர்ந்து நிற்க வேண்டும். இடம் ஏதுமில்லையென்றால் அந்த வரிசையில் நிற்கும் ஒருவரை தன்னுடன் அடுத்த வரிசையில் நின்றிட இழுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி இழுக்கப்படும் நபர் இவருக்கு ஒத்துழைக்க வேண்டும். இதற்காக அவருக்கு தனியான நற்கூலி உண்டு.

வரிசையை விட்டு விலகி தனியாக நின்று தொழுதவரை மீண்டும் தொழச் சொன்னார்கள். நபி(ஸல்) அவர்கள் என்ற நபி வழியின் வெளிப்படையான கருத்தை ஏற்று சட்டமேதைகள் சிலர் அவரின் தொழுகை ஏற்கப்படுவதில்லை என்று கருத்துரைக் கின்றனர். சிலர் அது அருவருக்கத்தக்க செயல் அவ்வளவே என்கின்றனர்.

அந்த நபி மொழியை நாம் கூறியதற்குக் காரணம் இஸ்லாம் எப்படியெல்லாம் தோற்றத்திலும் வெளி வடிவத்திலும் ஒற்றுமையை வலியுறுத்துகிறது என்று விளக்கிடத்தான்.

கூட்டாக அல்லாமல் ஒரு முஸ்லிம் தனியாகத் தொழும் போது கூட அந்தரங்கத் தில் அவன் ஒரு கூட்டமைப்பாகவே (ஜமாஅத்) காட்சி தருவான்.

எப்படித் தெரியுமா? அல்லாஹ்வுக்கு முன்னால் நிற்கும் போது "இறைவா உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்று அனைவரின் பெயராலும் கூறகிறான்.

ஆம்! தனக்கு மட்டும் நேர்வழி கேட்பதில்லை. "இஹ்தினா" எங்களுக்கு நேர்

வழி காட்டுவாயாக என்று அனைவருக்கும் தான் கேட்கிறான்.

தொழுகையில் மட்டுமல்ல. நோன்பு நோற்பதும் இப்படித்தான். ஒருவர் ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்ணால் பார்த்துவிட்டால் கூட அவர் மட்டும் தனியாக நோன்பு வைப்பதில்லை. ஷவ்வால் மாதத்தின் தலைப்பிறையை அவர் பார்த்துவிட்டால் அவர் மட்டும் தனியாக பெருநாள் கடைப்பிடிப்பதில்லை. அப்படி செய்யவும் கூடாது.

ஏனென்றால் மக்களெல்லாம் நோன்பு வைக்கும் போதுதான் நோன்பு வைக்க வேண்டும். மக்களெல்லாம் பெருநாள் கடைப்பிடிக்கும் நாள் தான் பெருநாள். இதுபற்றி ஒரு ஆதாரப் பூர்வமான நபி மொழி உண்டு.

ஹஜ்ஜில் மக்களெல்லாம் அரஃபாவில் தங்கும் நாள் தான் அரஃபா தினம்.

அறிஞர் இப்னு தைமிய்யாவிடம் இப்படி ஒரு கேள்வி கேட்கப்பட்டது. "ஓர் ஊரில் துல்ஹஜ் மாதத்தின் தலைப்பிறையைச் சிலர் பார்த்தனர். ஆனால் நகர்ப் புறத்திலுள்ள (இஸ்லாமிய அரசின்) பொறுப்பாளர் இதை உறுதியான தகவலாக ஏற்கவில்லை. மறுநாள் தான் மாதம் துவங்குவதாக அவர் அறிவிக்கிறார்."

"இப்பொழுது இவ் ஊர் மக்கள் அரஃபா எனும் ஒன்பதாவது தின நோன்பை என்றைக்கு நோற்பது தங்கள் கணக்குப்படியா? அரசு அதிகாரியின் அறிவிப்பை ஏற்று எல்லோரும் நோற்கும் தினத்திலா?"

இதற்கு அறிஞர் இப்னுதைமிய்யா அளித்த பதில் : பொதுமக்கள் அனைவரும் நோன்பு நோற்கும் ஒன்பதாவது நாளில் தான் இந்த ஊர் மக்களும் நோற்றிட வேண்டும். இவர்கள் கணக்குப்படி இது பத்தாவது நாளாக இருப்பினும் சரியே!"

ஏனெனில் நபி (ஸல்) கூறினார்கள் "நீங்கள் நோன்பு நோற்கும் நாள்தான் உங்கள் நோன்பு. நீங்கள் பெருநாள் கடைப்பிடிக்கும் நாள் தான் உங்களின் பெருநாள். நீங்கள் குர்பானி கொடுக்கும் நாள் உங்களின் பெருநாள் (ஹஜ்ஜீப் பெருநாள்)".

**(நூல் : அபூதாவூத், திர்மிதி, இப்னு மாஜா)**

அண்ணல் நபி(ஸல்) கூறினார்கள், "மக்கள் (நோன்பைவிட்டு ஃபித்ர்) பெரு நாள் கடைப்பிடிக்கும் நாள் தான் பெருநாள். மக்கள் குர்பானி கொடுக்கும் நாள் (ஹஜ்ஜுப்) பெருநாள்"

**(நூல் : திர்மிதி)**

இதே கருத்தைத் தான் எல்லா அறிஞர்களும் கடைப்பிடிக்கின்றனர்.

ஹஜ்ஜில் பிறை ஒன்பதில் அரபாவில் தங்க வேண்டும். தவறுதலாக பத்தாவது தினத்தில் (இதுவே ஒன்பதாவது தினம் எனக் கருதி மக்களோடு மக்களாக) தங்கினால் அது நிறைவேறிவிடும் என்பது அறிஞர்களின் ஏகோபித்த முடிவு (சிலரின் கணக்கில் அது பத்தாவது தினமாக இருப்பினும் சரியே)

அது அவர்களின் அரஃபா தினம் என ஏற்கப்படும்.

**(நூல் : ஹன்பலீ சட்ட நூலான காயத்துல் முன்தஹாவின் விரிவுரை)**

எனவே சமுதாய ஒற்றுமையே முக்கியம்.


**தொடரும்**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ள கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்

8148129887

# பர்மா வாழ் ரோகனிகா முஸ்லிம்கள் அகதிகள் அலிகர் (இந்தியா) வந்தார்கள்




பர்மாவில் புத்த பிட்சுகளின் கெடுபிடிகளுக்கும் படுகொலைகளுக்கும் ஆளான முஸ்லிம்கள் உயிர்பிழைத்த முஸ்லிம் பலர் வட இந்தியா வந்தார்கள். மொத்தம் 198 குடும்பத்தினர் வந்திருக்கின்றனர்.

அவர்கள் அலிகர், காலிடிகஞ்ச், பரீதாபாத், கஜூரி காஸ், மாதுரா, முவாட், ஷஹாரன்பூர், மீரட் ஆகிய இடங்களுக்கு வந்தனர். வட இந்தியாவில் இயங்கி வரும் சேரிட்டி அலையன்ஸ், என்ற அமைப்பும், மஜ்லிசு முஷாவரத் என்ற அமைப்பும் இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றன.

இவற்றில் காலிடிகஞ்ச் என்ற இடத்திலுள்ள ரோகினிக்கா முஸ்லிம்களுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஹம்மத் அதீபும், அவருடைய நண்பர்களும் பல மாதங்களுக்குத் தேவையான உணவு பொருட்களையும், இதர மளிகை சாமான்களையும் வாங்கி தந்துள்ளார்கள்.

ஆனால் இதர இடங்களில் வாழும் பர்மா ஆகதிகளுக்கு அந்த அளவுக்குப் பொருள்களும் இதர வசதிகளும் போய்ச் சேர்ந்திடவில்லை என இந்த அகதிகளுக்கு உதவிகளைச் சேகரித்து வரும் டாக்டர் ஜாஃபருல் இஸ்லாம்கான் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால் உதவிகள் வந்து கொண்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்கள்.

உதவிகளை வழங்கிட விரும்புவோர் சேரிட்டி அலையன்ஸ் இன் தலைவர் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி 011-26947483, 26952825 கைபேசி: 098 68656614. இணையதள முகவரி : www. charityalliance.in

# நீலகிரி மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் முஸ்லிம்கள் மீது தொடரும் கெடுபிடிகள்

நான் சரவணபட்டியில் உள்ள சி.எம்.எஸ். கலைக் கல்லூரியில் படித்து வருகின்றேன். ஆதலால் எனது பாட்டி வீட்டில் தங்கி தினமும் கல்லூரிக்கு சென்று படித்து வருகிறேன். 19.08.2015 அன்று மாலை 5 மணிக்கு மேட்டுப்பாளையத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு எனது நண்பனின் குழந்தையை பார்ப்பதற்காக சென்றிருந்தேன். அப்பொழுது பஸ் நிலையம் முன்பு பா.ஜ.க.வின் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அந்த சப்தத்தின் காரணமாக நான் அங்கு சென்று அந்த ஆர்ப்பாட்டத்தினை பொதுவாக அனைவரும் அறியும் விதத்திலேயே வீடியோ எடுத்தேன். இதை பார்த்த சுப்ரமணியம் என்ற அதிகாரி எண்ணிடம் இருந்து செல்போனை பறித்து வைத்துக் கொண்டார். பிறகு என்னிடம் பெயரைக் கேட்டார், நான் அதற்கு நான் ஜிஸான் என்றேன். உன்னுடைய முழு பெயரை சொல்லு என்றார். அதற்கு நான் முகம்மது ஜிஸான் என்றேன். ஓ அப்படிச் சொல்லு என்றார் என்னுடைய முழு முகவரியையும் கேட்டனர். முழு விவரத்தையும் கொடுத்துவிட்டேன். “நீ கேரளாவில் எந்த இயக்கத்தில் இருக்குற? இந்த வீடியோலே யாருக்கு அனுப்பி விடுவதற்காக எடுத்திருக்க” என்று கேட்டனர். அதற்கு நான் எப்பொழுதும் போல பொதுவாகத்தான் எடுத்தேன் என்றேன். நீ எந்த காலேஜ்லே படிக்றே? ஐ.டி. கார்டு கொடுன்னு கேட்டார்கள். அதற்கு நான் முதலாம் ஆண்டு படிப்பதால் ஐ.டி. கார்டு இன்னும் தரவில்லை என்றேன். பிறனு என்னை மட்டும் தனியாக நிற்க வைத்து நேரா பாரு என்று சொல்லி இரண்டு அதிகாரிகள் போட்டோ எடுத்தனர். பிறகு என்னை யமஹா வண்டியில் ஏற்றி வீட்டுக்கு அழைத்தனர். நான் வீட்டுக்குகா வேண்டாம் திட்டுவாங்க. நான் வீடியோ எடுத்தது தப்பா இருந்தா என்ன மன்னிச்சுறுங்க என்று சொன்னதுக்கு வீட்டில கேட்டா பிரண்டுன்னு சொல்லிடு என்று சொல்லி பைக்கில் ஏற்றி அழைத்து சென்றுவிட்டனர். வீட்டிற்கு சென்று கண்ணன் என்பவர் என்னை உன்னுடைய ரூமை காட்டு என்று சொல்லி மேலே அழைத்துச் சென்றார். அங்கு சென்று “இது யாருடைய பேட்டு? அது யாருடைய கட்டில்?” என்று கேட்டு என்னுடைய புத்தகங்களையெல்லாம் நல்ல அலசி பார்த்துவிட்டு என்னுடைய வீட்டை யெல்லாம் சுற்றி பார்த்துவிட்டு எனது பாட்டியிடம் இத நீங்களா வெளியே சொல்லவேனாம் சொன்னாலும் உங்களுக்கு தான் பிரச்சினை என்று கூறிவிட்டு என்னையும் மேட்டுப்பாளையம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். செல்லும் போது கண்ணன் என்ற அதிகாரி இது கேரளா மாநிலம் இல்லை இங்க முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் ஆகாது. அதிக பிரச்சினை வரும் என்றார். பிறகு என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இனி மேலும் இப்படி செய்யக்கூடாது. செல் போனை எடுத்து வெளியே ஓடிருன்னு எஸ்.ஐ. சிவக்குமார் மிரட்டினார். என் செல்போனை எடுத்துட்டு வெளியே வந்து பார்த்தால் உள்ள இருந்த மெம்மரி கார்டு இருக்கவில்லை. ஆதலால் நான் உள்ளே சென்று என்னுடைய மெம்மரி கார்டு வேண்டும் என்று கேட்டதற்கு நீ இன்னும் போலயா? அங்க உட்காரு என்று எஸ்.ஐ. சிவக்குமார் சொன்னார். வேறொரு

போலீஸ் வந்து எஸ்.ஐ. சொன்னா கேட்கமாட்டியா? என்று சொன்னதுக்கு சார் என்னுடைய பிராஜக்ட் விஷயம். உயர் கல்வி படிப்பதற்கு தேவையான capID அதுலதான் சார் இருக்கு. உங்கள் காலை பிடித்து வேணா கேக்குறேன் சார் என்றேன். அதற்கு எஸ்.ஐ. சிவக்குமார் உனக்கு வேணுமா, இந்தா எடுத்துக்கோ என்று சொல்லி எனக்கு சொந்தமான மெம்மரி கார்டை உடைத்து கையில் கொடுத்து விட்டார். பிறகு நான் அங்கிருந்து வந்து விட்டேன். வந்ததில் இருந்து நான் மிகுந்த மன வேதனையும், மன உளைச்சாலும் அவதிப்பட்டேன். மேலும் வீட்டை போலீஸ் வந்து சோதனை போட்டது தெரிந்து பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் மானம் போகும் என்று எனது பாட்டியும் என்னை திட்டியதோடு விடிய விடிய பயத்தினால் அழுது கொண்டிருந்தார். இதனை பார்த்த எனக்கு மன உளச்சலும் அதிகமாகி மரணத்தை நினைக்கும் அளவிற்கு மன வேதனை அடைந்தேன். சட்டத்தை நிலை நாட்ட வேண்டிய ஜாதி மத வேறுபாடுகளை கடந்து கடமை ஆற்ற வேண்டிய காவல்துறை அதிகாரிகள் மதத்துவேச எண்ணத்தோடும் ஒரு சமூகத்தை குற்றப்பரம்பரையாக சித்தரிக்கும் எண்ணத்தோடும் செயல்படு கின்றன. இந்த அதிகாரிகளுக்கு சட்டப்படி நாம் தண்டனை பெற்று தரவேண்டும். தவறு செய்தது நாம் அல்ல என்று என்னை நானே சமாதானம் செய்து கொண்டு இந்த புகார் மனுவை தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். தயவு கூர்ந்து சட்ட விதிபடி எனது வீட்டை சோதனை செய்தவர்கள் மீதும், எனது பொருளை பறித்து வைத்துக் கொண்டு திருப்பி கேட்டதற்காக அதனை உடைத்துக் கொடுத்தவர்கள் மீதும் சட்டப்படியும், துறைரீதியாகவும் நடவடிக்கை எடுப்பதோடு, எனக்கு மிகுந்த மன உளைச்சலையும், தற்கொலை எண்ணத்தை தூண்டியதற்கும், எனது மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தியதற்கும் மததுவேஷத்தோடு நடந்து கொண்டதற்கும் உளவுத்துறை காவலர் சுப்ரமணி, கண்ணன், எஸ்.ஐ. சிவக்குமார் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது படிப்பிற்கு இவர்களால் எந்த பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாப்பு தருமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**முகமது நிஸான்**

---


**வரப்பெற்றோம்**

# இதுதான் கிருஸ்தவம்

**எஸ். உமர் ஃபாரூக்**

(முன்னாள் கிருஸ்தவ பாஸ்டர்)

வெளியீடு

**பீஸ் லைப் பப்ளிகேஷன்ஸ்**

**சென்னை - 600 075.**

E-mail : peacelifepub@live.com

**விலை ரூபாய் 50.00**

**பக்கங்கள் 127**



# கலவரச் சூழலில் தூத்துக்குடி மாவட்டம்





கடந்த மாதம் (7.8.2015) வெள்ளிக் கிழமை அன்று கலவர சூழலில் தூத்துக்குடி மாவட்ட உடன்குடி.

7.8.2015 வெள்ளிக்கிழமை காலை தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் உள்ள சல்மா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் பஸ் டிரைவரின் கவணக் குறைவால் விபத்து ஒன்று நடந்தது.

**4வயது சிறுமி பலியானாள்.**

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அருகேயுள்ள லெட்சுமி புற பஞ்சாயத்துக்கு உட்பட்ட மருதூர் கரையைச் சேர்ந்தவர் பட்டாணி செல்வன் அவருடைய மனைவி சுடலைகனி இவர்களுக்கு துர்கா லெட்சுமி (7), நேகா (4) ஆகிய இரண்டு மகள்கள். இவர்கள் இருவரும் சல்மா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் படித்து வந்தனர். துர்கா லெட்சுமி இரண்டாம் வகுப்பும், நேகா எல்.கே.ஜியும் படித்து வந்தனர்.

இவர்கள் இருவரும் பள்ளி வாகனத்தில் வருவது வழக்கம். வழக்கம் போல் 7.8.2015 அன்றும் வாகனத்தில் வந்தார்கள். பள்ளி வாகனத்தை பரமன்குறிச்சியை சேர்ந்த கர்ணன் என்பவர் ஓட்டி வந்தார். அன்று கிளீனர் வராததால் வளாகத்திற்குள் குழந்தையை இறக்கி விட்டு விட்டு அடுத்த டிரிப் அடிப்பதற்காக வண்டியை ரிவர்ஸ் எடுக்கும் போது நேகா என்ற குழந்தை பள்ளி வாகன பின் சக்கரத்தில் சிக்கி இறந்தது. இந்த தகவல் பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டு பெற்றோரும் உறவினர்களும் பள்ளிக்கு வந்தனர். இந்த நிகழ்வு அந்தப் பகுதியில் விரைவாகப் பரவியது.

இந்த விபத்தை காரணம் காட்டி எதிர்பார்த்திருந்த இந்துத்துவவாதிகள்

பள்ளியையும், பள்ளி வாகனத்தையும் அடித்து நொறுக்கியது மட்டுமின்றி அங்கு ஒரு முஸ்லிம் இளைஞரையும் தாக்கி யுள்ளனர். இதற்கு காரணம் பள்ளி முஸ்லிம்களுக்கு சொந்தமானது என்பதால். இருப்பினும் டிரைவர் ஒரு இந்துவாக இருந்த காரணத்தால் அவர்கள் அவரை விட்டு விட்டனர். டிரைவர் ஓர் முஸ்லிமாக இருந்திருந்தால் அவரை அவர்கள் கொன்றே இருப்பார்கள்.

விபத்து நடந்ததை யாராலும் ஜீரணிக்க முடியாத ஒன்று. அதுவும் பச்சிளம் குழந்தை என்பதால் கல் நெஞ்சம் கூட இச்சம்பவத்தை கண்டு கலங்கிவிடும். குழந்தையை இழந்த பெற்றோர்களுக்கு எதைக் கொண்டும் அந்த இழப்பை சரி செய்ய முடியாது. இருப்பினும் பள்ளி நிர்வாகம் இருபத்து ஐந்து லட்சம் ரூபாயை அக்குடும்பத்திற்கு இழப்பாக கொடுத்தது. மட்டுமல்லாமல் இறந்த குழந்தையின் சகோதரி துர்கா லெட்சுமி +2 வரை ஆகும் படிப்பு செலவுகளை நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

பள்ளி நிர்வாகத்தை சேர்ந்தவர்கள் செல்வாக்கு உள்ளவர்கள் என்பதால் உடனடியாக காவல் துறையும், அதிரடிப் படைகளும் குவிக்கப்பட்டதால் முஸ்லிம் மீது நடத்தப்பட இருந்த கலவரம் தடுக்கப்பட்டது. காவலர்கள் கலவரக்காரர்களை தடியடி நடத்தி தடுத்திருக்கலாம். ஏனோ அதை செய்யவில்லை.

**உடன்குடியில் பொது நலத்தில் முஸ்லிம்களின் பங்கு**

இங்கு முஸ்லிம்கள் மைனாரிட்டி ஆக இருந்தாலும் பொது சேவையில் முஸ்லிம் களின் பங்கு அதிகமே. உதாரணத்திற்கு உடன்குடி பஸ்நிலையம் முதல் அரசு மருத்துவமனை வரை இவற்றிற்கெல்லாம் இடத்தை இலவசமாக கொடுத்தது முஸ்லிம்கள்தான் என்பதை யாராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. இப்படி இருந்தும் பள்ளியில் நடந்த விபத்தை காரணம் காட்டி முஸ்லிம்கள் மீது கலவரத்தை நடத்த தீயசக்திகள் தயாராவது ஏன்?

இந்தியாவின் பல மாநிலங்களில் பச்சிளம் முஸ்லிம் குழந்தைகளை கொன்று குவித்த இவர்களுக்கு என்ன தகுதி இருக்கின்றது. இவர்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் கலவரத்தால் வளர்ந்தது போல, தமிழகத்திலும் வளர்வதற்கு இவர்கள் கலவரத்தை எதிர்பார்க்கிறார்கள். இதை அரசும், காவல் துறையும் தடுக்குமா? அல்லது வேடிக்கைப் பார்க்குமா?

**அபுஆலியா**


**இந்நூல் வேர்கள் வெளியீட்டகத்திலும் கிடைக்கும்**

**காமராஜர் கொலை முயற்சி சரிதம்**

**கி. வீரமணி**

வெளியீடு


**பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்**

**பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,**

**வேப்பேரி, சென்னை - 600 007.**

E-mail : peacelifepub@live.com

**நன்கொடை : ரூபாய் 50.00 பக்கங்கள் - 142**



# நெஞ்சு பொறுக்குதில்லையே!

**நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைக்கையிலே!**

ஆம்! நம் தாய் நாடாம் திருநாட்டில் தினம் தினம் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

என்னடா இது! அனு தினமும் கைதுகளும் நடந்து கொண்டு தானே இருக்கிறது. குற்றவாளிகளும் சிறையில் அடைக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும், சொல் லொனா கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டும், இறுதியில் தூக்கில் இடப்பட்டும் கொல்லவும் படுகிறார்களே. அப்படியிருந்தும் குற்றங்கள் ஏன் குறையவில்லை என்று பேரதிர்ச்சியில் பார்த்தால் ஆம், உண்மை இரத்தத்தை உரைய வைக்கிறது. கேளுங்கள் நல்லுள்ளம் கொண்டவர்களே!

நிரபராதிகளும், அப்பாவிகளும் அவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்தால் குற்றவாளிகளாய் மாற்றப்பட்டு கொல்லப்படுகிறார்கள்.

தன் குற்றங்களை நீதிபதியின் முன்பு தானே ஒப்புக் கொண்டப் பின்பும் அவர்கள் இந்துத்துவவாதிகளாக இருப்பதனால் குற்றவாளிகளும் கொலை வெறியர்களும், நிரபராதிகளாய் நிம்மதியாய் வெளியே சுற்றிக் கொண்டு மென்மேலும் வன் கொடுமைகளை செய்துக் கொண்டு வருகிறார்கள்.

இப்படி இருந்தால் எப்படி குற்றங்கள் குறையும்?

ஏன் இந்த அவல நிலை? ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம் ஆனால் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்பட கூடாது என்பதல்லவா? சட்டத்தின் விதி.

இதை யார் யாருக்காக எப்போது மாற்றியது? "கருப்பு துனி கட்டப் பட்டிருப்பது சிலையாய் நிற்கும் நீதி தேவதையின் கண்களிலா? அல்லது உயிரோடும், உணர்வோடும் இருக்கும் நீதிபதிகளின் கண்களிலா?

நீதிபதிகளே! நீங்களும் எங்களைப் போன்ற சதை மூடிய இரத்தமும், தொடு உணர்வு கொண்ட தோல் மூடிய மனசாட்சி படைத்த மனிதர்கள் தானே நீங்கள்! ஏன் இந்த ஓர வஞ்சனை!

பாருங்கள், எங்கள் இஸ்லாமிய நீதிபதிகளை உலக வரலாற்றிலே யூதர்களை வேட்டைப் பொருட்களாக நடத்திய கிறிஸ்தவர்களிடம் இருந்து யூதர்களை காப்பாற்றி அவர்களும் மனிதர்களே என்று கூறி மனித நேயத்தை வாழ வைத்த உமர்(ரலி) அவர்களின் நீதியை நீங்கள் அறிவீர்களா? தனது ஆட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒரு ஆட்டு குட்டி பசியினால் இறந்தாலும் கூட அதற்காக தன் இறைவனிடத்தில் பதில் கூற வேண்டும் என்று அஞ்சி அழுத எங்கள் நீதிபதி உமரை நீங்கள் அறிந்ததுண்டா?

இதனால் தான் மகாத்மா காந்தியும் சொன்னார், "இந்தியாவில் நீதி மலர உமரின் ஆட்சி அமைய வேண்டும்" என்று. இவர்களிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் காப்பாற்றத் துடிக்கும் அந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட இந்துத்துவா குற்றவாளிகள் உங்களுக்கு யார்? நீங்கள் அழிக்க நினைக்கும் இவர்களுக்கு எதிராக வலுவான ஆதாரங்களே இல்லை என்று உங்களில் ஒரு நீதிபதி கூறி பின்பும் நீங்கள் தூக்கில் இடுகின்றீர்களே அப்பாவி முஸ்லிம்களாகிய நிரபராதிகளாகிய நாங்கள் உங்களுக்கு யார்?

எல்லோரும் நாளை ஒரே இறைவன் முன்பு தானே நிற்க போகிறோம்? நீங்கள் கடவுள்கள் என்று வணங்கும் அவர்கள் மட்டும் என்ன குற்றவாளிகளுக்கா துணை நின்று உதவி செய்ய போகிறார்கள்?

கடவுளின் இலக்கணத்தையே மாற்றி அமைத்து விடுவீர்கள் போல் அல்லவா இருக்கிறது?

அப்படி என்றால் எதற்காக, யாருக்காக இறைவனை மிஞ்சியும் யாரை திருப்திபடுத்த இந்த அநியாயங்களை செய்கிறீர்கள்?

உங்கள் பிள்ளைகளுக்கோ அல்லது உங்கள் பிள்ளைகளின் கணவர்களுக்கோ அல்லது உங்கள் பேரக்குழந்தையின் தந்தைகளுக்கோ? இந்த நிலை என்றால் இப்படி இதே தீர்ப்பைத் தான் நீங்கள் வழங்குவீர்களா? அவர்கள் குற்றவாளிகளாக இருந்தாலும் கூட அவர்களை காப்பாற்றவே உங்கள் உள்ளம் துடிக்கும். அப்படியென்றால் ஒரு அப்பாவியை ஏன் தண்டித்தீர்கள்? மத சார்பின்மை என்று பேசிக் கொண்டு பாபர் மஸ்ஜித் வழக்கில் குரங்கை வைத்து தீர்ப்பு சொன்னவர்கள் தானே நீங்கள்?

நீங்கள் சிறையில் அடைக்கும், தூக்கில் இடும் எங்கள் அப்பாவி இஸ்லாமிய சகோதரர்களும் உங்களை போன்றே ஒரு தாயின் மகன் அல்லவா! ஒரு சேயின் தந்தை அல்லவா! ஒரு மனைவியின் கணவர் அல்லவா! ஒரு சகோதரியின் சகோதரன் அல்லவா! கூறுங்கள்.

நாங்கள் யாருக்கு என்ன தீங்கு செய்தோம்? எங்கள் வழி எங்களுக்கு உங்கள் வழி உங்களுக்கு என்று தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒன்றை மட்டும் உங்களிடம் கேட்கிறோம். “ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் வருவதுண்டோ மீண்டும் பூமியில்” என்பார்கள்.

ஏன் இப்படி எங்களை சிதைக்கிறீர்கள்? புதைக்கிறீர்கள்? எங்கள் குடும்பத்தினர் விடும் கண்ணீருக்கும் நாங்கள் சிந்திய ரத்தத்திற்கும் கண்ணீருக்கும் என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்? மரணம் என்ற மாலை நம் எல்லோர் கழுத்திலும் மாட்டப்பட்டு நம்மை துரத்திக் கொண்டே இருக்கிறது. அநியாயமாக கொல்லப்பட்ட ஒரே காரணத்தால் நாங்கள் இறைவனிடத்தில் நேரடியாக சொர்க்கத்தில் நுழைந்து விடுவோம். ஆனால் எங்களை அநியாயமாக கொன்றதற்காக மறைமுகமாகவோ, தலை கீழாகவோ நின்றாலும் சொர்க்கத்தின் வாடையை கூட உங்களால் உணர முடியாதே!

யாகூப் மேமனிடம் அவரை தூக்கி இடும் முன் அவரின் கடைசி ஆசையை கேட்டதற்கு அவர் கூறிய வார்த்தை அவருக்கு முன் உங்களை “தூக்கில் இட்டுவிட்டதை, நீங்கள் உணர்ந்தீர்களா?”

உண்மை குற்றவாளிகளை கண்டுபிடியுங்கள் என்பதே என்றாரே. உங்களால் கொல்லப்பட்ட அவர் இப்போது சொர்க்கச் சோலைக்கு சென்று விட்டார். உண்மை குற்றவாளிகளை அறிந்தும் நீங்கள் அறியாதவர்களாய் இருக்கின்றீர்களே, உங்கள் ஜனநாயகத்தை நம்பி வந்த எங்கள் சகோதர குடும்பத்திற்கு நீங்கள் செய்த கைமாறு தான் ஜனநாயக படு கொலை. எங்கள் உமரின் ஆட்சி மலரும்! அப்போது நீதி தவறியவர்களும், நிம்மதியாய் வெளியே திரியும் உண்மை குற்றவாளிகளையும் தூக்கிலிடும் நாளை நாங்கள் எதிர்பாக்கிறோம். உங்களுக்கு மரணம் வரும் முன் நீதியை நிலை நாட்டுங்கள். இலையேல் நீங்கள் நாளை நிற்பீர்கள் இறைவன் முன் குற்றவாளி கூண்டில். குற்றவாளிகளாய், தூக்கு தண்டனை கைதிகளாய்.

## மணவிலக்கு பரிகாரம் மறுமணமே என்பதை இஸ்லாத்தின் வழிகாட்டுதலை கிருஸ்தவ திருச்சபைகளும் ஏற்றன!

திருமணங்கள் சொர்க்கத்தில் அதாவது வானத்தில் நிர்ணயிக்கப் படுகின்றன. அவற்றை மனிதன் இந்த மண்ணில் வாழும் வரை பிரிக்க கூடாது என்ற விடாப்பிடி தத்துவம், கிருஸ்தவத்தை முதலில் பீடித்திருந்தது.

அடுத்து யதார்த்த வாழ்க்கையில் மண விலக்குகள் தவிர்க்க முடியாதவை என்றாகின. அதனைப் புரிந்து கொண்டு மணவிலக்கை விவகாரத்தை அனுமதித்தது கிருஸ்தவம்.

ஆனால் விவாகரத்தைப் பெற்ற வர்கள் மறுமணம் செய்தால், அவர் களைத் திருச்சபைகளிலிருந்து ஒதுக்கி வைத்திட வேண்டும் என சட்டம் வகுத்தனர்.

இப்போது கிருஸ்தவ மதத் தலைவர் போப் அவர்கள் அதாவது போப் பிரான்சிஸ் அவர்கள், அப்படி மறுமணம் செய்து கொண்டவர்களை ஒதுக்கி வைத்திடக் கூடாது என அறிவித்துள்ளார்கள்.

ஆனால்இந்தப் பிரச்சினை களுக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்னரே இஸ்லாம் தெளிவான தீர்வுகளைத் தந்தது. அதுதான் மனிதர்களுக்காக இறைவன் அருளி நிறைவடைய செய்த மார்க்கம். அதனை ஏற்று இதுபோன்ற அத்தனைக் குடும்பப் பிரச்னை களுக்கும் தீர்வு காண்போம்.

**எம்.ஜி.எம்.**

## சென்னைக்கு 376ஆவது பிறந்த நாள்!

பிறப்பு : 1639 ஆகஸ்ட் 22.

1646 இல் சென்னையின் மக்கள் தொகை 19 ஆயிரம்.


ஆங்கிலேயர்கள் தாங்கள் வாழ்ந்த பகுதி அல்லாதவற்றைக் கறுப்பர் நகரம் எனஅழைத்தார்கள்.

இந்தியாவின் முதுல் நகராட்சி சென்னை.

1895 மே 7 முதல் டிராம்கள் ஓடிய நகரம்.

1873 இல் சென்னை சென்டரல் இரயில் நிலையம் கட்டப்பட்டது.

1908 ஆம் ஆண்டு எழும்பூர் இரயில் நிலையம் கட்டப்பட்டது.


**இயேசுவின் மார்க்கம்**

**எஸ். உமர் ஃபாரூக்**

(முன்னாள் கிருஸ்தவ பாஸ்டர்)

வெளியீடு

**பீஸ் லைப் பப்ளிகேஷன்ஸ்**

E-mail : peacelifepub@live.com

**விலை குறிப்பிடப்படவில்லை - பக்கங்கள் 124**

# மோடியின் மற்றொரு மோசடி! 40 ஆயிரம் இளைஞர்கள் நட்டாற்றில்!

அமேதி ஏப்ரல் 13- உத்திரப்பிரதேச மாநிலம் அமேதியில் உணவு பதப் படுத்துதல் மற்றும் விற்பனைத் தொழிற்கூடத்திற்கு மன்மோகன் சிங் தலைமையில் அமைந்த அரசு கொடுத்த உத்தரவை ரத்து செய்துள்ளது மோடி அரசு. இதன் மூலம் 40 ஆயிரம் இளைஞர்கள் நேரடியாக வேலை இழப்பார்கள். மேலும் இதனை நம்பியுள்ள அப்பகுதியைச் சேர்ந்த ஒரு லட்சம் விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள்.

ராகுல்காந்தியின் தொகுதியான அமேதியில் பழம் மற்றும் தானியப் பொருட்கள் பதப்படுத்தும் மற்றும் விற்பனைத் தொழிற்கூடம் அமைக்க முடிவு செய்து அதற்கான இடம்ட மற்றும் ரூ. 350 கோடி ஆரம்ப நிதியாக ஒதுக்கப்பட்டது. தொழிற் கூடம் கட்டப்பட்டு 2013 ஆம் ஆண்டு திறப்புவிழாவும் நடைபெற்றது.

இந்த நிலையில் அங்கு தொழிற் கூடம் அமைக்க பல்வேறு நபர்கள் விருப்பம் தெரிவித்திருந்த நிலையில் மத்தியில் ஆட்சி மாற்றம் நடைபெற்றது. புதிய ஆட்சி அமைக்க பெற்ற பிறகு தொழிற் கூடம் செயல்படும் என்று நினைத்திருந்த சிறு குறு தொழில் முனைவோருக்கும் மோடி அரசு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது.

ஆரம்பத்தில் அரசிடம் இருந்து ஏதாவது தகவல் வரும் என்று எதிர்பார்த்திருந்த தொழில் முனைவோருக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. தற்போது அந்த தொழிற் கூடம் முழுவதும் ஆதித்ய பிர்லா நிறுவனத்திற்கு வழங்கிவிட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன.

ஆரம்பத்தில் இருந்தே இந்த தொழிற் கூடத்திற்கு தேவையான எரிபொருள் மற்றும் நீராதாரம் போன்றவை வழங்க பல்வேறு தடைகளைப் போட்டுவந்தது. இந்த நிலையில் எரி பொருட்களை மத்திய அரசு தரமுடியாது என்றும் தெரிவித்துவிட்டது.

மத்திய அரசின் தொழில்துறை அமைச்சகத்தின் வாயிலாக வெளிவந்த செய்தி. தொழிற்கூடம் அமைக்க தற்போதுள்ள இடம் 40 ஏக்கர் தகுதியானதல்ல. மேலும் இந்த இடத்தில் தொழில் தொடங்கினால் அவற்றைச் சந்தைப்படுத்த அதிக செலவு செய்ய வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளது. தனியார் நிறுவனத்திற்கு கொடுத்தால் சந்தைச் செலவு முதல் அனைத்தையும் அந்த நிறுவனமே ஏற்றுக் கொள்ளும். இதனால் அரசுக்கு வருவாய் பெருகும். நேரடி தொழிற் பேட்டையினால் மானியங்களும் கொடுக்க வேண்டி இருக்கும். இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு தான் ஏற்படும் என்று அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இது குறித்து உத்தரப் பிரதேச தொழில் வளர்ச்சிக் கழகம் கூறுவதாவது, அமேதியில் பல்வேறு தொழிற் கூடங்கள் துவங்க நிலங்களை ஒதுக்கும் படி மன்மோகன் சிங் தலைமையில் ஆன அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாங்கள் இடம் ஒதுக்கியிருந்தோம். ஆனால் தற்போதைய அரசு அந்த நிலங்களை சரியான வகையில் பயன்படுத்தாமல் தனியார் நிறுவனங்களுக்குத் தரும் வேலையில் இறங்கியுள்ளது. மாநில தொழில் வளர்ச்சி என்ற பெயரில் தனியார் நிறுவனங்களுக்கு நிலம் வழங்கும் மத்திய அரசின் ஆணை குறித்து உத்திரப் பிரதேச அரசிடம் நாங்கள் விரிவான அறிக்கை ஒன்றை வழங்கியுள்ளோம் என்று கூறினர்.

அமேதி மட்டுமல்லாமல் எதிர்க் கட்சி தலைவர்களின் தொகுதியில் பல்வேறு வளர்ச்சி பணிகளை பாதியிலேயே மோடி தலைமையினால் ஆன அரசு நிறுத்தியுள்ளது. அல்லதுதேவையான வசதிகளை செய்து தர முன்வரவில்லை. என்ன அரசியலோ!

**விடுதலை -13.4.2015**

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# துருக்கியில் நிகழ்ந்த அறிவுத் தேக்கம்

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

இலக்கியவாதி காலிதா, அதீப் ஹானி துருக்கியில் முன்னேற்றமின்றி தேங்கிக் கிடந்த கல்வி ஞானத்தைப் பற்றி அழகான முறையில் விளக்கியுள்ளார். அவற்றை இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தம் என நினைக்கிறோம்.

இஸ்லாமிய தத்துவஞானிகளின் தத்துவங்கள் உலகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் போது, துருக்கியில் இருந்த இஸ்லாமிய அறிஞர்கள் தங்கள் கடமைகளை செவ்வனே செய்து கொண்டிருந்தனர். சுலைமானியா பல்கலைக்கழகமும், பாதிகு பல்கலைக்கழகமும் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கல்வி ஞானக்கலைகளின் மையைக் கேந்திரமாக இருந்தன.

மேற்கத்தியவர்கள், இறைஞானம் கதைக்கு உதவாத விவாதங்கள், பயனற்ற மார்க்க ஆய்வுகள் என்ற முரட்டு விலங்குகளிலிருந்து விடுபட்டு புதிய அறிவியல் ஆய்விற்கு அடித்தளமிட்டு உலகத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய போது இந்த இஸ்லாமிய அறிஞர்கள் குழு அவர்களிலிருந்து (மேற்கத்தியர்) தேவையானதைப் பெற்றுக் கொண்டு கற்றவற்றைக் கற்பிப்பது அவர்களின் மேலானப் பொறுப்பெனக் கருதவில்லை. கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களின் கடமைகளை நன்குணர்ந்து அதனைச் செயல்படுத்தவுமில்லை. பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்த கல்வியும், அறிவியலும் அந்த இடத்தைவிட்டும், தாண்டி முன்னேறாது என்றே நம்பி இருந்தனர். இந்தத் தவறானச் சிந்தனை கல்வி கற்பிக்கும் அமைப்பிலும் புரையோடிப் போய் இருந்தது. இதுவே பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை நீடித்தது.

துருக்கிய உலமாக்களின் இந்த சிந்தனையும் மற்ற இஸ்லாமிய நாடுகளில் மேலோங்கிப் போயிருந்த இந்தக் கருத்துக்கள் தீனுல் இஸ்லாத்தை சார்ந்தல்ல. இறைஞானத்திலும் முஸ்லிம்கள் மற்றும் கிருத்தவர்களிடத்திலிருந்த இந்த விவாதக் கலைகள் கிரேக்கத் தத்துவத்தின் அடிப்படையில் எடுக்கப் பட்டவை. உருவ வழிபாட்டு தத்துவ

ஞானியாக இருந்த அரிஸ்டாட்டிலின் கருத்துகள் தான் இவைகளில் மிக அதிகமானவை. இந்த இடத்தில் கிருத்தவ அறிஞர்களின் மன ஓட்டத்தையும் முஸ்லிம் அறிஞர்கள் மனப் போக்கையும் சுருக்கமாக ஒப்பீடு செய்து பார்ப்பது பொருந்தும் என நினைக்கின்றேன்.

பௌதீக உலகம் எவ்வாறு படைக்கப் பட்டது என்பது பற்றி திருக்குர்ஆன் விவரமாகக் கூறவில்லை. ஒழுக்கப்பண்பாடு, சமூக வாழ்க்கைப் பற்றியே அல்குர்ஆனில் அதிகமான போதனைகளும் முக்கியத்துவங் களும் இருக்கின்றன. நன்மை, தீமை, நல்லவை தீயவை பற்றித் தெளிவாகக் கூறுவதே அதன் இலட்சியமாக இருக்கிறது. உலகம் பின்பற்றுவதற்கான ஒரு வழியை கொண்டு வந்துள்ளது. பௌதீக உலகத்திற்கு அப்பாற் பட்டதைக் கூறும் போதும் ஆன்மிக விளக்கங்களை பற்றிச் சொல்லும் போதும் அதில் எந்தச் சிக்கலும் இல்லை. எந்த சந்தேகமும் இல்லை. குர்ஆனின் அடிப்படை இலக்கே ஏகத்துவம். இஸ்லாம் எளிமையான பெருந்தன்மையுள்ள மார்க்கம். பௌதீக உலகத்தில் ஏற்படுகின்ற புதிய சித்தாந்தங்கள், தத்துவங்களை இஸ்லாம் மற்ற மார்க்கங் களைவிட விரிந்த இதயத்தோடு ஏற்றுச் கொள்கிறது. இந்த நிதானப் போக்கும் புதிய அறிவியல் நுட்பங்களுக்கு உதவியாக இருக்கும் இஸ்லாத்தின் எளிமையும் முஸ்லிம்களின் வாழ்வில் நீண்ட நாள் நீடிக்கவில்லை.

ஹிஜ்ரி ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் தத்துவ ஞானிகள் இறைச் சித்தாந்தத்தை இதை விட இஸ்லாமிய பிக்ஹு சட்டத்தையும் கூட முரட்டுச் சங்கலிகளாலும் கரடுமுரடான விலங்குகளாலும் கட்டிப்போட்டு விட்டனர். ஆய்வுகள் ஆராய்ச்சிகளின் லாயங்களை இருக்க மூடிவிட்டனர். இந்த நேரத்தில் அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள், தத்துவங்கள் இஸ்லாமியத் தத்துவத்தில் ஊடுருவ ஆரம்பித்தன.

இதற்கு மாற்றமாக கிருத்துவ மார்க்கம். இதனை துறவி Poles உடைய மார்க்கம் எனச் சொன்னால் மிகப் பொருத்தம். விவிலிய நூலின் (பைபிள் முதல் அத்தியாயத்தில்) பௌதீக உலகம் பற்றி மிக விளக்கமாகக் கூறியுள்ளார். இதனை அல்லாஹ்வுடைய வேதம் என நம்புகிற கிருத்துவர்களுக்கு இதனை (பௌதீக உலகம் பற்றிக் கூறியதை) நம்ப வைக்க வேண்டும். ஆனால் நேரடி ஆதாரங்கள் அவர்கள் கூறும் கருத்துக்கு முரணாக அமையும் போது அரிஸ்டாட்டி லின் தத்துவங்களை ஆதாரமாக்கிகக் கொண்டனர். ஏனென்றால் மயக்குகின்ற சொல்லாட்சிக்கு சூனியத்திற்குச் சமமான சக்தி இருக்கிறது.

மேற்கத்தியவர்கள் பௌதீகப் பாடத்தில் ஆராய்ச்சி செய்து பகுத்து, தொகுத்து திறனாய்வு செய்யும் அறிவியல் ஆய்வுகளில் களமிறங்கிய போது, கிருத்தவ திருச்சபை இரும்புக் கரங்களால் தடுத்து நிறுத்தியது. ஆனால், அறிவியல் அறிஞர்கள் பல ஆய்வுகள் செய்து பல முக்கிய கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடித்து வெளியிடும் அளவிற்கு வந்த போது கிருத்தவ திருச்சபையின் அதிகாரம் தங்கள் கைகளை விட்டுச் சென்று விடுமோ என, கிருத்துவ மதப் போதகர்கள் பயந்தனர். அதனால், மார்க்கத் திற்கும் அறிவியலுக்கும் பெரும் மோதல் ஏற்பட்டது. அறிவியல் விஞ்ஞானத்தில் ஆராய்ச்சிகளில் தங்களை முற்றிலும் அர்ப்பணித்த பெரிய பெரிய விஞ்ஞானிகள் அந்த மோதலுக்கும் பலிகடாவாக ஆக்கப் பட்டனர்.

மார்க்கத்திற்கும் அறிவியலுக்கும் இடையே பெரும் மோதல் ஏற்பட்டது. அதன் பின்னர் கிருத்தவ திருச்சபை நிகழ்காலத்தை எதிர் கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அவர்கள் பள்ளிகள், கல்லூரி களின் பாடத்திட்டங்களில் பௌதீகக் கல்வியைத் திணித்தனர். கடந்த கால இஸ்லாமிய பல்கலைக்கழகங்களுக்கு நேற்று வரை எந்த வித வேறுபாடும் இல்லாத

இக்கல்லூரிகள் பௌதீகக் கல்வியின் மையங்களாகவும் புத்தம் புதிய அறிவியல் விஞ்ஞானத்தின் கேந்திரமாக மாறின. இதன் விளைவு கிருத்தவ திருச்சபைக்கு படித்த மக்களின் பெரும் பிரிவினர் மீது அதிகாரம் ஏற்பட்டது. இதன் விளைவு கத்தோலிக்க மற்றும் புரோட்டஸ்டன்ட் போப்புகளுக்கும் மார்க்கப் போதகர்களுக்கும் இந்த புத்தம் புது அறிவியல் விஞ்ஞானத்தில் பெறும் பங்கு ஏற்பட்டது. இதனால் ஒவ்வொரு துறையிலும் இளந்தலைமுறையினரோடு கருத்துப் பரிமாற்றம் செய்ய முடிந்தது.

துருக்கிய உதுமானிய அறிஞர்கள் அதற்கு நேர் மாற்றமாக இருந்தனர். புதிதான கல்விஞானத்தைப் பெறுவதற்கு எண்ணமே இல்லை. ஆனால் அவர்களின் பகுதிகளில் புதிதான சிந்தனைகள் நுழையாமல் பார்த்துக் கொண்டனர். இஸ்லாமிய சமூகத்திற்கு கல்வி கற்பிக்கும் பொறுப்பை கையில் எடுத்தாலும் புதிதான விஷயங்கள் நெருங்கக் கூட அனுமதிக்கவில்லை. அவர்களின் கல்வி போதனா முறையில் பழமையே நீடித்தது. வீழ்ச்சியின் காலகட்டத்தில் அவர்களின் அரசியல் ஈடுபாடுகள் அத்துமீறிச் சென்றன. ஆய்வு செய்தல் திறனாய்வு, பகுத்தாய்வு செய்தல் போன்ற கஷ்டங்களை மேற்கொள்ளும் விசாலமான நெஞ்சங்கள் அவர்களிடத்தில் இல்லை. அரிஸ்டாட்டிலின் தத்துவத்தை இறுக்கப்பிடித்துக் கொண்டு அதிலிருந்து ஆதாரங்களை திரட்டுவதை அவர்களின் வேலையாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்த அனைத்து மத்ரஸாக்களும் பதிமூன்றாம் நூற்றாண்டில் இருந்ததைப் போன்றே இருந்தது.

தொடரும்


**26/11 விசாரணை**

**நீதித் துறையும்**

**மயங்கியது ஏன்?**

**நூல் வெளியீட்டு விழா**

**இடம் :**

**ரோஸ் மஹால், திருச்சி**

**நாள்: 11.9.2015**

**நேரம் :**

**மாலை 6.45 மணிக்கு**


**இன்ஷா அல்லாஹ்**




**அன்றைய தினம் சிறப்புச் சலுகையாக ரூபாய் 220க்கு விற்கப்பட்ட இந்த நூல் ரூபாய் 100க்கு விற்கப்படும்**

அனைவரும் வாரீர்!

# தரீக்குல் குர்ஆன்



## இல்யாஸ் ரியாஜி

**(நபியே) உம்மை நற்செய்தி கூறுபவராகவும் எச்சரிக்கை செய்பவராகவும் உண்மை (வேதம்)யுடன் நாம் அனுப்பியுள்ளோம். நரகவாசிகள் பற்றி நீர் வினவப்படமாட்டீர்.**

**(நபியே) நீர் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றும் வரை அவர்கள் உம்மைப் பற்றி திருப்தி அடையமாட்டார்கள். (எனினும்) "அல்லாஹ்வின் வழியே நேர் வழி" என்று கூறுவீராக. உமக்குத் தெளிவான விளக்கம் வந்த பின்னரும் அவர்களின் மனோ இச்சையை நீர் பின்பற்றினால் அல்லாஹ்விடமிருந்து உம்மைக் காப்பாற்றுபவனோ உதவி செய்பவனோ யாரும் இருக்கமாட்டார்கள்.**

**நாம் வேதம் வழங்கியவர்களில் யார் அதனை வாசிக்க வேண்டிய முறைப்படி வாசிக்கிறார்களோ அவர்கள் தாம் (இவ்வேதத்தை) இதை நம்புவார்கள். யார் இதை நம்பவில்லையோ அவர்களே இழப்புக்குரியவர்கள்.**

**(அல்பகரா : 119,120,121)**

**விளக்கங்கள்**

*இதற்கு முந்தைய வசனங்களில் அல்லாஹ்வின் மாண்பைச் சிதைக்கும் வகையில் அல்லாஹ்வுக்குப் பிள்ளைகள் உண்டு என்று அவதூறு கூறுவதில் யூதர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய வேதகார சமுதாயத்திலும் இணைவைப்பவர்களும் ஒரே விதமாக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தோம்.*

*அதற்கு இறைவன் தந்த பதிலையும் பார்த்தோம். அறிவுக்குப் பொருந்தாத வாதங்களை முன் வைப்பதில் இணைவைப்பவர்களைப் போலத்தான் வேதக்காரர்களும் இருக்கிறார்கள். எனவே இணைவைப்பவர்களை விட வேதக்காரர்கள் மேம்பட்டவர்கள் அல்ல என்று கூறப்பட்டிருந்தது.*

*ஷஹீது ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார். அவர்களின் பொய்வாதங்கள் முடிவுக்கு வந்துவிட்டன. தீய சொற்கள் அழிந்தன. அவர்களை அப்படிப் பேச வைத்த மர்மங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிட்டன.*

*எனவே இப்போது இவ்வசனங்கள் இறைத் தூதரை நோக்கித் திரும்புகின்றன. அவரின் பணி என்ன? அவரது பணியின்*

வரையறை எது? என்பதைச் சொல்வதோடு யூத, கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் இறைத் தூதருக்கும் இடையிலான பிரச்சனையின் அடிப்படை யதார்த்தம் என்ன என்பதையும் கூறுகின்றன.

அவர்களோடு இறைத்தூதருக்கு இருக்கும் முரண்பாடும் பிரச்சனையும் தீர வேண்டுமென்றால் அதற்கும் ஒரு விலை இருக்கிறது. அந்த விலையை இந்த இறைத்தூதரால் தந்திட இயலாது. தரமுடியாது. ஒரு வேளை அந்த விலையை அவர் தந்தால் அவரின் இறைவன் அவர் மீது கோபப்பட்டு விடுவான். அவ்வளவு பெரிய விலையை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். அது எப்படித் தந்திட முடியும்!

வசனம் 119ல் "நிச்சயமாக நாம் உம்மை உண்மை வேதத்துடன் அனுப்பினோம்" என்ற வார்த்தைகள் உள்ளன.

இவற்றில் ஓர் உறுதி இருக்கிறது. அது வழிகெட்ட சிந்தனையாளர்களின் சந்தேகங்களைத் தீர்க்கின்றது. தேடித் தேடிக் குழம்பியவர்களின் குழப்பத்துக்கு முடிவு கட்டுகிறது.

இவ்வார்த்தைகளை உச்சரிக்கும் போது வரும் ஓசையில் திட்டவட்டத்தையும் உறுதியையும் தெரிவிக்கும் தெளிவு இருக்கிறது.

"நற்செய்தி கூறுபவராகவும் எச்சரிக்கை செய்பவராகவும்" என்ற வார்த்தைகளில் நபி (ஸல்) வின் பணி வரையறுக்கப்படுகிறது.

பிரச்சாரமும் எடுத்துரைப்பதும் தான் உமது பணி. நல்லவர்களுக்கு நற்செய்தி கூறுவது தீயவர்களை எச்சரிப்பது இதைச் செய்து விட்டால் உமது பணி நிறைவடைந்து விட்டது என்று பொருள்.

"நரகவாசிகள் பற்றி நீர் வினவப்பட மாட்டீர்". அதாவது தமது பாவங்களால் அவர்கள் நரகம் போகிறார்கள். தங்களுக்குத் தாங்களே தேடிக் கொண்டவைகளால் நரகம் போகிறார்கள். அதற்காக நீங்கள் எப்படி வினவப்பட முடியும்? என்று பொருள்.

வசனம் 120ல் "நீங்கள் இந்த சத்திய மார்க்கத்தை விட்டு விலகி ஒரேடியாக தூரப் போய் அவர்களின் தீய, வழி கெட்ட இணைவைப்புக் கோட்பாட்டில் நீங்கள் புகுந்தால் மட்டுமே யூதர்களும் கிறிஸ்தவர்களும் உம்மை திருப்தியுடன் ஏற்பார்கள். அதுவரை உம்மிடம் அவர்கள் சமாதானமாக வரமாட்டார்கள். அதுவரை சதிகளையும் சூழ்ச்சிகளையும் செய்து கொண்டே இருப்பார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

ஆம், இதுவே அடிப்படையான காரணம்.

நபியே நீங்கள் அவர்களிடம் எவ்வளவு தான் உறவு பாராட்ட விரும்பினாலும் அன்பு காட்டினாலும் அவர்கள் பதிலுக்கு அன்போ உறவோ காட்டமாட்டார்கள். இதற்கு காரணம் நீங்கள் உங்களின் இறைவனிடமிருந்து கொண்டு வந்திருக்கும் சத்தியமார்க்கத்துக்குப் போதுமான சான்றுகளைக் காட்டவில்லை என்பதால் அல்ல.

மாறாக, நீங்கள் சத்திய மார்க்கத்தை கைவிட்டு அவர்களின் வழியை இன்னும் நீங்கள் பின்பற்றவில்லை என்பதே காரணம். ஆம் இதுவே அடிப்படைக் காரணம்.

இதை அவர்கள் ஒரு நிரந்தரக் கொள்கையாகவே வைத்திருக்கின்றனர். எல்லாக் காலகட்டங்களிலும் எல்லா நாடுகளிலும் (இடங்களிலும்) இதை அவர்கள் கடைப்பிடிப்பதை நாம் கான முடிகிறது. முஸ்லிம்களுக்கு எதிராக இதை யூத கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

இது ஒரு கொள்கைப் போர்க்களம். முஸ்லிம் போர்வீரர்களுக்கு எதிராக அவ்விரு அணிகளின் வீரர்களும் இதையே செய்கின்றனர்.

அந்த அணி (யூத, கிறிஸ்தவ அணி) தமக்கிடையே மோதிக் கொண்டாலும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்ப்பதற்கு ஒன்று சேர்ந்து விடுகின்றனர்.

உண்மையில் இது தெள்ளத் தெளிவான ஒரு கொள்கைப் போர்தான். ஆனால் இஸ்லாத்தை எதிர்க்கும் யூத, கிறிஸ்தவ அணியினர் இதைக் கொள்கைப் போர் என்று காட்டிக் கொள்வதில்லை.

ஏனென்றால் கொள்கைப் போர் என்று வெளிப்படையாகக் காட்டிக் கொண்டு யுத்தம் நடத்திய போதெல்லாம் இஸ்லாமியக் கொள்கை வீரர்கள் அதைத் தீரத்துடன் எதிர் கொண்டனர் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும்.

எனவே அவர்கள் வேறு பெயர் களுடன்தான் இஸ்லாத்துடனும் முஸ்லிம் களுடனும் மோதுகின்றனர்.

இரு நாடுகளுக்கிடையிலான மோதல் பொருளாதார மோதல், அரசியல் பிரச்சினை யினால் வந்த சண்டை ராணுவரீதியிலான பிரச்சனை என்று வெளியில் பெயர் கூறிக் கொள்கின்றனர்.

கொள்கை (மதம்) என்பதெல்லாம் பழங்கதை. அதற்கும் இந்தச் சண்டைக்கும் அறவே சம்பந்தமில்லை என்று கூறி ஏமாந்த அப்பாவி (முஸ்லிம்)களை நம்ப வைக்கின்றனர். மதக்கொடியைத் தூக்கிப் பிடிக்க வேண்டிய தேவை இப்போதென்ன இருக்கிறதென்று பிதற்றுகின்றனர்.

இப்படிப் பிதற்றி அதைப் பரப்பி நம்பவைத்த பிறகு சர்வதேச அளவில் யூத, கிறிஸ்தவ சக்திகள் கம்யூனிஸ்டுகளையும் சேர்த்துக் கொண்டு இஸ்லாத்தை எதிர்க்கின்றனர். அவர்களால் நீண்ட நெடுங்காலமாக முயன்றும் உடைக்க இயலாத பெரும் உறுதிமிக்க பாறையான இஸ்லாத்தை ஒன்று கூடி இடிக்க உடைக்க முயல்கின்றனர்.

ஆனால் நாம் தான் ஏமாந்து கொண்டிருக்கிறோம். அல்லாஹ் திட்டவட்டமாகச் சொல்லி விட்டான்.

“அவர்களின் மார்க்கத்தை நீங்கள் பின்பற்றும் வரை உம்மைப் பற்றி அவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள்” என்று.

ஆம், உங்களை திருப்திப்பட்டுக் கொள்ள அவர்கள் கேட்கும் விலை இதுதான். இதைத் தவிர வேறு எதையும் அவர்கள் ஏற்க மாட்டார்கள்.

எனினும் உறுதியானதொரு விஷயம் என்னவெனில் “நேர்வழி என்பது அல்லாஹ் வழி தான்”. ஆம் அதைத் தவிர வேறெதுவும் நேர் வழி அல்ல.

“நபியே, அவர்களின் மனோ இச்சையை நீங்கள் பின்பற்றினால்... தெளிவான ஞானம் வந்த பின்னரும் பின்பற்றினால் அல்லாஹ்விடமிருந்து உம்மைக் காப்பாற்றவோ, உமக்கு உதவி செய்திடவோ எவருமில்லை” என்றும் அல்லாஹ் கூறிவிட்டான்.

இந்த அச்சமூட்டும் எச்சரிக்கை யாருக்கு விடுக்கப்பட்டுளளது பார்த்தீர்களா?

அல்லாஹ்வின் நபி, திருத்தூதர் அவனின் அன்பர், சங்கை மிகு முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கே விடுக்கப்பட்டுள்ளது.

வேதக்காரர்களில் இப்படிக் கூடச் சிலர் உண்டு. அவர்கள் தம் இனத்தினரை விட்டுப் பிரிந்து அவர்களின் மனோ இச்சைகளை விட்டு விலகி வேத்தை முறைப்படி வாசிப்பவர்கள். இவர்கள் இந்த சத்திய மார்க்கத்தை நம்புவார்கள்.

இதை 121வது வசனத்தில் கூறும் அல்லாஹ் இறுதியில் இந்த சத்திய மார்க்கத்தை ஏற்க மறுப்பவர்தான் இழப்புக்குரியவர்கள் என்கிறான்.

ஆம் உண்மைதான். ஈமான் எனும் இறை நம்பிக்கையை இழந்த பின்னால் அதைவிட பெரிய இழப்பு வேறென்ன இருக்க முடியும்? எனவே இவர்களே இழப்புக்குரியவர்கள்.

நபியே, நீங்களோ உங்களை நம்பிக்கை கொண்ட நம்பிக்கை யாளர்களோ இழப்புக்குரியவர்களல்ல.

ஏற்க மறுப்போரே இழப்பாளிகள்.

**(நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)**

**தொடரும்**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.